REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2024 ஜூலை 2 செவ்வாய்க்கிழமை
தினகரன்
THINAKARAN
92 ANNIVERSARY
வரு. 92 இல. 156 | Tuesday 02, July, 2024 | 16 பக்கங்கள் | 50/-




# இரா. சம்பந்தனின் மறைவுக்கு அரசியல் தலைவர்கள் இரங்கல்



**இன்று காலை 09 மணிமுதல் பொரளையில் அஞ்சலி**

**புதன்கிழமை பாராளுமன்றத்தில் அஞ்சலி**

**இறுதிக் கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை திருகோணமலையில்**

லோரன்ஸ் செல்வநாயகம்

இலங்கை தமிழரசுக் கட்சியின் பெருந் தலைவரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான பாராளுமன்ற உறுப்பினர் ராஜவரோதயன் சம்பந்தன் தனது 91 ஆவது வயதில் நேற்று முன்தினம் கொழும்பில் காலமானார்.

சுகவீனம் காரணமாக கொழும்பிலுள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த இவர், நேற்று முன்தினம் இரவு 11.00 மணியளவில் காலமானார். பாராளுமன்ற உறுப்பினரான சம்பந்தன் மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை திருகோணமலையில் நடைபெறவுள்ளது. 06

## பிளவுகளைக் குறைக்க அயராது உழைத்தவர் இரா. சம்பந்தன்



இலங்கை தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவரான இரா. சம்பந்தனின் மறைவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனுதாபம் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளதாவது: இரா. சம்பந்தனின் மறைவுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு தேசியத் 06

## சம்பந்தனின் நினைவுகள் என்றுமே போற்றத்தக்கவை



இலங்கை தமிழர்களின் அமைதி, பாதுகாப்பு, சமத்துவம், நீதி மற்றும் கண்ணியம் என்பவற்றுக்காக இந்தியாவை தொடர்ந்தும் வலியுறுத்திய தலைவர் சம்பந்தன் என, இந்திய பிரதமர் மோடி அனுதாபம் தெரிவித்துள்ளார்.

சம்பந்தனின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துள்ள இந்திய பிரதமர் மோடி குறிப்பிட்டதாவது:

இலங்கையிலும் இந்தியாவிலும் உள்ள அவரது நண்பர்கள் மற்றும் அவரை 06

# பொருளாதார நெருக்கடி, கொவிட் சூழ்நிலையால் வழங்கப்படாதிருந்த

# ஒப்பந்தக்காரர்களது நிலுவை 200 பில். ரூபாவை வழங்கிய அரசு

**முழுமையாக நிறைவு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு**

லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டின் பொருளாதார நெருக்கடி மற்றும் கொவிட் பரவல் சூழ்நிலை காரணமாக ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்க முடியாமலிருந்த 200 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நிதியை, அரசாங்கம் வழங்கி நிறைவு செய்துள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அதேவேளை, தொழில்நுட்ப காரணங்களால் வழங்க முடியாமலிருந்த ஒப்பந்தக்காரர்களுக்கான பற்றுச்சீட்டையும் விரைவில் வழங்கி, நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அமைச்சர்;



நாட்டின் தேசிய உற்பத்தித் துறைக்கு நிர்மாணத் துறையானது 8வீதம் முதல் 9 வீத பங்களிப்பை வழங்கி வருகிறது. அத்துடன் நாட்டின் சனத்தொகையில் 20 வீதமானோர் நிர்மாணத்துறை சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

நாட்டின் பொருளாதார நெருக்கடி மற்றும் கொவிட் பரவல் காரணமாக வீழ்ச்சியடைந்திருந்த நிர்மாணத் துறை செயற்பாடுகளை, மீண்டும் கட்டியெழுப்புவதற்கு தேவையான நடவடிக்கைகளை ஆராய்வதற்காக ஜனாதிபதியின் ஆலோசனையின் கீழ் ஐந்து குழுக்கள் நியமிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டன.

அரச அதிகாரிகள், நிர்மாணத் துறை நிபுணர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களும் அந்த குழுவில் 06

## சகோதரத்துவத்தை இழந்த உணர்வில் இருக்கிறேன்



தமிழரசுக்கட்சியின் மூத்த தலைவரான இரா. சம்பந்தனுடனான உறவின்போது, பல்வேறு விடயங்களை கலந்துரையாடக் கிடைத்ததாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அனுதாபம் தெரிவித்துள்ளார். அன்னாரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துள்ள மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளதாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர். சம்பந்தனின் மறைவுக்கு எனது ஆழ்ந்த 06

## சம்பந்தனின் அர்ப்பணிப்புக்கள் கலங்கரை விளக்கமாக திகழ்ந்தது



இலங்கையர் சகலருக்கும் சம உரிமை வழங்குவதற்காக சம்பந்தன் எடுத்துக்கொண்ட அர்ப்பணிப்புக்கள் நம்பிக்கையின் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்ததாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துள்ள அவர், தனது செய்தியில் தெரிவித்துள்ளதாவது; 06



03 **ஜனாதிபதியின் திட்டத்தை கைவிடின் மீண்டும் விழ நேரிடும்**

நீடிக்கப்பட்ட கடன் ஒப்பந்தத்தால் நன்மை

கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தல்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று பாராளுமன்றத்தில் விசேட உரை

லோரன்ஸ் செல்வநாயகம்

கடன் மறு சீரமைப்பு உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று பாராளுமன்றத்தில் 06





03 **பொலிஸ் மா அதிபர் விடுத்துள்ள உத்தரவு**

## உள்ளக பயிற்சியை ஆரம்பிக்க வைத்தியர்களுக்கு கடிதங்கள்

**ஒரு வருட பயிற்சியின் பின்னர் நியமனங்கள்**

மனித வளத்தை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டத்தின் கீழ், 475 புதிய வைத்தியர்களுக்கு உள்ளகப் பயிற்சியை ஆரம்பிப்பதற்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன. 06



## அரச நிர்வாக சேவை அதிகாரிகளுக்கான ரூபா 25,000 விசேட கொடுப்பனவு அமுல்

**அரச திணைக்களங்களின் தலைவர்களுக்கு கடிதங்கள்**

லோரன்ஸ் செல்வநாயகம்

அரச நிர்வாக சேவை அதிகாரிகளுக்கு நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில், 25,000 ரூபாவை விசேட மாதாந்த கொடுப்பனவாக வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. 06



## குறைக்கப்பட்ட பஸ் கட்டணங்கள் நேற்று நள்ளிரவு முதல் அமுலாகின

லோரன்ஸ் செல்வநாயகம்



பஸ் கட்டணங்கள் நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில், ஐந்து வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளன.

வருடாந்தம் மேற்கொள்ளப்படும் பஸ் கட்டண திருத்தம் 06



03 **இலவசக் கல்வியின் அவசியத்துக்காக ராஜபக்ஷக்கள் அரும்பாடு பட்டனர்**

## நீதிமன்ற தீர்ப்பை மதித்து தோட்ட தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிக்க வேண்டும்



பெருந்தோட்ட நிறுவனங்களின் இணக்கப்பாட்டின் அடிப்படையில், தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை அதிகரிக்க முன்வர வேண்டுமென, பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்தார். 06

## பிணையில் விடுவிக்கக் கோரும் ஹிருணிகாவின் மனு ஒத்திவைப்பு



லோரன்ஸ் செல்வநாயகம்

சிறைத்தண்டனை அனுபவித்து வரும் கொழும்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர, தம்மை பிணையில் விடுவிக்குமாறு கோரி தாக்கல் செய்துள்ள மனுவை, ஜூலை 04 இல், பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

டிபெண்டர் வாகனத்தை பயன்படுத்தி இளைஞர் ஒருவரைக் கடத்திச் சென்ற வழக்கில், ஹிருணிக்கா பிரேமச்சந்திரவுக்கு மூன்று ஆண்டுகள் 06

## கடனை செலுத்த காலஅவகாசம் வழங்கப்பட்டதால் நாட்டுக்கே நன்மை



வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு மூலம் நாட்டுக்கு முழுமையான அனுகூலம் கிடைக்குமென, நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். இதுபற்றி அவர் தெரிவித்துள்ளதாவது;

கடன் மறுசீரமைப்பால் எமது நாட்டுக்கு எந்த நன்மையும் ஏற்படவில்லை எனச் சிலர் குறிப்பிட்டுள்ளனர். ஆனால், கடனை மீளச் செலுத்துவதற்கான காலத்தை நீடித்தமை, வட்டி வீதத்தைக் 06

## சம்பந்தனின் வெற்றிடத்திற்கு குகதாசன் நியமனம்

லோரன்ஸ் செல்வநாயகம்



தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தனின் மறைவினால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்திற்கு, தமிழ் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர் கதிரவேல் சண்முகம் குகதாசன் நியமிக்கப்படவுள்ளார்.

சண்முகம் குகதாசன் கடந்த பொதுத் தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பில், திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிட்டு 16,770 வாக்குகளை பெற்றிருந்தார்.

அந்த வகையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் 06

# நகர்வலம்



## ரூ. 49 ஆயிரம் மில்லியன் செலவில்

# வட மத்திய மாகாணத்தில் சுரங்கப்பாதை அமைப்பு

## தண்ணீரை கொண்டு செல்லவும் நடவடிக்கை



**திறப்பனை தினகரன் நிருபர்**

மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படும் வட மத்திய மாகாண பெரிய கால்வாய்த் திட்டத்தின் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. 96 கி.மீ. நீளம் கொண்ட கால்வாயின் பலுகஸ்வெவ மற்றும் மஹமிகஸ்வெவ பகுதிகளில், மலைப்பாங்கான இடங்கள் இருப்பதால் முழு கால்வாயிலிருந்தும் 28 கிலோமீற்றர் தூரத்திற்கு சுரங்கப்பாதை மூலம் தண்ணீரை கொண்டு செல்ல திட்டமிடப்பட்டுள்ளது. இது தெற்காசியாவின் மிக நீளமான சுரங்க கால்வாய் ஆகும். இச் சுரங்கப்பாதையை அமைப்பதற்காக 49,000 மில்லியன் ரூபாய் செலவிடப்படவுள்ளது. தற்போது நிர்மாணிக்கப்பட்டு வரும் சுரங்கப்பாதையின் முன்னேற்றம் குறித்து கேட்டறிந்து கொள்ளும் களப்பயணம் அநுராதபுரம் மாவட்ட செயலாளர் ஜனக ஜயசுந்தர தலைமையில் குழுவினரொன்று அண்மையில் அங்குகள விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர். தியபெதும பிரதேசத்தில் இருந்து ஹபரணை நோக்கிய சுரங்கப்பாதையின் 02 கிலோமீற்றர் தூரம், மஹமிகஸ்வெவ பிரதேசத்தில் இருந்து சீகிரியா நோக்கிய 08 கிலோமீற்றர் வேலைகள் இதுவரை பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

சுரங்கப்பாதை உட்பட வட மத்திய பெரிய கால்வாய் திட்டம் முழுவதுமாக நிறைவடைந்ததன் பின்னர் மஹகனதரவ, பதவிய, வாஹல்கட, யாங் ஓயா ஆகிய நீர்த்தேக்கங்களின் கீழ் குடிநீர் வழங்குவதற்கான வாய்ப்பு உருவாக்கப்படும். அத்துடன் உத்தேச அணைக்கட்டின் கீழ் 3000 ஹெக்டேயர் காணிகளுக்கு நீர்பாசன வசதிகள் வழங்கப்படவுள்ளன. யானை மனித மோதலை குறைக்கும் நோக்கில் வன காப்பகங்களை நிறுவவும் கால் நடை வளர்ப்பு மற்றும் சுற்றுலாத் துறைக்கான வாய்ப்பும் இதன் கீழ் உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதுவரையில் சுமார் 32 வீதமான சுரங்கப்பாதையின் நிர்மாணப்பணிகள் நிறைவடைந்துள்ளதோடு மார்ச் 2026 க்குள் சுரங்கப்பாதையின் முழு கட்டுமானப் பணிகளையும் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. சுரங்கப்பாதை அமைக்கும் பணியில் சுமார் 800 தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

களப்பயணத்தில் மேலதிக மாவட்ட செயலாளர் சந்தியா அபேசேகர, பலுகஸ்வெவ பிரதேச செயலாளர் ஐ.ஜி. ஆர்.எஸ்.ஐ. பண்டார மற்றும் மாவட்ட செயலக அதிகாரிகள் குழுவும் இணைந்து கொண்டிருந்தனர்.

# கடவுச்சீட்டுக்களின் செல்லுபடியாகும் காலம் ஒரு வருடத்திற்கு நீடிப்பு

## குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



வெளிநாட்டு கடவுச்சீட்டுக்களின் செல்லுபடியாகும் காலம் மேலும் ஒரு வருடத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில் நேற்று (01) முதல் காலாவதியாகவுள்ள வெளிநாட்டு கடவுச்சீட்டுகளின் செல்லுபடியாகும் காலம் இவ்வாறு ஒரு வருடத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளதாக அந்த திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரிவித்துள்ளார்.

அதேவேளை, எதிர்வரும் நவம்பர் மாதம் முதல் கடவுச்சீட்டுகளில் மாற்றம் ஏற்படவுள்ளதுடன் அதற்கிணங்க இலத்திரனியல் கடவுச்சீட்டுக்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த இலத்திரனியல் கடவுச்சீட்டு வழங்கும் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு வசதியாகவே நேற்று முதல் காலாவதியாகும் கடவுச் சீட்டுக்களின் செல்லுபடியாகும் காலத்தை ஒரு வருடத்திற்கு நீடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பாடசாலைக்கு உதவுவதாக கலாநிதி ஜனகன் உறுதி



கொழும்பு கொட்டாஞ்சேனை வுல்வெண்டால் பெண்கள் உயர்தர பாடசாலைக்கு அதிபரின் அழைப்பின் பேரில் அண்மையில் விஜயம் செய்த ஐ டி எம் என் சி (IDMNC) சர்வதேச உயர் கல்வி நிறுவனத்தின் தவிசாளரும் ஜனனம் அறக்கட்டளையின் தலைவருமான கலாநிதி வி. ஜனகன் அங்கு இடம்பெற்ற நிகழ்வில் கலந்து சிறப்பித்தார்.

மேலும் அவர், அப் பாடசாலையில் உள்ள குறைபாடுகளை நேரடியாக பார்வையிட்டதுடன் ஜனனம் அறக்கட்டளையின் கல்விக்கு கரம் கொடுப்போம் செயற்திட்டத்தின் ஊடாக முடியுமான உதவிகளை வழங்குவேன் என்றும் இதன் போது உறுதியளித்தார். இதன்போது ஜனனம் அறக்கட்டளையின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

# இஸ்லாமிய கீத போட்டியில் அஹமட் நஷீத் முதலிடம்

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**



புத்தளம் வேப்பமடு முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் 6 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவன் அப்ரின் அஹமட் நஷீத் இஸ்லாமிய கீத போட்டி நிகழ்ச்சியில் மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இஸ்லாமிய கலை, கலாசார, மாகாண மட்ட போட்டி நிகழ்ச்சிகள் நேற்று முன்தினம் (30) குருநாகல் ஹிஸ்புல்லாஹ் முஸ்லிம் மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

இதன்போதே குறித்த மாணவன் பல பாடசாலைகளையும் சேர்ந்த மாணவர்கள் மத்தியில் தனது திறமையை வெளிக்காட்டி இஸ்லாமிய கீதம் போட்டியில் முதலிடத்தைப் பெற்று பாடசாலைக்கும், ஊருக்கும் பெருமை சேர்த்துள்ளார். இவர், புத்தளம் வேப்பமடுவைச் சேர்ந்த முஹம்மது றகீப் மற்றும் எம்.எஸ்.பஹ்மியா ஆசிரியை ஆகியோரின் செல்வப் புதல்வராவார்.

# திருக்கோணேஸ்வரம் ஆலய அருகில் கசிப்பு விற்பனை; சந்தேக நபர் கைது

## ஆளுநர் செந்திலின் தலையீட்டால் கடை சீல்வைப்பு

வரலாற்றுச் சிறப்புமிக்க திருக்கோணேஸ்வரம் ஆலயத்திற்கு அருகில் உள்ள பெட்டிக் கடையில் கசிப்பு விற்பனை செய்யப்படுவதாகவும் அது தொடர்பில் உடன் நடவடிக்கை எடுக்குமாறும் ஆறு திருமுருகன் ஐயா விடுத்த வேண்டுகோளை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் கவனத்திற்கு உமாச்சந்திரா பிரகாஷ் கொண்டு சென்றதைத் தொடர்ந்து, அவ்விடயம் தொடர்பில் அவர் உடனடியாக நடவடிக்கை எடுத்து, குறித்த பெட்டிக்கடை மூடி சீல் வைக்கப்பட்டதாக நேற்று அறிவித்துள்ளார்.

இந்துக்களின் புனித பூமியான திருக்கோணேஸ்வர ஆலய வளாகத்தில் கசிப்பு விற்ற மாற்று இனத்தவர், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தலையீட்டால் கடந்த வாரம் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் ஆலய வளாகத்தில் கசிப்பு விற்றுவந்த நிலையில், பொலிசாரால் கைது செய்யப்பட்டு, 4000 ரூபாய் தண்டப் பணம் விதிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டிருந்தார்.

மீண்டும் அவர் திருக்கோணேச்சர ஆலய வளாகத்திற்கு திரும்பியதையடுத்து கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கவனத்திற்கு ஆலய நிர்வாகத்தினர் மற்றும் பொதுமக்கள் கொண்டுவந்ததை அடுத்து, ஆளுநரின் தலையீட்டில் திருகோணமலை நகரசபை செயலாளர், தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் உட்பட பொலிஸார் திருக்கோணேச்சர ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த கடைக்கு உடனடியாக சீல் வைத்ததுடன், குறித்த நபரை அவ் வளாகத்தில் இருந்து வெளியேற்றினர்.



ஆளுநரின் இந்த அதிரடி நடவடிக்கைக்கு பொதுமக்கள் பாராட்டுக்களையும் தெரிவித்தனர்.

# வாகன விபத்தில் மூவர் படுகாயம்

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

அநுராதபுரம் கலென்பிந்துனுவெவ பிரதான வீதியில் அஸ்வயா பெத்திவெவ மயானத்திற்கு அருகாமையில் (29) காலை இடம்பெற்ற வாகன விபத்தில் மூவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். வீதியில் பயணித்த லொறியின் சக்கர மொன்றில் காத்து வெளியேறி சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகிக் கவிழ்ந்ததில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின் போது லொறியில் பயணித்த மூவரும் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# குவைத் நிதியுதவியில் நாச்சியாதீவு முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கு கட்டடம்

**திறப்பனை தினகரன் நிருபர்**

குவைத் அரசாங்கத்தின் நிதி உதவி திட்டத்தின் கீழ் அல்ஹிமா சமூக சேவை அமைப்பின் ஊடாக அநுராதபுரம் கல்வி வலய பிரிவுக்குட்பட்ட நாச்சியாதீவு முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கு இரண்டு மாடிகளைக் கொண்ட கட்டடம் ஒன்றை அமைத்துக் கொடுப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வுகள் பாடசாலை அதிபர் ரொஹான் ஆப்தீன் தலைமையில் அண்மையில் பாடசாலை வளாகத்தில் பெற்றோர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் நலன் விரும்பிகளின் பூரண பங்களிப்புடன் நடைபெற்றது.

இந் நிகழ்வில் அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான், குவைத் நாட்டு இலங்கை தூதுவரின் பிரதிநிதி பிர்தௌஸ் (நளீமி ,அல் ஹிமா சமூக சேவைகள் நிறுவனத்தின் இலங்கை பணிப்பாளர் நூருல்லாஹ் (நளீமி), ஜாமிஆ நளீமிய்யாவின் சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் எஸ்.எச்.எம்.பளீல் (நளீமி) உட்பட முக்கிய பிரமுகர்கள் கலந்து சிறப்பித்தனர்.



இந்நிகழ்வில் பெருந்திரளான பொது மக்கள் மற்றும் பெற்றோர் நலன் விரும்பிகள் கலந்து கொண்டனர்.

## அஷ்ரஃப் சிஹாப்தீனின்

# 'சுவர்களில் உருவாகும் சுவர்க்கங்கள்' கவிதை நூல் வெளியீடு கொழும்பில்

பன்னூலாசிரியரும் ஒலி, ஒளிபரப்பாளருமான அஷ்ரப் சிஹாப்தீனின் 'சுவர்களில் உருவாகும் சுவர்க்கங்கள்' கவிதைத் தொகுதி வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் 07ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பி.ப. 4.00 மணிக்கு கொழும்பு 09, தெமடகொட வீதி, வை.எம்.எம்.ஏ. மண்டபத்தில் வகவம் தலைவர் கவிமணி என். நஜ்முல் ஹுஸைன் தலைமையில் நடைபெறவுள்ளது.



நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் வர்த்தக, வாணிப அமைச்சரும் அ.இ.ம.கா. தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன், விசேட அதிதியாக மீன்பிடித்துறை அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி அனுஷா கோகுல பெர்னாண்டோவும் கலந்து கொள்ளவுள்ளனர். கௌரவ அதிதிகளாக சி.பி.எம். ஷியாம் (ரூபவாஹினி கூ.தா), எம்.எச்.எம். அன்ஸார் (மாஷா பில்டர்ஸ்), எம்.என்.எம், பிஷ்ருல் அமீன் (சட்டத்தரணி), எஸ். ஆர். எம்.எம். இர்ஷாத் (தகிரேட் இன்டியா செய்தித் தளம்), ரகு இந்திரகுமார் (பிஸ்னஸ் வேர்ள்ட் இன்டர்நெஷனல்), மொஹமட் மில்ஹான் (ஜப்பான் லங்கா என்டர்பிரைஸஸ்), கவிஞர் நாச்சியாதீவு பர்வீன், திருமதி சப்ரின் ரின்ஸா (சக்ஸஸ் குறுப் ஒப் கொலேஜ்) செல்வி, டீன் நூர் கனி (ரவ்ளத் அத்பால் இன்டர்நெஷனல்) ஆகியோர் பங்கு கொள்ளவுள்ளனர்.

வரவேற்புரையை கவிஞர் சிமாரா அலியும் வாழ்த்துரையை மாத்தளை எம்.எம். பீர் முகம்மதுவும் வழங்கவுள்ளனர்.

நூல் பற்றிய உரைகளை எழுத்தாளர் பூர்ணிமா கருணாகரன், கவிஞர் எஸ். ஏ.சி.பி. மரிக்கார் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். நிகழ்ச்சி தொகுப்பு திருமதி ஆஷிகா பர்ஸான். வெளியீட்டு நிகழ்வுக்கான ஏற்பாடுகளை இலங்கை நெய்னார் சமூக நலக் காப்பகத்தின் தலைவர் இம்ரான் நெய்னார் மேற்கொண்டு வருகிறார்.




# ஹொரேதுடுவ மு. வித்தியாலயத்திற்கு புதிய திறன் வகுப்பறை கட்டடம்

## சஞ்ஜீவ எதிரிமான்ன எம்.பி நிதியுதவி

**(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)**

பாணந்துறை, ஹொரேதுடுவ முஸ்லிம் வித்தியாலய கல்வி அபிவிருத்தி மேம்பாட்டுக்காக களுத்துறை மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரின் நிதி ஒதுக்கீட்டில் பாடசாலையில் திறன் வகுப்பறையொன்று அமைக்கப்படவுள்ளது.

பாடசாலையின் கல்வி ஆர்வலர் எம்.ஆர்.எம். மீஷாத்தின் பரிந்துரையின் பேரில் களுத்துறை மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சஞ்ஜீவ எதிரிமான்ன மேற்படி வேலைத் திட்டத்துக்கு பதினொரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளார்.

இது தொடர்பிலான வைபவம் அதிபர் எஸ்.எச். முத்தலிப் தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது. மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவர் பாடசாலை சமூகத்தின் சார்பில் சிறப்பு வரவேற்பளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். நிதி ஒதுக்கீட்டின் அடையாளமாக மாதிரி காசோலை பாராளுமன்ற உறுப்பினரினால் அதிபரிடம் கையளித்து வைக்கப்பட்டது. பிரமுகர்கள் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# நீரில் மூழ்கிய அறுவர் உயிருடன் மீட்பு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

கடந்த வாரம் அநுராதபுரம் வாவிகளில் நீராடச் சென்று நீரில் மூழ்கிய ஆறு உயிர்களை காப்பாற்ற முடிந்துள்ளதாக இலங்கை உயிர் காப்பு பிரிவினர் தெரிவித்தனர். வசவாக்குளத்தில் நால்வரும் திசாவெவயில் ஒருவரும் நுவரவாவியில் ஒருவருமே இவ்வாறு காப்பாற்றப்பட்டுள்ளனர்.

பொசன் பௌர்ணமி தினத்திற்கு பின்னரான வாரத்திலேயே ஆறு உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளதாக சங்கத்தின் பிரதான ஆலோசகர் தெரிவித்தார்.

குறித்த வாவியில் அதிகமான உயிர் காப்பு பிரிவினர் ஈடுபடுத்தப்பட்டிருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.



# இலவச கல்வியின் அவசியத்துக்காக ராஜபக்ஷக்கள் அரும்பாடு பட்டனர்

இலவசக் கல்வி மூலம் உயர்தர நிலைக்குச் சென்றவர்களுக்கு தற்போது அது நினைவில் இல்லை என, பிரதமர் தினேஷ்குணவர்தன தெரிவித்தார்.

லுணுகம்வெஹர பிரதேச செயலகத்தின் புதிய மூன்று மாடிக் கட்டிடடத்தை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வில் பிரதமர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இங்கு பேசிய பிரதமர் தெரிவித்ததாவது:

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் சமல் ராஜபக்ச ஆகியோரின் தந்தையான டி.ஏ.ராஜபக்ஷ ஹம்பாந்தோட்டை மக்களை எமது நாட்டில் மாபெரும் புரட்சிக்கு கொண்டு வந்தார்.நாட்டில் அசைக்க முடியாத வாக்குகளைப் பயன்படுத்திய பாராளுமன்ற உறுப்பினர்.

இலவசக் கல்வி வேண்டுமா, வேண்டாமா என்ற கேள்வி எழுந்த போது, டி.ஏ. ராஜபக்ஷ இலவசக் கல்விக்கே வாக்களித்தார். அன்று இந்த சட்டம் ஒரு வாக்கினாலேயே நிறைவேற்றப்பட்டது. இதுதோல்வி அடைந்திருந்தால் நாட்டில் இலவச கல்விக்கான உரிமை கிடைத்திருக்காது.

06



சுற்றுச்சூழலுக்குப் பங்களிக்கும் சிறந்த அரசு நிறுவனம்' என்ற தங்க விருதை பசுமைப் பல்கலைக்கழகம் பெற்றுள்ளது. இதுதொடர்பான நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த விருதை வழங்கினார். பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

# ஜனாதிபதியின் திட்டத்தை தவிர வேறு திட்டங்களை அமுலாக்கினால் வீழ நேரிடும்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் தற்போதைய அரசாங்கம் முன்னெடுக்கும் பொருளாதார வேலைத்திட்டத்திற்குப் புறம்பாக செயற்பட எவரேனும் கனவு கண்டால், நாடு மீண்டும் வீழ்ச்சியடைவதைத் தடுக்க முடியாது என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (01) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அமைச்சர் பந்துல குணவர்தன இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் பந்துல குணவர்தன :



ஜனாதிபதியின் பொருளாதார வேலைத்திட்டத்தை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு சகல பிரஜைகளதும் ஆதரவும் கிடைக்க வேண்டிய தருணம் இது.

கடந்த காலங்களில் திறைசேரியில் டொலர் கையிருப்பு இருக்கவில்லை.

நாடு கடனை திருப்பிச் செலுத்த முடியவில்லை. எரிபொருள் மற்றும் எரிவாயுக்கு வரிசைகள் உருவாகின. இதனால், நாடு முழுவதும் போராட்டங்கள் ஏற்பட்டன.

நாட்டைப் பொறுப்பேற்க எவரும் முன்வராத வேளையில்,ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சவாலை ஏற்று நாட்டை ஸ்திரப்படுத்தினார்.

அவர் செய்த முதல் விடயம், சர்வதேச நாணய நிதியத்திற்குச் சென்று நீடிக்கப்பட்ட கடன் ஒப்பந்தத்தை ஏற்படுத்தியதே . அதனை வெற்றியடையச் செய்ய பெரும் முயற்சிகளை மேற்கொண்டார்.

இதற்கு முன்னர் 16 தடவைகள் சர்வதேச நாணய நிதியத்திற்குச் சென்றிருந்ததால், இம்முறை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தனிப்பட்ட முறையில் கடன் வசதியைப் பெற்றுக்கொள்வதற்கு மிகவும் கடுமையான முயற்சிகளில் ஈடுபட வேண்டியிருந்தது. இதன் விளைவாக, 2027 ஆம் ஆண்டு வரை சர்வதேச நாணய நிதியத்துடன் நீடிக்கப்பட்ட கடன் ஒப்பந்தத்திற்குச் செல்ல முடிந்தது. சர்வதேச நாணய நிதியத்தின் கடன் ஒப்பந்தத்தின் பின்னரே, நாடு சுவாசிக்கத் தொடங்கியது எனலாம்.

# இரா. சம்பந்தன் மறைவு துயரைத் தருகின்றது

## அமைச்சர் டக்ளஸ் அனுதாபம்



தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் இரா. சம்பந்தன் அவர்கள் வயதில் எமக்கு மூத்தவர். கொள்கை வேறு, கோட்டை வேறாக இருப்பினும் அரசியல் தளத்தில் எம்முடனும் சமகாலத்தில் பயணித்தவர். முரண்பாடுகள் இருப்பினும் காணும் பொழுதுகளில் அரசியல் நிலைமைகள் குறித்து கலந்துரையாடுவதுண்டு.

இவ்வாறு இரா. சம்பந்தன் அவர்களின் மறைவு குறித்து அனுதாபம் வெளியிட்டுள்ள ஈ.பி.டி.பி செயலாளர் நாயகமும், கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

வயது மூப்பின் காரணமாக அவர் மரணித்து விட்ட செய்தி துயரைத் தந்துள்ளது.

அவரது இழப்பில் துயருறும் சகலருக்கும் ஆறுதல் கூறுகின்றேன். அவருக்கு அஞ்சலி மரியாதை செலுத்துகின்றேன்' என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

# பொலிஸ் மாஅதிபர் விடுத்துள்ள உத்தரவு

போதைப்பொருள் வலையமைப்பை முறியடிக்கும் நடவடிக்கை தொடர்பில், பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதன்படி, போதைக்கு அடிமையானவர்களின் எண்ணிக்கை குறித்து அறிக்கை தயாரிக்க பொலிஸ் பிரிவு



மட்டத்திலுள்ள ஒவ்வொரு கிராம அதிகாரிகளையும் தொடர்பு கொள்ளுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

பொலிஸ் நிலைய அதிகாரிகள் மற்றும் பிரதேச மட்டத்திலுள்ள கிராம உத்தியோகத்தர்களை தொடர்பு கொண்டு, இந்த அறிக்கை தயாரிக்கப்படவுள்ளது.

06

# டெவோன்– 5 கப்பலில் பயணித்து உயிர் தப்பியவருக்கு சிகிச்சை

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

கடலில் மிதந்த போத்தலிலுள்ள திரவத்தை அருந்தியதால் உயிர் பிழைத்த ஒருவர் நேற்று நாட்டுக்கு அழைத்து வரப்பட்டார்.கடற்படையின் விஜயபாகு கப்பல் மூலம் ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு அழைத்து வரப்பட்ட இவருக்கு சிகிச்சையளிக்கப்படுகிறது.


அவரது உடல்நிலை கவலைக்கிடமானதாக இல்லை என தெரிவித்த கடற்படையினர், ஹம்பாந்தோட்டை அரசாங்க வைத்தியசாலையில் இவருக்கு சிகிச்சை அளிக்கப்படுவதாகவும் தெரிவித்தனர்.

தங்காலை மீன்பிடி துறைமுகத்திலிருந்து சர்வதேச கடற்பரப்புக்கு கடந்த (06) ஆறு மீனவர்களுடன் ஆழ்கடல் மீன் பிடிக் கப்பலான Devon 5 கப்பல் சென்றது.

06

# தமிழ் – முஸ்லிம் உறவின் இணைப்பு பாலமாக விளங்கிய ஆளுமை சம்பந்தன்

தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கிடையிலான உறவின் இணைப்பு பாலமாக விளங்கிய மூத்த அரசியல் ஆளுமை இரா. சம்பந்தன் என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் ,பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.அன்னாரின் மறைவு குறித்து ரவூப்ஹக்கீம் எம்பி,தெரிவித்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளதாவது;



புரையோடிப் போயுள்ள தேசிய இனப் பிரச்சினையில் குறிப்பாக தமிழ் மக்களுக்கும் பொதுவாக சிறுபான்மைச் சமூகங்களுக்கும் உச்சபட்ச அரசியல் தீர்வை பெற்றுக் கொடுப்பதற்காக தனது வாழ்நாள் பூராவும் அயராது பாடுபட்ட அரசியல் ஆளுமை சம்பந்தன் ஐயா. அவரின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைந்தேன்.

தந்தை செல்வாவின் அரசியல் பாசறையில் வளர்ந்து, இலங்கை தமிழரசுக் கட்சியின் ஊடாக பாராளுமன்றத்தில் பிரவேசித்து,வெவ்வேறு சந்தர்ப்பங்களில் திருகோணமலையைப் பிரதிநிதித்துவப்படுத்தி

06

# கந்தசாமி கருணாகரனின் இறுதிக்கிரியை


மாங்குளத்தில் அண்மையில் இடம்பெற்ற விபத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 48 வயதான கந்தசாமி கருணாகரன் உயிரிழந்தார்.



யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில், இவர் சிகிச்சை பலனின்றி கடந்த சனிக்கிழமை உயிரிழந்தார்.

தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்கத்துக்கான செயலகத்தின் பணிப்பாளர் சபை பிரதிநிதியாக கந்தசாமி கருணாகரன் செயற்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த பேருந்து, திருத்த வேலை காரணமாக வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் பேருந்து மீது வீதியில் பயணித்த பார ஊர்தி மோதியதினால் விபத்து இடம்பெற்றது. இதில் காயமடைந்த இவர்,சிகிச்சை பலனின்றி உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.இவரது இறுதிக்கிரியைகள் நேற்று இடம்பெற்றன.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆனி மாதம் 18ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 துல்ஹிஜ்ஜஹ் பிறை 25

### குறள் தரும் சிந்தனை



எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு

ஏழேழு தலைமுறைக்கு என்றும் ஏழேழு பிறவிக்கு என்றும் மிகைப்படுத்திச் சொல்வதுபோல, ஒருவருடைய துன்பத்தைப் போக்கியவரின் தூய்மையான நட்பை நினைத்துப் போற்றுவதற்குக் கால எல்லையே கிடையாது.

## விலைக்குறைப்புகளின் பலன்கள் மக்களுக்கு கிடைப்பது அவசியம்

பொருளாதார நெருக்கடிக்கு உள்ளான இலங்கை கட்டம் கட்டமாக மீட்சி பெற்று நம்பிக்கை தரும் வகையில் மறுமலர்ச்சிப் பாதையில் பிரவேசித்து இருக்கிறது. இதற்கு பொருளாதார நெருக்கடி நிலவிய காலப்பகுதியில் நாடும் மக்களும் முகம் கொடுத்துள்ள நெருக்கடிகளும் அசௌகரியங்களும் நீங்கியுள்ளமை நல்ல எடுத்துக்காட்டாகும்.

2022 ஆம் ஆண்டின் ஆரம்பப்பகுதியில் அந்நியச் செலாவணிப் பற்றாக்குறையின் விளைவாக ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியினால் மக்கள் பல விதமான நெருக்கடிகளுக்கும் பாதிப்புகளுக்கும் முகம் கொடுத்தார்கள். அக்காலப்பகுதியில் முகம் கொடுத்த நெருக்கடிகளும் அசௌகரியங்களும் இலகுவில் மறக்கக்கூடியவை அல்ல என்பது தான் மக்களின் கருத்தாக உள்ளது.

அப்பொருளாதார வீழ்ச்சியில் இருந்து நாட்டை மீட்டெடுக்கவோ அச்சூழலில் மக்களுக்கு சலுகைகளையோ நிவாரணங்களையோ பெற்றுக்கொடுக்கவோ முடியாத சூழலில் அன்றைய ஆட்சியாளர்கள் தம் பதவிகளையே விட்டு விலகினர்.

எனினும் மக்களின் நலன்களை முன்னிலைப்படுத்தி நாட்டின் தலைமையை ஏற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆரம்பித்த நடைமுறைச் சாத்தியமான பொருளாதார மேம்பாட்டு வேலைத்திட்டங்கள் குறுகிய காலம் முதல் நாட்டுக்கும் மக்களுக்கும் பிரதிபலன்களை பெற்றுக்கொடுக்கத் தொடங்கின. அதன் பயன்களை மக்களுக்கு பெற்றுக்கொடுப்பதில் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் விஷேட கவனம் எடுத்துக் கொண்டுள்ளன. இதன் நிமித்தம் விஷேட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்த போது அத்தியாவசியப் பொருட்கள் உட்பட நாட்டில் அனைத்து பொருட்களது விலைகளும் பெரிதும் அதிகரித்தன. சில பொருட்களுக்கு நாட்கணக்கில் காத்திருக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டு இருந்தது.

ஜனாதிபதி பதவிக்கு வந்தது முதல் முன்னெடுத்து வரும் பொருளாதார மேம்பாட்டு திட்டங்களின் பிரதிபலன்கள் அவ்வப்போது பெற்றுக் கொடுக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் பொருட்களின் விலைக்குறைப்பும், சம்பள உயர்வு, கொடுப்பனவு அதிகரிப்பு, சலுகைகள் குறிப்பிடத்தக்கனவாகும்.

அந்த வகையில் அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் நேற்று முன்தினம் முதல் பஸ் கட்டணத்தை குறைப்பதாக அறிவித்திருக்கிறது.

இதேவேளை நேற்று முதல் பெற்றோலுக்கும் விலைக்குறைப்பு செய்யப்பட்டுள்ளது. இவ்விலைக் குறைப்பின் படி, ஒக்டேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை ரூ. 11.00 வாலும், ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை ரூ 41.00 வாலும் சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை ரூ. 22.00 வாலும் குறைக்கப்பட்டு இருக்கிறது.

இதேபோன்று கடந்த மாதங்களிலும் பெற்றோல், டீசலுக்கு விலைக்குறைப்பு செய்யப்பட்டுள்ளன. இவ் விலைக்குறைப்புக்கள் மக்களுக்கு பாரிய நிவாரணமாகும்.

பொருளாதார நெருக்கடிக்கு உள்ளானதால் பல விதமான அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்த போதிலும் மக்கள் பொறுமை காத்திருந்தார்கள். எனினும் ஜனாதிபதி முன்னெடுத்துவரும் பொருளாதார மேம்பாட்டு திட்டங்களால் நாடு தொடர்ந்தும் முன்னேற்றப்பாதையில் பயணித்துக் கொண்டிருப்பதன் பிரதிபலன்களை மக்களுக்கும் பெற்றுக்கொடுக்கும் திட்டத்தின் கீழேயே இவ்வாறு விலைக் குறைப்பு செய்யப்பட்டு வருகிறது.

ஆனால் இவ்விலைக்குறைப்புக்களின் பிரதிபலன்கள் மக்களுக்கு சென்றடைய வேண்டும். அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய கவனம் செலுத்த வேண்டும்.

என்றாலும் நாட்டில் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டு இருந்த சமயத்தில் விலை அதிகரிப்பு செய்யப்பட்ட பல பொருட்களின் விலைகள் இன்னும் அதே நிலையில் இருப்பதாக புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன. இவ்வாறான பொருட்களின் விலைகளைக் குறைப்பதற்கும் ஏற்ப பல்வேறு வேலைத்திட்டங்களை அரசாங்கம் முன்னெடுத்து இருக்கிறது. அப்படி இருந்தும் கூட பல பொருட்களுக்கு விலைக்குறைப்பு செய்யப்படாமை இருப்பதாக சுட்டிக்காட்டப்படுகிறது. இது எவ்விதத்தலும் நியாயப்படுத்த முடியாத புகாராகும்.

ஆகவே விலைக்குறைப்புக்கள், நிவாரணங்கள், சலுகைகளின் ஊடான பொருளாதாரப் பிரதிபலன்கள் அனைத்து மக்களுக்கும் கிடைக்கப் பெற்ற வேண்டும். அதுவே அனைத்து தரப்பினரதும் எதிர்பார்ப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# தமிழ் பேசும் சமூகங்களுக்காக அரைநூற்றாண்டு காலத்துக்கு மேலாக குரல் கொடுத்த தலைவர்

தமிழரசுக் கட்சியின் தலைவராக நீண்ட காலம் பதவி வகித்தவரும், திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் அவர்கள் தனது 91 ஆவது வயதில் நேற்றுக்காலை காலமான செய்தி உலகெங்கும் தமிழ் பேசும் மக்களை துயரத்துக்கு உள்ளாக்கியுள்ளது.

இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் தமிழ் பேசும் மக்கள் வாழும் தேசமெங்கும் இருந்து அரசியல் தலைவர்களும், அபிமானிகளும் அன்னாரின் மறைவுக்கு ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்து வருகின்றனர்.

சுமார் அரை நூற்றாண்டு காலமாக இலங்கைத் தமிழர் அரசியலில் முக்கிய பங்கு வகித்த இலங்கையின் மூத்த அரசியல்வாதி என்ற பெருமைக்கு உரியவர் இரா. சம்பந்தன் ஆவார். இலங்கைத் தமிழர்களின் அரசியல் உரிமை கோரும் பிரச்சினைக்கு நியாயமான தீர்வைப் பெறுவதற்காக நீண்ட காலம் பணியாற்றியவர் அவர். அதேவேளை தமிழ் பேசும் இரு சமூகங்களுக்காகவும் அவர் குரல் கொடுத்து வந்துள்ளார்.

பல தசாப்தங்களாக பாராளுமன்ற உறுப்பினராக இருந்த சம்பந்தன், தமிழர் பிரச்சனைகளுக்குத் தீர்வு கோரி உறுதியான, இடைவிடாத குரலை எழுப்பியவர்.

அவர் பல்வேறுபட்ட அரசியல் சூழ்நிலைகளைத் தாண்டிவந்த தலைவர். பலவிதமான சூழ்நிலைகளுக்கு அரசியல்ரீதியான பொறுப்புகளோடு எதிர்வினை ஆற்றியவர். தமிழர்களின் நலனை மனதில் வைத்து தனது பயணத்தைத் தொடர்ந்தவர். தமிழர்களுக்கு ஏதாவது ஒரு தீர்வு தனது வாழ்நாளிலேயே வரும் என அவர் நம்பியிருந்தார்.

திருகோணமலையை மையமாக வைத்து, 1970ஆம் ஆண்டளவில் தனது அரசியல் பிரவேசத்தைத் தொடங்கினார் சம்பந்தன். 1977ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், தமிழர் விடுதலை கூட்டணியின் சார்பில் இரா. சம்பந்தன் திருகோணமலை தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்றார். இவரது அரசியல் பிரவேசம் இடம்பெற்ற காலப் பகுதியானது, உள்நாட்டு போர் ஆரம்பமான பகுதியாகும்.

1983ஆம் ஆண்டு நடுப்பகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இலங்கை அரசியலமைப்பின் ஆறாவது சட்டத் திருத்தத்தைக் கண்டித்தும், 1983 கறுப்பு ஜூலை நிகழ்வுகளில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதற்கும், அவர்களது உடைமைகள் சேதமாக்கப்பட்டதற்கும் எதிர்ப்புத் தெரிவித்தும் பாராளுமன்ற அமர்வுகளைப் புறக்கணித்தனர்.

மூன்று மாதங்கள் தொடர்ந்து நாடாளுமன்ற அமர்வுகளில் பங்குபெறாததால், 1983 செப்டம்பரில் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்தார் சம்பந்தன்.

இதையடுத்து, 1989ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் தமிழர்



### இரா. சம்பந்தன் மறைவினால் இலங்கைத் தமிழர் அரசியலில் நிரப்ப முடியாத வெற்றிடம்

விடுதலைக் கூட்டணி தலைமையில் பல தமிழ்க் கட்சிகளின் ஆதரவுடன் அமைக்கப்பட்ட கூட்டமைப்பு சார்பில் சம்பந்தன் திருகோணமலை தேர்தல் தொகுதியில் போட்டியிட்டார். எனினும், அந்தத் தேர்தலில் அவர் பாராளுமன்றத்திற்கு தெரிவாகவில்லை.

இதற்குப் பிறகு தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, டெலோ ஆகிய கட்சிகள் கைகோர்த்து 2001ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. இந்த கூட்டமைப்பின் தலைவராக இரா.சம்பந்தன் தெரிவு செய்யப்பட்டார்.

இந்தக் கூட்டமைப்பிற்கு தேர்தல்கள் செயலகம் அங்கீகாரம் வழங்காத நிலையில், 2001ஆம் ஆண்டு தேர்தலை தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற பெயரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்கொண்டது. இந்தத் தேர்தலின் மூலம் 18 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் பாராளுமன்ற உறுப்பினரானார் சம்பந்தன்.

2004ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இலங்கை தமிழரசுக் கட்சியின் சின்னத்தில் போட்டியிட்டது. இந்த காலகட்டத்தில் இலங்கை தமிழரசு கட்சியின் தலைவராகவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராகவும் இரா.சம்பந்தன் தெரிவு செய்யப்பட்டார். இதற்குப் பிறகு வந்த அனைத்து பாராளுமன்றத் தேர்தல்களிலும் சம்பந்தன் வெற்றிபெற்றார்.

சுதந்திர இலங்கையின் பாராளுமன்ற வரலாற்றில் தற்போதுவரை இரண்டு தமிழர்கள் மாத்திரமே எதிர்க்கட்சித் தலைவர்களாக பதவி வகித்துள்ளனர். 1977ஆம் ஆண்டில் தமிழர் விடுதலை கூட்டணியின் தலைவரான அ. அமிர்தலிங்கம், இலங்கையின் முதலாவது தமிழ் எதிர்க்கட்சித் தலைவராக தேர்வு செய்யப்பட்டார்.

2015ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் இலங்கையின் பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியும் இணைந்து ஆட்சி அமைத்தன. இதனால், இந்த இரு கட்சிகளுக்கும் அடுத்தபடியாக அதிக இடங்களைப் பெற்ற கட்சியாக இலங்கை தமிழரசுக் கட்சி விளங்கியது. இந்தக் கட்சிக்கு 16 இடங்கள் கிடைத்திருந்தன. ஆகவே 38 ஆண்டுகளுக்குப் பிறகு இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவர் பதவி, இலங்கையின் தமிழர் தலைவர் ஒருவருக்கு(சம்பந்தன்) மீண்டும் கிடைத்தது.

இலங்கைத் தமிழர்களின் அரசியல் தீர்வுக்காக உள்நாட்டில் மாத்திரமன்றி, சர்வதேச நாடுகளுடனும் இணைந்து செயற்பட்ட தலைவர்களில் சம்பந்தனுக்கு முக்கிய இடம் இருக்கிறது.

இலங்கைச் சூழல் குறித்து இந்தியாவுக்கு பல தருணங்களில் சம்பந்தன் கடிதம் எழுதியிருக்கிறார். அது தொடர்பாக பதில் ஏதும் வராத போதும் தனது முயற்சிகளை அவர் கைவிடவில்லை.

மனித உரிமை மீறல் விவகாரம், காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், தமிழர் பகுதிகளில் இடம்பெறும் அத்துமீறிய குடியேற்றம், காணிப் பிரச்சினைகள் உட்பட தமிழர்கள் எதிர்நோக்கி வந்த பிரச்சினைகளுக்கு குரல் கொடுத்த முக்கிய தலைவராக சம்பந்தன் இருந்தார்.

தனது மறைவின் மூலம் நிரப்ப முடியாத ஒரு வெற்றிடத்தை இலங்கைத் தமிழர் அரசியலில் ஏற்படுத்திச் சென்றிருக்கிறார் சம்பந்தன்.

ஆனால் அந்த வெற்றிடம் முன்பே ஏற்பட்டுவிட்டது. இவர் மிகவும் உடல் நலம் குன்றியிருந்த மூன்று, நான்கு வருடங்களில் தமிழர் அரசியலே சின்னாபின்னமாகி விட்டது. தமிழரசுக் கட்சியில் இருந்த பதவிப் போட்டி இதற்கு முக்கிய காரணம். தற்போது எரா. சம்பந்தன் மரணமடைந்திருக்கும் நிலையில் அடுத்த கட்டம் குழப்பமாகவே இருக்குமென்று அவதானிகள் கூறுகின்றனர்.

உள்நாட்டு யுத்தம் முடிவடைந்த பிறகான தமிழர் அரசியலில் சம்பந்தனுக்கு ஒரு முக்கிய பங்கு இருந்தது. சம்பந்தனைப் பொறுத்தவரை, இலங்கையில் தமிழ் தேசிய அரசியலை ஒன்றிணைக்கக் கூடிய நிலையில் இருந்தார். அவர் இல்லாவிட்டால் தமிழர் அரசியல் என்றோ சிதறிப் போயிருக்கும்.

அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் போன்ற முக்கிய தமிழ்த் தலைவர்கள் புலிகளால் கொல்லப்பட்ட நிலையில் தான் சம்பந்தன் தலைமைத்துவத்தைப் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ்த் தலைவர்களை புலிகள் அடுத்தடுத்துப் படுகொலை செய்த போது, தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்காக துணிச்சலுடன் குரல் கொடுத்தவரென்ற பெருமையும் சம்பந்தனுக்கு உண்டு.

இராஜவரோதயம் சம்பந்தன் திருகோணமலையில் 1933 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஐந்தாம் திகதி பிறந்தார்.

யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரி, மொறட்டுவை புனித செபஸ்தியன் கல்லூரி ஆகியவற்றில் கல்வி கற்ற சம்பந்தன் இலங்கை சட்டக் கல்லூரியில் இணைந்து சட்டம் பயின்று வழக்கறிஞரானார். சம்பந்தனின் மனைவியின் பெயர் லீலாவதி. இவர்களுக்கு மூன்று பிள்ளைகள்.

நீண்ட நாட்களாகவே உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டிருந்த சம்பந்தன், பாராளுமன்றத்திற்குச் செல்வதிலிருந்து விடுப்பு எடுத்திருந்தார். உடல்நலம் மோசமடைந்த நிலையில், கொழும்பிலுள்ள தனியார் மருத்துவமனையொன்றில் சிகிச்சை பெற்றுவந்த அவர், சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் இரவு காலமானார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக கொழும்பில் மலர்சாலையில் வைக்கப்பட்டு அதன்பின்னர் அவரது பூதவுடல் நாடாளுமன்றத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது. அதன்பின்னர் அன்னாரின் பூதவுடல் இறுதிக் கிரியைகளுக்காக அவரின் சொந்த ஊரான திருகோணமலைக்குக் கொண்டு செல்லப்படும்.

# கல்வியின் முக்கியத்துவத்தை நன்கு உணர்ந்து கொண்டவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கல்வியின் முக்கியத்துவத்தை தெளிவாக உணர்ந்துள்ளதால், அதற்கான நிதியொதுக்கீடு உள்ளிட்ட விடயங்களில் கூடுதல் கரிசனையுடன் நடந்து கொள்வதாக வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

வடமேல் மாகாணத்தில் 1671 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கும் நிகழ்வு குருநாகல் நகரமண்டபத்தில், ஆளுநர் நஸீர் அஹமட் தலைமையில் நடைபெற்றது.

இங்கு உரையாற்றிய ஆளுநர் நஸீர் அஹமட், "இலங்கையில் இரண்டு வருடங்களுக்கு முன்னர் எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களுக்கு கடுமையான தட்டுப்பாடு நிலவியது. மின்சாரம் இன்றி மக்கள் மணிக்கணக்கில் அவதிப்பட்டார்கள். ஆனால் இன்று அந்த நிலை மாறியுள்ளது. அனைத்து அத்தியாவசியப் பொருட்களும், தட்டுப்பாடு இன்றி தாராளமாகக் கிடைக்கின்றன. வரிசை யுகம் மறைந்து நாடு ஓரளவுக்கு சுபீட்சமடைந்துள்ளது.

மறுபுறத்தில் நாட்டில் ஏற்பட்டுள்ள சுபீட்சநிலை காரணமாக தொழில்வாய்ப்புகளை வழங்குவதற்கான நிதியொதுக்கீடுகள் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன. அதன் காரணமாக தற்போது தொழில் வரிசைகள் உருவாகியுள்ளன. அதன் ஒரு கட்டமாகவே இன்று உங்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஒரு மாத காலத்திற்குள்ளாக நாங்கள் 4200 பேருக்கு பட்டதாரி ஆசிரியர் நியமனங்களை வழங்கியுள்ளோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தினால் இன்னும் சிறிது காலத்திற்குள் தொழில் வரிசைகளும் இல்லாதொழிக்கப்படும். தகுதி வாய்ந்த அனைவருக்கும் தொழில் வாய்ப்புகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.



### வடமேல் மாகாணத்தில் 1671 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கும் நிகழ்வில் ஆளுநர் நஸீர் அஹமட்

அதன் இன்னொரு கட்டமாக வடமேல் மாகாணத்தின் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பும் வகையில் இன்னும் 1600 பேரளவிலானோருக்கு விரைவில் ஆசிரியர் நியமனம் வழங்க உள்ளோம். அதற்கான வயது எல்லையை முப்பத்தி ஐந்தில் இருந்து நாற்பது வரை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

நாட்டின் எதிர்காலம் கல்வி கற்ற சமூகத்தின் கைகளில் தங்கியுள்ளது என்பது அனைவரும் அறிந்த உண்மை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கல்வியின் முக்கியத்துவத்தைத் தெளிவாக உணர்ந்துள்ளார். அதன் காரணமாக கல்வி மேம்பாட்டுக்கான நடவடிக்கைகளுக்கு தாராளமாக நிதிஒதுக்கீடு செய்து வருகின்றார். அவரின் கல்விக் கொள்கையை அடியொற்றி, வடமேல் மாகாணத்தின் கல்வித் தரத்தை மேம்படுத்துவதில் நாங்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.



வடமேல் மாகாணத்தை முன்னணி மாகாணமாக முன்னேற்றுவதே எமது இலக்காகும். அதற்கான முக்கிய பொறுப்பு, இன்று பட்டதாரி ஆசிரியர்களாக நியமனம் பெறும் உங்கள் கைகளில் தங்கியுள்ளது. எதிர்கால சந்ததியினரை, நாட்டின் எதிர்கால தலைவர்களை தயார்படுத்தும் பாரிய பொறுப்பு உங்களுக்கு உள்ளது. அதனை உரிய முறையில் மேற்கொண்டு, மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உரிய பங்களிப்பை வழங்க வேண்டும். மாணவர்களுக்கு சிறந்த வழிகாட்டிகளாக ஆசிரியர்கள் செயற்பட வேண்டும்" என்று வலியுறுத்தினார்.

இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர்களான சாந்த பண்டார, அசோக பிரியந்த, பாராளுமன்ற உறுப்பினர்களான குருநாகல் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவர் சமன்பிரிய ஹேரத் எம்.பி, புத்தளம் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவர் அமல் சிந்தக மாயாதுன்னே எம்.பி அசங்க நவரத்ன, சுமித் உடுகும்புற, அலி சப்ரி ரஹீம், மாகாண பிரதம செயலாளர் தீபிகா குணரத்ன மற்றும் மாகாண கல்வி அமைச்சு, பொதுச்சேவைகள் ஆணைக்குழு என்பவற்றின் செயலாளர்கள், மாகாணக் கல்விப் பணிப்பாளர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# விண்ணரசின் திறவுகோல்கள் ஒரு மறைக்கப்பட்ட புதையல்


## சிறப்பு செபவுரையில் திருத்தந்தை பிரான்சிஸ்



விண்ணரசின் திறவுகோல்களை புனித பேதுரு பெற்றது அவர் குறைபாடற்றவர் என்பதால் அல்லமாறாக, அவர் பணிவு மற்றும் நேர்மையும் கொண்டவர் மற்றும் இறைதந்தையே அவர் உறுதியான நம்பிக்கைகொண்டவர் (காண்க மத் 16:17) என்பதை வெளிப்படுத்தி இருந்த தால்தான் என திருத்தந்தை பிரான்சிஸ் தெரிவித்தார்.

அதனால்தான், கடவுளின் இரக்கத்தை நம்பி இயேசு கேட்டுக்கொண்டபடி அவருடைய சகோதரர்களை ஆதரிக்கவும் பலப்படுத்தவும் அவரால் முடிந்தது (லூக் 22:32) என்றும் அவர் தெரிவித்தார்

கடந்த சனிக்கிழமை திருத்தூதர்கள் புனித பேதுரு மற்றும் பவுல் பெருவிழாவை முன்னிட்டு வத்திக்கான் புனித பேதுரு பேராலயத்தில் கூடியிருந்த பல்வேறு நாடுகளைச் சேர்ந்த திருப்பயணிகளுக்கு வழங்கிய சிறப்பு செபவுரையிலேயே



அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"விண்ணரசின் திறவுகோல்களை நான் உன்னிடம் தருவேன். மண்ணுலகில் நீ தடைசெய்வது விண்ணுலகிலும் தடைசெய்யப்படும். மண்ணுலகில் நீ அனுமதிப்பது விண்ணுலகிலும் அனுமதிக்கப்படும்" (மத் 16:19) என்று இயேசு பேதுருவுக்குக் கூறிய வார்த்தைகளை எடுத்துக் காட்டிய திருத்தந்தை, இதன் காரணமாகவே அவருடைய கரங்களில் இரண்டு திறவுகோல்களைக் காண்கிறோம் என்றும் அவை முழு திருஅவைக்கும் சேவை செய்ய இயேசு அவரிடம் ஒப்படைத்த அதிகாரப் பணியை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன என்றும் விளக்கினார்.

எனினும் இந்தத் திறவுகோல்கள் குறித்த உண்மைப் பொருளை அறிந்துகொள்வது முக்கியம். பேதுருவின் கரங்களில் இருந்த விண்ணரசுக்கான இந்தத் திறவுகோல்கள் உண்மையில் பாதுகாப்பான பெட்டகத்துக்கு உரியதாக இயேசு விபரிக்கவில்லை. ஆனால் ஒரு சிறிய விதை, ஒரு விலைமதிப்பற்ற முத்து, ஒரு மறைக்கப்பட்ட புதையல், புளிப்பு மாவு (மத் 13:1 33) போன்ற உருவகங்களைக் குறித்த பாடங்களையும் நமக்குப் படிப்பிக்கின்றன.

அதனால் இதனை அடைய பொறிமுறைகள் மற்றும் பாதுகாப்பு பூட்டுகளை இயக்குவது அவசியமில்லை. ஆனால் இது பொறுமை, கவனம், நிலைத்தன்மை, பணிவு போன்ற நற்பண்புகளை வளர்ப்பது என்பதைக் குறிக்கிறது என்றும் எடுத்துக்காட்டினார் திருத்தந்தை.

எனவே இயேசு பேதுருவிடம் ஒப்படைக்கும் இந்தப் பபணி என்பது வீட்டின் கதவுகளைப் பாதுகாப்பதோ அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட சில விருந்தினர்களை மட்டுமே அணுக அனுமதிப்பதோ அல்ல. மாறாக, இயேசுவின் நற்செய்திக்குப் பிரமாணிக்கமாக இருக்க அனைவரும் தங்கள் வழியைக் கண்டறிய உதவுவதாகும் என்றும் எடுத்துரைத்தார்.

கடவுளின் அருளுடன், அவருடைய விண்ணரசில் நுழைவதற்கும், அவருடைய உதவியுடன், மற்றவர்களுக்கும் அதை வரவேற்கும் பாதுகாவலராக இருக்க வேண்டும் என்ற விருப்பத்தை நான் வளர்த்துக்கொள்கிறேனா? இதைச் செய்வதற்கு, என்னில் வாழும் இயேசு மற்றும் அவரது தூய ஆவியாரால் மெருகூட்டப்பட்ட, மென்மையாக, மாதிரியாக இருக்க நான் என்னையே அனுமதிக்கிறேனா? என்பன போன்ற கேள்விகளை எழுப்பிச் சிந்திப்போம்.

கிறிஸ்துவுடனான சந்திப்புக்கு நாம் ஒருவருக்கொருவர் வழிகாட்டியாகவும் ஆதரவாகவும் இருக்க திருத்தூதர்களின் அரசியும் மற்றும் திருத்தூதர்களான பேதுரு மற்றும் பவுலும் தங்களின் பரிந்துரை செபங்கள் வழியாக நமக்கு இறையருளைப் பெற்றுத்தருவார்களாக என்றும் திருத்தந்தை தெரிவித்தார்.

**செல்வராஜ் சூசைமாணிக்கம்**

# திரு இருதய நாதர் ஆலய திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பம்

கொழும்பு 5 பொல்ஹேன்கொட திரு இருதய நாதர் ஆலயத்தின் வருடாந்த திருவிழா சிறப்பாக நடைபெற்று வருகிறது .

கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் திருவிழா நிகழ்வுகள் ஆரம்பமாகின.அதனைத் தொடர்ந்து நவநாள் ஆராதனைகள் இடம்பெற்று எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஆலயத்தின் திருவிழா சிறப்பாக கொண்டாடப்படவுள்ளது

அன்றைய தினம் காலை திருவிழா திருப்பலியும் அதனைத் தொடர்ந்து திரு இருதயநாதர் திருச்சொரூப பவனியும் நடைபெறவுள்ளது.

வழமையாக பயணிக்கும் பாதைகளில் இந்த திருப்பவனி இடம்பெறும் என பங்குத்தந்தை அருட்பணி என்டன் சுதாரக தெரிவித்தார்..

காட்டுக் கோயில் என்று வரலாற்றில் அழைக்கப்பட்டு பெயர் பெற்ற இந்த திரு இருதயநாதர் ஆலயம் ஆரம்பத்தில் ஒரு ரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையாகவே இயங்கி வந்துள்ளது.

1950 களில் பாடசாலையாக ஆரம்பித்த இந்த ஆலயத்தின் வரலாற்றைப் பார்க்கும்போது வார நாட்களில் பாடசாலையாகவும் வார இறுதி நாட்களில் திருப்பலி நடத்தும் திருப் பீடமாகவும் இந்த ஆலயம் வரலாற்றில் செயற்பட்டுள்ளது.

செவ்வாய்க்கிழமைகளில் மாலை 5.30 மணிக்கு புனித அந்தோனியாரின் பிரார்த்தனையும் இங்கு நடைபெற்று வந்துள்ளது.இது ஆலயமாக உருவெடுக்க காரணமாக இருந்த அன்றைய அருட்தந்தை மார்க்கஸ் பெர்டினன்ட் அடிகளார் இப்போது நினைவு கூரப்படத்தக்கவர்.

1973 ஆம் ஆண்டு புதுமை மாதா என்ற பெயரில் மரியாயின் சேனை இந்த ஆலயத்தில் செயற்பட ஆரம்பித்தது அதனைத் தொடர்ந்து 1984 ஆம் ஆண்டு அருட்தந்தை மார்க்கஸ் தலைமையில் இது புதிய ஆலயமாக அடிக்கல் நாட்டப்பட்டு அந்த வருடத்தின் ஆனி மாதம் 24 ஆம் திகதி அன்றைய கொழும்பு உயர் மறை மாவட்ட துணை ஆயர் பேரருட்திரு ஒஸ்வோல்ட் கோமிஸ் ஆண்டகையினால் அபிஷேகம் செய்யப்பட்டு மக்கள் வழிபாடுகளுக்காக ஆலயம் திறந்து வைக்கப்பட்டது.

இவ்வாறு பல ஆண்டுகள் கடந்து வந்துள்ள இந்த ஆலயம் 1999 2002 ஆம் ஆண்டு காலப்பகுதியில் எம் ஆலயத்தை பொறுப்பேற்ற அருட்பணி சுனில் டீ சில்வா அடிகளாரினாலேயே ஆலய திருவிழாவுக்கான கொடிமரம் அறிமுகம் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து வருடந்தோறும் திருவிழா விமரிசையாக கொண்டாடப் பட்டு வருகிறது. அந்த வகையில் இதுவரை காலம் இறைவனின் கருணையால் இந்த ஆலயத்தை வழி நடத்திய அருட்தந்தையர்கள் அருட் சகோதரிகள் மற்றும் பங்கு சங்கங்கள் இறை மக்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள். பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் இறை விசுவாசத்திலும் ஒன்றிப்பிலும் நல்லிணக்கத்திலும் இந்த பங்கு வாழ் மக்கள் தொடர்ந்து பயணிப்பதற்காக நாம் திரு இருதயநாதருக்கு நன்றி செலுத்துவோம்.





**செல்வி எரின் வனிஷா பிரதீப்குமார்**




# கண்டி கட்டுகஸ்தொட்டை திரு இருதயநாதர் ஆலய திருவிழா









கண்டி கட்டுகஸ்தொட்டை திரு இருதயநாதர் ஆலயத்தின் வருடாந்த திருவிழா மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு வெலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகையின் தலைமையில் நடைபெற்றது. மறைமாவட்ட சபை முதல்வரும் ஆலயத்தின் பங்குத் தந்தையுமான எல்வின் பீட்டர், அருட்தந்தை பாலா ராஜேந்திரம் அடிகளார் ஆகியோர் இணைந்து திருவிழா கூட்டுத் திருப்பலியை நிறைவேற்றினர்.திருவிழா திருப்பலியில் கலந்து கொண்ட விசுவாசிகளை படத்தில் காணலாம்.

படங்கள் - மத்தியூ ஜேசுதாசன்

# நம்பிக்கையே புதுமைகளுக்கான அடிப்படை

## “நமது நம்பிக்கையின்மை கடவுளின் கரங்களைக் கூட கட்டிப்போட்டு விடுகிறது”

சாவை எவரும் தவிர்க்க முடியாது: வேண்டுமானால் அதைக் கொஞ்ச காலம் தள்ளிப் போடலாம். "நேற்று உயிரோடு இருந்தவர் இன்று இல்லை" என்று கூறும் நிலையாமைதான் இவ்வுலகின் பெருமை என்கிறார் வள்ளுவப் பெருந்தகை.(குறள் 336).

சாவை மனிதர் மட்டுமல்ல, கடவுளும் விரும்புவதில்லை , அவருடைய சாயலாகப் படைக்கப்பட்ட மனிதர் சாகாமல் வாழ்வதையே கடவுள் விரும்புகிறார், அலகையின் பொறாமையால்தான் சாவு உலகில் நுழைந்தது. எனத் தெளிவுபடக் கூறுகிறது கடந்த ஞாயிறு முதல் வாசகம் (சா.ஞா.2:2324).

கிறிஸ்து சாவை அழித்து விட்டார், ஞாயிறு அல்லேலூயா பாடல் இவ்வாறு கூறுகிறது: "நம் மீட்பராகிய கிறிஸ்து இயேசு சாவை அழித்து அழியா வாழ்வை நற்செய்தியின் வழியாக ஒளிரச் செய்தார்" (2 திமொ 1:10). கிறிஸ்து நாம் அனைவரும் சாகாமல் இருக்க அவர் சாவை ஏற்றார், தமது சாவினால் நமது சாவை அழித்தார்.

நற்செய்தியில் தொழுகைக் கூடத் தலைவர் யாயிர் என்பவருடைய பன்னிரண்டு வயது நிரம்பிய மகள் இறந்துவிட்டார், அவளுடைய வீட்டில் அனைவரும் ஓலமிட்டு அழுகின்றனர். ஆனால் கிறிஸ்துவோ, "சிறுமி இறக்கவில்லை ; உறங்குகின்றாள்" என்கிறார்.

அதைக்கேட்டு மற்றவர்கன் ஏளளமாகச் சிரிக்கின்றனர், பெத்தானியாவில் இலாசர் இறந்து அவரைக் கல்லறையில் அடக்கம் செய்துவிட்டனர். அந்நிலையிலும் இயேசு தம் சீடர்களிடம், 'நம் நண்பன் இலாசர் தூங்குகிறான்" (யோவா 11:11) என்கிறார்.

கிறிஸ்து சாவை ஒரு நெடிய தூக்கமாகவே கருதுகிறார். வள்ளுவரும் இறப்பைத் தாக்கத்திற்கும், பிறரைத் தூக்கத்திலிருந்து விழிப்பதற்கும் ஒப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


உறங்குவது போலும் சாக்காடு; உறங்கி
விழிப்பது போலும் பிறக்க. (குறள் 369)

இறந்தவர்கள் கல்லறையில் துயில் கொள்கின்றனர். கடவுள் அவர்களை எழுப்பி வாழ வைக்கிறார் என்கிறார் கிறிஸ்து (யோவா 5:21),

12 வயது சிறுவன் பாம்பு கடித்து இறந்து விட்டான். அவன் அடக்கத்தில் நான் கலந்து கொண்டேன், அவனுடைய அம்மா என் காலைப் பிடித்து. "சாமி! இலாசரைக் கிறிஸ்து உயிர்த்தெழச் செய்ததுபோல் என் மகனையும் உயிர்த்தெழச் செய்யுங்கள்” என்று கதறினார்.

ஆனால் என்னால் அவ்வாறு செய்ய முடியவில்லை. ஆனால் அவளைக் கல்லறையில் வைத்து பின்வரும் செபத்தைத்தான் சொல்ல முடிந்தது : "இவர் உருவான மண்ணிற்கே திரும்பிச் செல்லும்படி நிலத்திற்கு கையளிக்கிறோம். இறந்தோரிடமிருந்து தலைப்பேறாக உயிர்த்தெழுந்த கிறிஸ்து தாழ்வுக்குரிய உடலை) மாட்சிக்குரிய தம் உடலின் சாயலாக உருமாற்றுவார் ... இவரது உடலையும் இறுதி நாளில் மகிமையுடன் உயிர்த்தெழச் செய்வார்."

எல்லாவற்றிற்கும் ஒரு காலம் உண்டு, பிறக்க ஒரு காலம் உண்டு; இறக்க ஒரு காலம் உண்டு, ஆனால் "காலம் வருகிறது அப்போது கல்லறைகளில் உள்ளோர் அனைவரும் அவரது குரலைக் கேட்டு வெளியே வருவர், நல்லன செய்தோர் வாழ்வு பெற உயிர்த்தெழுவர். தீயன செய்தோர் தண்டனைத் தீர்ப்புப் பெற உயிர்த்தெழுவர்" (யோவா 5:2829).



அல்லவை அகற்றி நல்லவை செய்தால், நாம் வாழ்வு பெற உயிர்த்தெழுவோம்.

ஞாயிறு பதிலுரைப்பாடல் கூறுகிறது: "ஆண்டவரே நீர் என்னைப் பாதாளத்திலிருந்து ஏறிவரச் செய்தீர். சாவுக் குழியில் இறங்கிய எனது உயிரைக் காத்தீர்” (திபா 30:3), சாவு என்ற படகு இம்மை வாழ்வின் இக்கரையிலிருந்து மறுமை வாழ்வு என்ற அக்கரைக்கு நம்மை அழைத்துச் செல்கிறது.)

தொழுகைக்கூடத் தலைவரிடம் கிறிஸ்து. “அஞ்சாதீர், நம்பிக்கை மட்டும் விடாதீர்" (மாற் 5:36) என்கிறார். கிறிஸ்து தொழுகைக்கூடத் தலைவரின் வீட்டுக்கு வரும் வழியில் பன்னிரண்டு ஆண்டுகளாக இரத்தப்போக்கினால் அவதியுற்ற பெண் கிறிஸ்துவின் ஆடையைத் தொட்டு குணமடைகிறார். கிறிஸ்து அவரிடமும், “மகளே, உனது நம்பிக்கை உன்னைக் குணமாக்கிற்று" (மாற் 5:34) என்கிறார்,

இதிலிருந்து கிறிஸ்து நமக்குக் கூறுவது என்ன? எங்கே நம்பிக்கை இல்லையோ அங்கே கடவுள்கூட புதுமை செய்ய முடியாது, கிறிஸ்து நாசரேத் ஊர் மக்களிடம் நம்பிக்கை இல்லாததால் அவரால் அங்க புதுமை செய்ய முடியவில்லை என்கிறது நற்செய்தி. "அவர்களுக்கு நம்பிக்கை இல்லாததால் அவர் அங்கு பல வல்லச் செயல்களைச் செய்யவில்லை " (மத் 13:58). நமது நம்பிக்கையின்மையால் வல்லமைமிக்க கடவுளின் கரங்களைக்கூட நாம் கட்டிப்போடுகிறோம். அவரைச் செயல் இழக்கச் செய்கிறோம். உடற்பிணியிலிருந்து குணம் பெறுவதற்கும் மனநலம் பெறுவதற்கும் வேறுபாடு உண்டு. லூர்து நகருக்குச் செல்லும், அனைவருமே உடற் பிணியிலிருந்து குணம் பெறுவதில்லை. ஆனால் அங்கு செல்லும் அனைவருமே மனநலம் பெறுகின்றனர், உடலரீதியான புதுமைகளைவிட மனரீதியான புதுமைகளே பெரியது. மனமாற்றமே மாபெரும் புதுமை.

கிறிஸ்துவை நற்கருணை வழியாக நம்பிக்கையுடன் பெற்றுக் கொண்டு நலம் பெறுவோம்.

**அருட்தந்தை வை.இருதயராஜ்**

# கடன்களை திருப்பிச் செலுத்தும் உடன்படிக்கைகளை மாற்ற முடியாது

அரசாங்கத்தால் கைச்சாத்திடப்பட்டுள்ள வெளிநாட்டு கடனை திருப்பிச் செலுத்தும் உடன்படிக்கைகளை சஜித்தோ அல்லது வேறு எந்த சக்தியோ மாற்ற முடியாது என்று, போக்குவரத்து, பெருந்தெருக்கள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

கம்பளை பிரதேசத்தில் பல வீதிகளை அபிவிருத்தி செய்யும் பணிகளை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய அமைச்சர் உரையாற்றினார். நீதி சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்னவின் வேண்டுகோளுக்கு அமைவாக 1500 கிலோ மீற்றர் வீதி புனரமைக்கப்பட்டது.

செப்பனிடப்பட்ட கம்பளை புபுரஸ்ஸ, ஹுனுகல பிரதான வீதியை மக்களிடம் கையளித்து உரையாற்றிய அமைச்சர் குறிப்பிட்டதாவது வரலாற்றில் மிகவும் கடினமான காலகட்டத்தை நாம் கடந்து கொண்டிருக்கிறோம். பல்வேறு அரசாங்கங்கள் நலன்புரி பொருளாதாரத்தை பராமரிப்பதற்காக வரவுசெவுத்திட்டத்தில் பெரும் பற்றாக்குறையுடனேயே முன்னெடுத்தன. இந்தப் பற்றாக்குறையைச் சமாளிக்க, ஒவ்வொரு அரசாங்கமும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பெரும் கடன்களைப் பெற்றுள்ளன. நாட்டுக்குத் தேவையான பல பொருட்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்வதற்கு பதிலாக, வெளிநாடுகளில் இருந்து அதிக அளவில் பொருட்களை இறக்குமதி செய்துள்ளோம். இறக்குமதி செலவுக்கு போதிய ஏற்றுமதி வருமானம் இல்லாததால், தினமும் வெளிநாடுகளின் கடனில் தங்கியிருந்தோம். இவ்வாறு அமைச்சர் குறிப்பிட்டார்.



## இரா. சம்பந்தனின்...

மக்கள் அஞ்சலிக்காக அவரது பூதவுடல் இன்றைய தினம் காலை 9 மணி முதல் கொழும்பு பொருளை ரேமன் மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு நாளைய தினம் (03) பாராளுமன்றத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது.

இதையடுத்து அவரது பூதவுடல் சொந்த ஊராகிய திருகோணமலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு இறுதிக்கிரியைகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இடம் பெறவுள்ளது.

இரா. சம்மந்தன் 1933 பெப்ரவரி 05இல், திருகோமலையில் பிறந்தார். யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரி, மொரட்டுவை புனித செபஸ்தியார் கல்லூரி ஆகியவற்றில் இவர் கல்வி கற்றுள்ளார். பின்னர்,

இலங்கை சட்டக் கல்லூரியில் கல்வி பயின்று சட்டத்தரணியானார்.

1977 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் தமிழர் விடுதலை கூட்டணியின் சார்பில், திருகோணமலை தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று பாராளுமன்ற உறுப்பினரானார்.

நீண்ட காலம் தமிழ் மக்களின் இணையில்லாத தலைவராகவும் தமிழ் மக்களுக்கு அரசியல் வழிகாட்டியாகவும் வாழ்ந்தார். அவரது இழப்பு தமிழ் சமூகத்திற்கு மாத்திரமன்றி முழு சமூகத்திற்கும் இழப்பாக கருதப்படுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தரான எம்.ஏ. சுமந்திரன் எம்பி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது

## ஒப்பந்தக்காரர்களது...

உள்ளடக்கப்பட்டனர்.அந்தக் குழுவின் மூலம் நாட்டின் நிர்மாணத்துறையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான 50 யோசனைகள் முன்வைக்கப்பட்டன. அவற்றில் உடனடியாக நடைமுறைப்படுத்தக் கூடிய 14 துறைகள் தொடர்பில் அரசாங்கத்தின் கவனம் செலுத்தப்பட்டது.

இதன் மூலமாக நிர்மாணத் துறையை மேம்படுத்துவதற்கான புதிய கொள்கையை உருவாக்குவதற்கு அமைச்சரவைக்கு யோசனை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் காலதாமத கட்டணத்தை அறவிடாமல் நிர்மாணத்துறை ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்வதற்கும் நிர்மாணத்துறை கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. தேசிய நிர்மாணத்துறை சங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க, 2020 ஆம் ஆண்டுக்கு முன்னர் பதிவு செய்ய முடியாதிருந்தவர்களுக்கும் மீண்டும் பதிவு செய்வதற்கான வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கிணங்க சிறு மற்றும் நடுத்தர ஒப்பந்தக்காரர்களின் மூன்று வருடங்களுக்கான தாமதக் கட்டணம் விடுவிக்கப்பட்டுள்ளள்ளதாக நிர்மாணத்துறை கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதனால் எந்த ஒப்பந்தக்காரர்களும் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் பதிவு செய்து கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் தலையீட்டுடன் கடந்த ஐந்து வருடங்களில் நிர்மாணத்துறையின் பல்வேறு பிரிவுகளுக்காக 7000 நிர்மாணத்துறை பணியாளர்களுக்கு NVQ சான்றிதழை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக 485 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சம்பந்தனின் நினைவுகள்...

பின்பற்றுபவர்களுக்கு இது ஒரு பெரும் இழப்பு. அவருடனான சந்திப்புக்களின் இனிய நினைவுகள் எப்போதும் போற்றத்தக்கவை.

சம்பந்தனின் பாணியில் இலங்கைத் தமிழர்களுக்கு பணியாற்ற ஒருவர் இல்லாது போய்விட்டார்.

அவரின் இழப்பால் துயருறும் ஆர்.சம்பந்தனின் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்கள்.

## சகோதரத்துவத்தை இழந்த...

அனுதாபங்கள். எனது பழைய நண்பரான சம்பந்தனுடன் பல்வேறு விடயங்களைப் பேசியிருக்கிறேன்,விவாதித்திருக் கிறேன். எனது சகோதரத்துவத்தை இழந்த உணர்வில் நான் இருக்கிறேன். சம்பந்தனின் இழப்பு சமூக உறவுகளை பலப்படுத்தும் முயற்சிக்கு விழுந்துள்ள பலத்த அடி.அவரது குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் இந்த சோக இழப்பை போக்கட்டும்.அவரது இழப்பால் துயருறும் சகலருக்கும் எனது அனுதாபங்கள்.

## சம்பந்தனின் அர்ப்பணிப்புக்கள்...

அரை நூற்றாண்டுக்கும் மேலாக அரசியலில் ஈடுபட்டு மக்களுக்கு சேவையாற்றியவர் சம்ந்தன்.மூத்த அரசியல்வாதியான சம்பந்தனின் இழப்பு அரசியலில் பெரிய இடைவெளியை ஏற்படுத்தியுள்ளது.அவரது சகல அணுகுமுறைகளும் ஜனநாயகத்தைப் பாதுகாத்தது. நேர்மையான மற்றும் நியாயமான அவரது தலைமை எனக்கும் மற்றவர்களுக்கும் தொடர்ந்து ஊக்கமளிக்கும். உண்மையில், சம்பந்தனின் மறைவு ஒரு சகாப்தத்தின் முடிவைக் குறிக்கிறது.

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க...

விசேட உரையொன்றை நிகழ்த்தவுள்ளார். அதேவேளை இதன் மீதான விவாதம் மற்றும் வாக்களிப்பு பிறிதொரு தினத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

மறைந்த முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான அமரர் இரா சம்பந்தனின் பூதவுடலுக்கான இறுதி அஞ்சலி நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணி முதல் 4 மணி வரை பாராளுமன்றம் வளாகத்தில் இடம்பெறவுள்ளது. இதனால், நாளைய தினம் நடைபெறவிருந்த பாராளுமன்ற அமர்வு இடம்பெறாதென பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனாலேயே நாளை (03) நடத்தவிருந்த பாராளுமன்ற அமர்வை நடத்தாமலிருக்க நேற்று இடம் பெற்றுள்ள பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழு கூட்டத்தில் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சியின் இணக்கப்பாட்டுடன் தீர்மானிக்கப்பட்டது. நேற்றைய தினம் பிற்பகல் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் தலைமையில் பிரதமர் தினேஷ் குணவர்தன உள்ளிட்டோரின் பங்கேற்புடன் இடம்பெற்ற பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழு கூட்டத்திலேயே, இந்த தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டதாக பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.ஜயலத் பெரேரா தெரிவித்துள்ளார்.

## உள்ளக பயிற்சியை ஆரம்பிக்க...

இதுதொடர்பான நிகழ்வு கொழும்பு மருத்துவ பீட கேட்போர் கூடத்தில் சுகாதார அமைச்சின் செயலாளர் விசேட வைத்தியர் பாலித தலைமையில் நேற்று (01) நடைபெற்றது.

இங்கு கருத்து தெரிவித்த சுகாதார அமைச்சின் செயலாளர் டொக்டர் பாலித மஹிபால: நாடளாவிய ரீதியில் 68 வைத்தியசாலைகளில் நியமிக்கப்படவுள்ள இவர்கள் ஒரு வருட பயிற்சியில் ஈடுபடவுள்ளனர். இலங்கை மருத்துவ பீடங்களில் 05 வருட கற்கைகளை வெற்றிகரமாக முடித்த இவர்களுக்கு மாதாந்த உதவித் தொகையை வழங்கவும் சுகாதார அமைச்சு ஏற்பாடு செய்துள்ளது. நோயாளிகளுக்கு தவறான மருந்துகள் வழங்கப்படுவதால் ஏற்படும் பிரச்சனைகளால், சுமார் இருபது சதவீதமானோர் வைத்தியசாலைகளில் சிகிச்சைகளுக்காக வருகின்றனர். எமது நாட்டிலும் இவ்வாறு அனுமதிக்கப்படும் நோயளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இந்த விடயங்களை கவனத்தில்கொள்ளும் போது நோயாளிகளின் பாதுகாப்பு மிகவும் முக்கியமானது. மருந்துகளின் தர உறுதி மற்றும் நோயாளிகளின் பாதுகாப்புக்காக செயல்படுத்தப்படும் திட்டங்களை வலுப்படுத்துவது மிக அவசியம்.

ஒரு வருட பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்யும் வைத்தியர்கள் இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்யப்படுவார்கள். இலங்கையில் மருத்துவர்களாக பணியாற்றும் திறன் இவர்களுக்கு உண்டு. தற்போது 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மருத்துவர்கள் அரசு மருத்துவமனைகளில் பணிபுரிந்து வருவதாகவும் சுகாதார அமைச்சின் செயலாளர் டொக்டர் பாலித மஹிபால மேலும் தெரிவித்தார்.

## அரச நிர்வாக சேவை அதிகாரிகளுக்கான...

இதுவரையான சேவைக்கால அடிப்படையில் வழங்கப்பட்ட விசேட கொடுப்பனவிற்குப் பதிலாகவே இத்தொகை வழங்கப்படுகிறது.

இவர்களுக்கான சேவை காலத்தின் அளவைப் பொருட்படுத்தாமல் மாதாந்த கொடுப்பனவாக விஷேடமாக இதை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான தீர்மானமும் கடந்த (24) எடுக்கப்பட்டது. இதற்கிணங்க இந்த கொடுப்பனவானது பொறியியல் சேவை, கட்டடக்கலை சேவை, மற்றும் நில அளவையாளர் சேவை அதிகாரிகளுக்கும் வழங்கப்படவுள்ளதாக பொது நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை பொது நிர்வாக, உள்நாட்டலுகள், மாகாண சபைகள், உள்ளூராட்சி சபை அமைச்சின் செயலாளர் பிரதீப் யசரத்னவின் கையொப்பத்துடன், அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள்,திணைக்களங்கள் அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## நீதிமன்ற தீர்ப்பை மதித்து...

பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பிலான வழக்கு எதிர்வரும் நவம்பர் வரை, ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.வழக்கின் தீர்ப்பு வழங்கப்படும் போது மேலும் வாழ்க்கைச் செலவு அதிகரிக்க கூடும். இதைக் கருத்திற்கொண்டு பெருந்தோட்ட நிறுவனங்கள் இவ்விடயத்தில் இணக்கப்பாட்டிற்கு வர வேண்டும். ஐந்து பரம்பரையாக பெருந்தோட்ட கம்பனிகளுக்கு இலாபமீட்டிக் கொடுத்த தொழிலாளர்களுக்கு எதிராக நிறுவனங்கள் வழக்கு தொடர்ந்துள்ளன. இதை எண்ணி வெட்கி தலை குனிய வேண்டும். மே, 21இல் வெளியிடப்பட்ட வர்த்தமானிக்கமைய, நீதிமன்ற தீர்ப்பிற்கு மதிப்பளித்து நிலுவைத் தொகையுடன் இம்மாதம் சம்பளம் வழங்கப்பட வேண்டும். இல்லையேல் பெருந்தோட்டங்களுக்குள் பல தொழில் பிணக்குகள் முகமைத்துவ சிக்கல் நிலைகள் ஏற்படக்கூடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## பிணையில் விடுவிக்கக் கோரும்...

சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. கொழும்பு மேல் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட இத் தண்டனையை சவாலுக்குட்படுத்தி தம்மை பிணையில் விடுவிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேற்படி மேன்முறையீட்டை அவர் செய்துள்ளார்.

இந்த பிணை மனு மீதான விசாரணை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா முன்னிலையில், நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.இதன் போது ஜூலை (04) நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு சட்டமா அதிபருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

தெமட்டகொடையில் டிஃபென்டர் வாகனத்தை பயன்படுத்தி இளைஞரான அமில பிரியங்கரவை கடத்தி, தாக்குதல் நடத்தியதுடன் அச்சுறுத்தல், விடுக்கப்பட்டமை உள்ளிட்ட 18 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள வழக்கிலே ஹிருணிகா பிரேமச்சந்திர குற்றவாளியாகக் காணப்பட்டார்.

ஹிருணிகா பிரேமச்சந்திர இந்த வழக்கில் ஒன்பதாவது குற்றவாளியாவார்.அவர் குற்றமற்றவர் எனத் தெரிவித்த தால், அவருக்கு எதிராக குற்றவியல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இதில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட ஹிருணிகா பிரேமச்சந்திரவுக்கு மூன்று ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதுடன் ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் தலா 20 ஆயிரம் ரூபா தண்டப் பணமும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கடனை செலுத்த காலஅவகாசம்...

குறைத்தமை போன்ற விடயங்களால் நாட்டுக்கு நன்மையே கிடைத்துள்ளன. கடன் வழங்கியவர் அந்தக் கடனை பெற்றுக்கொள்ள இன்னொரு கால அவகாசத்தை கோரியுள்ளார்.இதனால், நாட்டுக்கு நன்மையே கிடைத்துள்ளது.இன்றைய (02) பாராளுமன்ற அமர்வுகுறித்து கருத்து வெளியிட்ட இராஜாங்க அமைச்சர்,கடன் மறுசீரமைப்பு தொடர்பான பல பொருளாதார விடயங்கள் பாராளுமன்றத்தில் பேசப்படும் என்றார்.

## பிளவுகளைக் குறைக்க...

தலைவராக நம் நாட்டில் ஏற்பட்ட பிளவுகளைக் குறைக்க அயராது பாடுபட்டார். அவரது இழப்பிற்கு நாடு முழுவதும் இரங்கல் தெரிவிக்கும்.சம்பந்தனின் அரசியல் அனுபவங்கள் வளரந்து வரும் இளைய தமிழ் அரசியல்வாதிகளுக்கு முன்னுதாரணமாக அமையும். இவ்வாறு ஜனாதிபதி தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## சம்பந்தனின் வெற்றிடத்திற்கு...

திருகோணமலை மாவட்டத்தில் தோல்வியடைந்தவர்கள் பட்டியலில் அவர் முதலாவதாக காணப்பட்டார். அந்த வகையில் கதிரவேல் சண்முகம் குகதாசன் அடுத்த வாரம் திருகோணமலை மாவட்டத்தின் புதிய பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப் பிரமாணம் செய்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இன்றைய பலன்கள்

(02.07.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
திட்டமிட்ட பணம் வரவுகளில் தாமதங்கள் உண்டாகும். சில செயல்களில் கவனமாக இருப்பது அவசியம்.

**ரிஷபம் :**
பணம் வரும் வழிகளில் அதிக கவனம் செலுத்துவீர்கள். நீண்டகால நண்பரை திடீரென்று சந்தித்து மகிழ்வீர்கள்.

**மிதுனம்:**
பணிகளில் கவனமும் நிதானமும் தேவைப்படும் நேரம் இது. வார்த்தைகளை கவனமாக கையாள்வது அவசியம்.

**கடகம்:**
உத்தியோகத்தர்கள் தங்கள் பணிகளில் கவனமும் நிதானமும் கொண்டு செயலாற்றுவது நல்லது.

**சிம்மம்:**
முக்கிய ஆவணங்களில் கையெழுத்திடுவதை தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தர்கள் தங்கள் வேலைகளில் மிகுந்த கவனமாக இருப்பது அவசியம்.

**கன்னி:**
உத்தியோகத்தில் சிலருக்கு அலுவலகத்திலேயே பதவி உயர்வும் சம்பள உயர்வு கிடைக்கக்கூடும். சொந்த தொழிலில் பணிகள் சுறுசுறுப்பாக நடைபெறும்.

**துலாம்:**
முக்கிய முடிவுகளை தக்க நண்பர்களின் ஆலோசனையின் பேரில் எடுப்பது தான் நன்மை தரும். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் ஆதரவுடன் சிலர் சலுகைகளை அனுபவிப்பீர்கள்.

**விருச்சிகம்:**
மனதிற்கு பிடித்தவர்களின் சந்திப்பு மகிழ்ச்சி அளிக்கும். உத்தியோகத்தர்களில் சிலருக்கு பணி நிரந்தரமாக வெளியூர் பயணம் செல்ல நேரிடும் .

**தனுசு:**
உத்தியோகத்தில் உயர் அதிகாரிகளின் ஆதரவோடு சில சலுகைகளை பெறுவீர்கள். சொந்த தொழில் சிறப்பாக நடைபெறும் .

**மகரம்:**
எதிர்பார்த்த பணம் வரவு தாமதமாகலாம். அதே நேரம் செலவுகள் அவசரப்படுத்தும். உத்தியோகத்தல் உயர் அதிகாரிகள் அனுசரித்து நடந்து கொள்ளுங்கள்.

**கும்பம்:**
பண வரவுகள் திட்டமிட்டபடி வந்து சேர்ந்தாலும் செலவுகள் அதிகமாகும். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்று செய்ய வேண்டியது இருக்கும்.

**மீனம்:**
பண வரவுகளில் சிறு தடங்கல்கள் ஏற்பட்டு பின்னர் வந்து சேரும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் பொறுப்பில் உள்ள பதிவேடுகளை கவனமாக கையாளுங்கள்.

## இலவசக்கல்வியின்... (03ஆம் பக்கத் தொடர்)

பாராளுமன்றம் சென்று என்ன செய்தீர்கள் என சிலர் கேட்கின்றனர். உங்களுக்கும் கற்க இலவசக் கல்வி அளிக்கப்பட்டது. இலவசக் கல்வி பெரும் பொக்கிஷமாகும்.

எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா, பிலிப் குணவர்தன, மற்றும் .டி.ஏ.ராஜபக்ஷ ஆகியோர் பாரிய காடொன்றின் நடுவே சந்திரிகா குளத்தை ஆரம்பித்தனர். சந்திரிகா குளத்தின் மூலம் வளவ்வ சமவெளி பசுமையாகியது.

நான் நகர அபிவிருத்தி அமைச்சராக இருக்கும் போது ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு சமல் ராஜபக்ஷ, மகிந்த ராஜபக்ச, மற்றும் சீன தூதுவர் ஆகியோர் முதல் அடிதளத்தை இட்டனர் . கொழும்பு துறைமுகத்தை நல்ல துறைமுகமாக அபிவிருத்தி செய்வதற்கு ஐந்நூற்று இருபது வருடங்கள் தேவைப்பட்டன. கோட்டே இராச்சியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர், கொழும்பு துறைமுகத்தை அபிவிருத்தியடைந்த துறைமுகமாக மாற்ற ஐநூறு வருடங்கள் ஆனது.

ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை வடிவமைத்து எமது கடற்பரப்பில் பயணித்த கப்பல்களை இங்கு கொண்டு வருவதற்கு, மஹிந்த ராஜபக்ஷவுக்கு அதிக காலம் எடுக்கவில்லை என்றார்.

## டெவோன் 5 கப்பலில்... (03ஆம் பக்கத் தொடர்)

இவர்கள் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டிருந்த போது, கடலில் மிதந்து வந்த போத்தலில் காணப்பட்ட திரவத்தை மது என நினைத்து அருந்தியுள்ளனர்.

உடலுக்கு ஒவ்வாத இந்த திரவத்தினால் ஆறு பேரும் நோய்வாய்ப்பட்டதுடன் ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர். இவர்களில் 4 பேர் அதே கப்பலில் உயிரிழந்ததுடன் மற்றுமொருவர் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

அவ்வாறு உயிரிழந்தவர்களில் கப்பலின் தலைவர் 42 வயதான நயன காந்த, 24 வயதான பெதும் டில்ஷான், 32 வயதான சுஜித் சஞ்சீவ, 33 வயதான பிரதீப் நிஷாந்த மற்றும் 68 வயதான அஜித் குமார ஆகியோர் உள்ளடங்குகின்றனர். இவர்கள் எந்த திரவத்தை அருந்தினர் என்பது தொடர்பில் இதுவரை எதுவும் கண்டறியப்படவில்லை என, கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

## பொலிஸ் மா அதிபர்... (03ஆம் பக்கத் தொடர்)

பொலிஸ் பிரிவுகளுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களிடம் இப்பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையின் குறிக்கோள்,அறிக்கையின்மூலம்அடையாளம் காணப்பட்ட போதைக்கு அடிமையானவர்களை புனர்வாழ்வுக்கு அனுப்புவதும் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் போதைப்பொருள் விற்பனை செய்யக்கூடிய சந்தையை உடைப்பதும் ஆகும். கடந்த ஆறு மாதங்களில், ஒன்பது மாகாணங்களில் ‘யுக்திய’ நடவடிக்கைகளின் மூலம் 184,862 போதைப்பொருள் தொடர்பான சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர், அவர்களில் 5565 பேர் புனர்வாழ்வளிக்கப்பட்டுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தமிழ் முஸ்லிம் உறவின்... (03ஆம் பக்கத் தொடர்)

கட்சியை சிறப்பாக வழி நடத்திய ஆளுமையாக இராஜவரோதயம் சம்பந்தன் ஐயாவைப் பார்க்கிறேன். மாறி,மாறி ஆட்சிக்கு வந்த தென்னிலங்கை பேரினவாத அரசியல் தலைமைகள் வழங்கி வந்த "நிறைவேறாத" வாக்குறுதிகளை மையப்படுத்தியதாக அவரது வாதங்கள் பாராளுமன்றத்தின் உள்ளும் ,புறமும் ஆணித்தரமாகவும் ஆக்ரோஷமாகவும் ஒலித்தன.

பேரினவாத சக்திகளுக்கு சம்பந்தன் சிம்ம சொப்பனமாக சம்பந்தன் தோற்றமளித்தார்.

## குறைக்கப்பட்ட பஸ் கட்டணங்கள்...

தொடர்பில் போக்குவரத்து அமைச்சுக்கும் பஸ் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் இடையில் முக்கிய பேச்சுவார்த்தை நடைபெற்றது.இப்பேச்சு வார்த்தையின் பின்னரே, மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார். இதற்கிணங்க புதிதாக குறைக்கப்பட்டுள்ள கட்டணத்தின்படி ஆகக் குறைந்த கட்டணமாக, இதுவரை அறவிடப்பட்டு வந்த 30 ரூபா கட்டணம் 28 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.




# எனசல்கொல்ல மத்திய கல்லூரி கல்வி அபிவிருத்தி செயலகம். அதிபர் செயலகம் அங்குரார்ப்பணம்




கண்டி, தெல்தோட்டை எனசல் கொல்ல வித்துபதீப மத்திய கல்லூரியின் புனரமைக்கப்பட்ட கல்வி அபிவிருத்தி செயலகமும், அதிபர் காரியாலயமும் கடந்த 2024 ஜுன் மாதம் 27ம் திகதி வியாழக்கிழமை வெகு விமர்சையாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

கல்லூரியின் 75வது வருட நிறைவு பவள விழா நினைவாக பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் ஏற்பாட்டில் முன்னாள் அதிபர், ஆசிரியர்கள் கௌரவிப்பு நிகழ்வின் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்த கொழும்பு கொமோடிடிஸ் நிறுவனத்தின் தலைவர் கலாநிதி அல்ஹாஜ் எம். ஸி. பஹார்தீன் அவர்களின் பூரண நிதியுதவியுடன் கல்வி அபிவிருத்தி செயலகமும், அதிபர் காரியாலயமும் புனரமைக்கப்பட்டமை விசேட அம்சமாகும்.

எனசல்கொல்ல மத்திய கல்லூரியின் கௌரவ அதிபர் அல்ஹாஜ் எம்.ஜீ.எம். நயீமுல்லாஹ் (SLPS – 1, B.Ed. Hons) அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் தலைவி கொழும்பு அல் ஹிதாயா மகா வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் ஹாஜியானி நாஹூர் உம்மா காதர் ஜே.பி., கிளையின் செயலாளர் முஸ்லிம் விவாகப் பதிவாளர் அல்ஹாஜ் நாஹூர்ரஹீம் ஜே.பி. உட்பட கொழும்புக் கிளையின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள், கல்லூரி பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பாடசாலை முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் புதிதாக புனரமைக்கப்பட்டுள்ள செயலகப் பெயர்ப் பலகையினை பிரதம அதிதியின் பாரியார் திருமதி ஹாஜியானி நூர் ஸஹ்ரியா பஹார்தீன் அவர்கள் திரை நீக்கம் செய்து வைத்தார்.




பதுளை பண்டாரவளை அயிஸ்லேபி தமிழ் மகா வித்தியாலயத்திற்கு, 15 இலட்சம் ரூபாய் பெறுமதியான டெப் கணினிகளை, கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் கையளிக்கும்போது எடுக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம்.

# பால் பண்ணை, உற்பத்தியை அபிவிருத்தி செய்ய தொழில்நுட்ப வசதிகளை அதிகரிக்க நடவடிக்கை

(அக்குறணை குறூப் நிருபர்)

இலங்கைக்கான திரவப் பல் உற்பத்தியில் 30 சதவீதத்திற்கு மேல் மத்திய மாகாணத்தில் மேற்கொள்ளப்படுவதாகவும், எனவே மத்திய மாகாணத்தில் பால் உற்பத்தியை அபிவிருத்தி செய்வது தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ள உள்ளதாக நியூசிலாந்து உயர் ஸ்தானிகர் தெரிவித்தார்.

அதற்கு அமைய வர்த்தக ரீயில் இடம் பெறும் பாற் பண்ணைகளை அபிவிருத்தி செய்யவும் அதற்கான தொழில் நுட்ப வசதிகளை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்க உள்ளதாகவும் அங்கு அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கைக்கான நியூசிலாந்து உயர் ஸ்தானிகர் டேவிட் பயின் (David Pine) மத்திய மாகாண ஆளுநர் லலித் யூகமகே ஆகியோர்களுக்கிடையிலான சந்திப்பொன்று அண்மையில் கண்டியிலுள்ள ஆளுநர் காரியாலயத்தில் இடம் பெற்ற போதே அவர் தெரிவித்தார்.

நியுஸிலாந்து தூதுவருக்கும் ஆளுநருக்கும் இடையில் நினைவுச் சின்னங்களும் பரிமாறப்பட்டன.

# இந்திய கடற்றொழிலாளர்களை கைது செய்ய முயன்ற கடற்படை வீரர் உயிரிழந்த சம்பவத்தை கண்டித்து போராட்டம்

(யாழ்.விசேட நிருபர்



இந்திய கடற்றொழிலாளர்களை கைது செய்ய முற்பட்ட வேளை உயிரிழந்த கடற்படை வீரருக்கு அஞ்சலி செலுத்தி, குறித்த சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்தும், இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை தடுத்து நிறுத்த கோரியும் யாழ்ப்பாணத்தில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ் மாவட்ட கடற்றொழிலாளர்கள் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளனத்தினரால் இன்றைய தினம் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் மருதடி சந்தியில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட குறித்த போராட்டம் இந்திய துணை தூதரகத்தை நோக்கி சென்றது

தூதரகத்துக்கு அருகில் போராட்டக்காரர்களை இடைமறித்த பொலிஸார், தூதரக அதிகாரிகளை சந்திப்பதற்கு ஐந்து பேருக்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து இந்திய துணைத் தூதரக அதிகாரியிடம் சம்மேளத்தினரால் மகஜர் கையளிக்கப்பட்டது.

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து கடந்த 24ஆம் திகதி மீன் பிடியில் ஈடுபட்ட இந்திய கடற்றொழிலாளர்களை கைது செய்ய முற்பட்ட வேளை, கடற்றொழிலாளர்களின் செயற்பாட்டினால், கடற்படை வீரர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறான செயற்பாடு மீள ஒரு தடவை நடைபெறாது இருக்க இந்திய மத்திய அரசும், தமிழக அரசும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்கள் கோரியுள்ளனர். கோரிக்கையை முன் வைத்து மகஜர் ஒன்றினையும் இந்திய துணைத்தூதரக அதிகாரிகளிடம் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்கள் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளனத்தினர் கையளித்துள்ளனர்.

வடக்கின் உதயம்

# நெடுந்தீவில் 25 தமிழக கடற்றொழிலாளர்கள் கைது

(யாழ்.விசேட நிருபர்

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்த குற்றச்சாட்டில் 25 தமிழக கடற்றொழிலாளர்கள் நேற்று (01) அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் நெடுந்தீவு கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த வேளையே அவர்கள் கைது செய்யப்பட்டதுடன், அவர்களின் 4 படகுகளையும் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

கைதான கடற்றொழிலாளர்கள் மயிலிட்டி மீன்பிடி துறைமுகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ள நிலையில் விசாரணைகளின் பின்னர் கடற்றொழில் நீரியல்வளத்துறை திணைக்களத்தினரின் ஊடாக ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# வெளிநாடு அனுப்புவதாக 50 இலட்சம் மோசடி

(யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளைஞனை ஒருவரை வெளிநாட்டிற்கு அனுப்பி வைப்பதாக கூறி, 50 இலட்ச ரூபாய் மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மானிப்பாய் பகுதியை சேர்ந்த பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நீண்ட நாட்களாகியும் வெளிநாட்டிற்கு அனுப்பி வைக்காத நிலையில், தனது பணத்தினை திருப்பி கேட்ட வேளை, அதனை கொடுக்க மறுத்ததால், இளைஞன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தார்.

பொலிஸார், மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பெண்ணை கைது செய்து, விசாரணைக்கு உட்படுத்தி வருகின்றனர்.


## சிறியளவிலான விவசாய வணிகம் மற்றும் மீண்டெழல் கருத்திட்டம்

SARP

## கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

சிறியளவிலான விவசாய வணிகம் மற்றும் மீண்டெழல் கருத்திட்டத்தினால் பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பதற்காக 2024-07-02ஆம் திகதிய டெய்லி நியூஸ் பத்திரிகையில் விளம்பரமொன்று பிரசுரிக்கப்பட்டுள்ளது. இயைபுடைய தகைமைகள், அனுபவம் மற்றும் விண்ணப்பிக்கும் நடைமுறை, சம்பள அளவு தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்வதற்கு தயவுசெய்து www.sarp.lk எனும் இணையதளத்திற்குப் பிரவேசிக்கவும். குறித்த இணையதள பக்கத்தை பரீட்சித்துப் பார்த்து உங்கள் விண்ணப்பப் படிவத்தை பின்வரும் முகவரிக்கு அனுப்புமாறு SARP செயற்றிட்டம் கேட்டுக்கொள்கின்றது.

1. அபிவிருத்தி அதிகாரி (நிர்வாகம் மற்றும் பெறுகை) (PS 06 Category A) - பதவி 01

விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் 2024-07-16.

**கருத்திட்டப் பணிப்பாளர்,**
**சிறியளவிலான விவசாய வணிகம் மற்றும் மீண்டெழல் கருத்திட்டம்,**
**2/2/1, கத்தவத்த வீதி,**
**பெலவத்த,**
**பத்தரமுல்ல.**


# தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் பெரிதும் மதிக்கப்படும் ஒரு தலைவர் சம்பந்தன் ஐயா

சுப்பையா ஆனந்தகுமார்



இலங்கை தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர் இரா. சம்பந்தனின் மறைவு தமிழ் பேசும் மக்களுக்கு பேரிழப்பாகும். அரசியல் தீர்வை பெறுவதற்காக அறவழியிலும், இராஜதந்திர வழியிலும் அவர் முன்னெடுத்த செயற்பாடுகளை ஒருபோதும் மறக்க முடியாது – என்று ஜனாதிபதியின் கீழ் இயங்கும் தொழிற்சங்க முடிவுகளை எடுக்கும் மூன்றுபேர் கொண்ட குழுவின் உறுப்பினரும், ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளருமான சுப்பையா ஆனந்தகுமார் தெரிவித்துள்ளார்

" 1977 ஆம் ஆண்டு தனது பாராளுமன்ற அரசியல் பயணத்தை ஆரம்பித்த இரா. சம்பந்தன், பாராளுமன்றத்துக்குள்ளும், பொது வெளியிலும் தமிழ் பேசும் மக்களின் குரலாக ஒலித்தார். நோய் வாய்ப்பட்ட பின்னர்கூட இராஜதந்திர சந்திப்புகளில் அவர் ஈடுபட்டு வந்ததை காணமுடிந்தது. அந்தளவுக்கு தம் சமூகம் மீது பற்று வைத்திருந்த தலைவர் அவர் என்பதையே அது எடுத்துக்காட்டுகின்றது.

இலங்கையின் எதிர்க்கட்சி தலைவர் பதவியை வகித்த இரண்டாவது தமிழ்த் தலைவர் என்ற புகழும் அவரை சாரும். எதிர்க்கட்சி தலைவராக இருந்த காலகட்டத்திலும் எப்படியாவது இனப்பிரச்சினைக்கு தீர்வை கண்டுவிட வேண்டும் என போராடியவர். அவர் என்றும் வன்முறை வழியை ஆதரித்தது கிடையாது. பேச்சுவார்த்தை மூலம் தீர்வை அடையவே முற்பட்டார்.

அதற்கான வழிமுறைகளை ஊக்குவித்தார். சலுகைகளுக்காக கொள்கைகளை காட்டிக் கொடுத்தது கிடையாது.

தேசிய ரீதியில் மட்டுமல்ல சர்வதேச ரீதியிலும் பெரிதும் மதிக்கப்படும் தலைவர்களில் ஒருவராக சம்பந்தன் ஐயா திகழ்ந்தார்.

அவரின் மறைவு தமிழ் பேசும் மக்களுக்கு பேரிழப்பாகும்.

அன்னாரின் பிரிவால் வாடும் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்கள்.

அன்னாரின் ஆத்மா இளைப்பாற இறைவனை பிரார்த்திக்கின்றேன்." என தெரிவித்துள்ளார்.

# தனியார் பேருந்துகள் பணி புறக்கணிப்பு

(தலவாக்கலை குறூப் நிருபர்

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு பேருந்துகள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் காரணமாக தலவாக்கலை நுவரெலியா பிரதான வீதியில் சேவையில் ஈடுபட்டு வந்த அனைத்து தனியார் பேருந்துகளும் நேற்று (01) பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

லிந்துலை பிரதேசத்தில் நேற்று முன் தினம் (30) இரவு வேளையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு தனியார் பேருந்துகளை சில நபர்கள் தாக்கி சேதப்படுத்தியதாகக் கூறி தனியார் பேருந்து உரிமையாளர்கள் இந்தப் பணிப்புறக்கணிப்பை ஆரம்பித்துள்ளனர். இதனால் தலவாக்கலை – நுவரெலியா மார்க்கத்தில் பயணிக்கும் அனைத்து தனியார் பேருந்துகளும் இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதாக மத்திய மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலவாக்கலை நிலைய பொறுப்பதிகாரி தசந்தருவன் அபேவிக்ரம தெரிவித்தார்.

இரண்டு பேருந்துகளின் முன்பக்க கண்ணாடிகள் உடைக்கப்பட்டதாகவும், சில பேருந்துகளின் முன்பக்க விளக்குகள் அகற்றப்பட்டதாகவும் பேருந்துகளின் உரிமையாளர் தெரிவித்தார். பேருந்துகள் நிறுத்தப்பட்ட இடத்தில் பொருத்தப்பட்டுள்ள பாதுகாப்பு கமராக்களை பரிசோதித்து சம்பந்தப்பட்ட நபர்களை கைது செய்ய நடவடிக்கை எடுப்பதாக லிந்துலை பொலிஸார் தெரிவித்துள்ளனர். தலவாக்கலை – நுவரெலியா பிரதான வீதியில் பயணிக்கும் தனியார் பேருந்துகளின் வேலை நிறுத்தம் காரணமாக பாடசாலை மாணவர்கள், அலுவலக ஊழியர்கள், தனியார் நிறுவன ஊழியர்கள் மற்றும் ஏனைய பயணிகள் கடும் சிரமங்களையும் பல்வேறு அசௌகரியங்களையும் எதிர்நோக்கியுள்ளனர்.


DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA

## MINISTRY OF IRRIGATION

## REQUEST FOR BIDS (RFB)

**Climate Resilience Multi-Phase Programmatic Approach (L.N.: 8996-LK)**

**NATIONAL COMPETITIVE BIDDING**

**Procurement of PABX Solution for Inter-communication of Disaster Management Center and District Disaster Management Coordinating Units**

**Contract No : SLMOI/CRES/DMC/G/NCB/40**

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a loan from the International Bank for Reconstruction and Development (IBRD) towards the cost of Climate Resilience Multi-Phase Programmatic Approach of Ministry of Irrigation, and intends to apply part of the proceeds of this loan to payments under the contract for **Procurement of PABX Solution for inter-communication of DMC and DDMCUs.**
2. The Chairman, **Project Procurement Committee** on behalf of **Climate Resilience Multi-Phase Programmatic Approach** now invites sealed Bids from eligible and qualified Bidders for **Procurement of PABX Solution for inter-communication of DMC and DDMCUs.**
3. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB) procedure.**
4. Interested bidders may obtain further information from **Project Director, Climate Resilience Multi-Phase Programmatic Approach, No. 11, Jawatte Road, Colombo 05, T.P: 0112507855/0112058451, Fax: 0112058451, E-mail pdcresmpa@gmail.com,** and inspect the bidding documents free of charge **from July 02, 2024 to July 25, 2024** during normal working days from **9.30 a.m. to 3.30 p.m.**
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the address below during normal working days **from July 02, 2024 to July 25, 2024 until 3:30 p.m.** upon payment of a non-refundable fee of **LKR. 7,500.00.** The method of payment will be by cash.
6. Bids shall be delivered in duplicate to the address given below on or before **July 26, 2024, at 2:00 p.m.** Late bids will be rejected. Bids will be opened soon after closing of bids in the presence of the bidders' representatives who choose to attend.
7. Bids shall be valid until **November 13, 2024.**
8. All Bids shall be accompanied by a **Bid Security,** (as per the format given in the Bidding Document) as follows :

   **LKR 400,000.00**

   Bid Security shall be valid until **December 11, 2024.**
9. Pre-Bid Meeting will be arranged on **July 12, 2024 at 10:00 a.m.** at the Conference Room, Climate Resilience Multi-Phase Programmatic Approach, No.11, Jawatte Road, Colombo 05.

**Chairman,**
**Project Procurement Committee**
**Climate Resilience Multi-Phase Programmatic Approach**
**No. 11, Jawatte Road,**
**Colombo 05.**


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
NLB

ஞாயிறு 2024.06.30

உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் 5520
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.35,570,128.00
ஆங்கில எழுத்து L — வெற்றி இலக்கங்கள் 9 1 6 5 1 8

**அத சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் 095
ஆங்கில எழுத்து L — வெற்றி இலக்கங்கள் 6 5 1 8

**கொவிசெத**
சீட்டிழுப்பு இலக்கம் 3762 — சீட்டிழுப்பு திகதி 2024.06.30
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.63,435,105.16
ஆங்கில எழுத்து W — வெற்றி இலக்கங்கள் 12 39 46 76 — விசேட எழுத்து W
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 78496

**Mega POWER**
சீட்டிழுப்பு இலக்கம் 1868 — 2024.06.30 — 71133
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.437,434,982.00
ஆங்கில எழுத்து H — சுப்பர் இலக்கம் 08 — வெற்றி இலக்கங்கள் 01 25 57 72
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**Lucky 7 VIP**
திகதி 2024.06.30 — சீட்டிழுப்பு இலக்கம் 346
ஆங்கில எழுத்து X — L7 எழுத்து X
வெற்றி இலக்கங்கள் 6 2 8 0 4 2
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 31,972,431.28

**ராசி சுப பலன்**
திகதி 2024.06.30 — சீட்டிழுப்பு இலக்கம் 829
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,711,943.96
வெற்றி இலக்கினம் சிம்மம் — வெற்றி இலக்கங்கள் 21 32 34 45
தனயோக இலக்கம் 83262 — நாளுக்கான விதி எண் 01

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம் 1550 — 2024.06.30
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 98,772,189.36
ஆங்கில எழுத்து R — வெற்றி இலக்கங்கள் 04 26 30 75 — விசேட எழுத்து R
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 50160

# கிழக்கின் குரல்



வவுணதீவு

## சந்தைக் கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டுவிழா

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு வவுணதீவு சந்தைக் கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டு விழா இராஜாங்க அமைச்சர் சிவ.சந்திரகாந்தன் தலைமையில் நடைபெற்றது.

வவுணதீவு பிரதேச சபையின் செயலாளர் என்.கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தன் கலந்துகொண்டார்.

இந்நிகழ்வில் சிறப்பு அதிதியாக முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பூ.பிரசாந்தன், மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் சத்தியானந்தி நமசிவாயம் உள்ளிட்டோர் கலந்து சிறப்பித்தனர்.

உள்ளூராட்சி மன்றங்களின் இயலுமையை கட்டியெழுப்பும் திட்டத்தின் கீழ் சுமார் ரூ.20.54 மில்லியன் செலவில் சந்தைக் கட்டடத் தொகுதி நிர்மாணிக்கப்படவுள்ளது.

அதனைத் தொடர்ந்து மணல் வீதிகள் அற்ற கிராமம் திட்டத்தின் கீழ் உன்னிச்சை நெடியமடு பகுதியில் காணப்பட்ட உள்ளக மணல் வீதி கிறவல் வீதியாக மாற்றியமைக்கப்பட்டு இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தனால் மக்கள் பாவனைக்காக திறந்துவைக்கப்பட்டது.



## தென்கிழக்குப் பல்கலைக்கழக பீடாதிபதியாக பேராசிரியர் ஏ.எம்.எம். முஸ்தபா தெரிவு

(ஒலுவில் விசேட நிருபர்)



தென்கிழக்குப் பல்கலைக்கழக முகாமைத்துவ வர்த்தக பீடத்தின் புதிய பீடாதிபதியாக பேராசிரியர் ஏ.எம்.எம். முஸ்தபா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பீடாதிபதியை தெரிவு செய்வதற்காக அண்மையில் (28) நடைபெற்ற தெரிவுப் போட்டியில் பீடத்தின் உயர் சபை உறுப்பினர்களின் பெரும்பான்மை ஆதரவுடன் இவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் வியாபாரப் பொருளியலில் சிறப்புப் பட்டம் பெற்று தனது முதுதத்துவமாணிக் கற்கையை பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் கலாநிதி கற்கையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் கற்றுள்ளார்.

பீடாதிபதி பேராசிரியர் முஸ்தபா தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் தற்காலிக பொருளியல் கட்டுரையாளர், உதவி விரிவுரையாளர், தற்காலிக விரிவுரையாளர், ஒப்பந்த அடிப்படையிலான விரிவுரையாளர், சிரேஷ்ட விரிவுரையாளர், பேராசிரியர் என பல பதவி நிலைகளில் கடந்த 25 வருடங்களாக சிறப்பான சேவையை வழங்கி வருகிறார்.

தேசிய ரீதியில் பல பல்கலைக்கழகங்களில் வருகை தரு விரிவுரையாளராக கடமையாற்றுவதோடு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தேசிய பல்கலைக்கழக தர நிலைப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தில் ஒரு மதிப்பீட்டாளராகவும் நியமிக்கப்பட்டதோடு இலங்கை பல்கலைக்கழக பொருளியல் சங்கத்தின் ஆரம்பகால உறுப்பினராகவும் செயற்பட்டு வருகின்றார்.

உலகளாவிய ரீதியில் பல கல்வி ஆய்வு மாநாடுகளில் சிறப்பு பேச்சாளராக கலந்து கொண்டதோடு அமெரிக்க பொருளியலாளர் சங்கம் மற்றும் உலக பொருளியலாளர் சங்கத்திலும் ஆயுட்கால உறுப்பினராகவும் செயற்பட்டு வருகின்றார்.

## சமாதான நீதவானாக நியமனம்

(மூதூர் தினகரன் நிருபர்)



திருகோணமலை மூதூரைச் சேர்ந்த முகம்மது இக்பால் முகம்மது இப்றாஸ் மூதூர் மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிபதி திருமதி. தஸ்னீப் பௌசான் முன்னிலையில் அண்மையில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

மூதூர் அல்ஹிலால் மத்திய கல்லூரியின் பழைய மாணவரான இவர் மூதூர் ரவ்ழத்துல் ஜன்னா அரபுக்கல்லூரியின் பிரதி அதிபரும், மூதூர் காதி நீதிமன்றத்தின் செயலாளரும், அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபை மூதூர் கிளையின் உறுப்பினரும், சமூக சேவையாளருமாவார்.



சவூதி அரேபியா ரியாத் ஆளுநர் பைசல் பின் பந்தர் பின் அப்துல் அஸீஸ் மற்றும் சவூதிக்கான இலங்கை தூதுவர் அமீர் அஜ்வத் ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று அண்மையில் நடைபெற்றது. இலங்கைக்கும் சவூதி அரேபியாவுக்கும் இடையிலான வரலாற்று உறவுகள் குறித்து இதன்போது மிக நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றது. இரு நாடுகளுக்குமிடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்தும் ஆராயப்பட்டன. (படம்: புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

## அரச அங்கீகார தமிழ்-ஆங்கில மொழிபெயர்ப்பாளராக நியமனம்

(துறைநீலாவணை நிருபர்)



அம்பாறை மாவட்டத்தின் காரைதீவு - 02, உடையார் வீதியைச் சேர்ந்த பரசுராமன் உதயகுமார் அரச அங்கீகாரம் பெற்ற தமிழ் - ஆங்கில மொழிபெயர்ப்பாளராக கல்முனை மாவட்ட நீதிபதி ஏ.எம்.எம்.றியால் முன்னிலையில் கடந்த 2024. 06. 27 அன்று சத்தியப் பிரமாணம் செய்தார்.

பட்டிருப்பு கல்வி வலயத்திலுள்ள மகிழூர் சரஸ்வதி மகாவித்தியாலயத்தில் சிரேஷ்ட ஆங்கிலபாட ஆசிரியராகப் பணியாற்றும் இவர், பஸ்துன்ரட்ட தேசிய கல்வியற் கல்லூரிக்குத் தெரிவாகி ஆங்கிலப் பாட தேசிய டிப்ளோமாவை பூர்த்தி செய்துள்ளார். இதனைத் தொடர்ந்து பேராதனை கல்விக் கல்லூரியில் ஆங்கில மொழி மூலம் கல்விமாணி பட்டத்தைப் பெற்றது, தேசிய கல்வி நிறுவனத்தில் ஆங்கிலமொழி மூலம் கல்வி முதுமணி பட்டம் பெற்றார்.

கல்விப் புலத்தில் பதினெழு வருட காலமாக ஆங்கில பாட ஆசிரியராகவும் ஆங்கிலபாட வளவாளராகவும் பணியாற்றும் இவர் காரைதீவு கிராமத்திலுள்ள பல்வேறு சமூகநல அமைப்புக்களில் பல பதவிகளை வகித்து வருகின்றார்.

இவர் காரைதீவு 07 ஐச் சேர்ந்த பரசுராமன் தங்கநாயகம் தம்பதியினரின் புதல்வராவார்.

## எரிபொருள் நிரப்பு வாகனம் மின்கம்பத்துடன் மோதி விபத்து

(கந்தளாய் தினகரன் நிருபர்)

தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் எரிபொருள் நிரப்பு வாகனம் மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாக தம்பலகாம போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பிலிருந்து திருகோணமலை நோக்கி எரிபொருள் நிரப்புவதற்காக சென்ற வாகனமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது. வாகனத்தில் பயணித்த சாரதி உட்பட உதவியாளரும் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர். தற்சமயம் அவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேலும் மோதுண்ட வாகனத்தின் முன்பகுதி முழுமையாக சேதமடைந்துள்ளதோடு, இரு வீடுகள் பகுதியளவில் பாதிக்கப்பட்டுள்ளன. மின்கம்பங்கள் சேதமடைந்து மின் கம்பிகள் அறுந்து அப்பிரதேசத்தில் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

அதேவேளை பொலிஸார் தொடர்ந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தாண்டவன்வெளி தூய காணிக்கை அன்னை ஆலய 400 ஆவது நிறைவு விழா

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)



தாண்டவன்வெளி தூய காணிக்கை அன்னை ஆலயத்தின் 400 ஆவது நிறைவு விழாவை முன்னிட்டு மறைக்கல்வி பாடசாலையை புதுப்பொழிவுடன் புனர்நிர்மாணம் செய்து ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு தாண்டவன்வெளி பங்குதந்தை ரி. ஏ. யூலியன் அடிகளாரின் தலைமையில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பழைமையான ஆலயங்களில் ஒன்றான தாண்டவன்வெளி தூய காணிக்கை மாதா ஆலயத்தில் மறைக்கல்வி பாடசாலை கட்டடத்தை மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் திறந்து வைத்தார்.

'மறைக்கல்வியை கற்றுக்கொள்வோம் அருள் வாழ்வினை பெற்றுக்கொள்வோம்' எனும் தொனிப்பொருளில் இந்நிகழ்வு நடைபெற்றது.

மறைக்கல்வி பாடசாலையில் யேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றை பிரதிபலிக்கும் அழகிய சுவர் ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இதன்போது ஓய்வு பெற்ற சிரேஷ்ட மறைக்கல்வி ஆசிரியர்களுக்கு அதிதிகளால் கௌரவம் வழங்கப்பட்டதுடன் மாவட்ட அரசாங்க அதிபருக்கு நினைவுச்சின்னம் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மறைக்கல்வியானது மாணவர்களிடையே ஒழுக்க விழுமியத்தை மேம்படுத்தி சிறந்த பிரஜையாக மாற்றுவதற்கு பாரிய சேவையை செயலாற்றி வருகின்றது.

இந்நிகழ்வில் கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் அருட்பணி ஏ.ஏ நவரத்தினம் அடிகளார், அருட்பணி பிறைனர் செலர் அடிகளார், அருட் பணி லோரன்ஸ் அடிகளார், அருட் சகோதரிகள்,பெற்றோர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## பல்லின சிறுவர்களின் ஆளுமை பண்பில் ஐக்கியத்தை ஏற்படுத்தும் வேலைத் திட்டங்கள்!

(கிண்ணியா மத்திய நிருபர்)

திருகோணமலை மாவட்ட ஐக்கிய மதங்களின் முனைப்பு (United Religious Initiative) என்ற அமைப்பின் 25 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பல்வேறு வேலைத்திட்டங்கள் திருகோணமலை சீனக்குடா பகுதியில் அண்மையில் நடைபெற்றன.

திருகோணமலை மாவட்ட சர்வோதய நிலையத்தின் அனுசரணையுடன், மாவட்ட ஐக்கிய மதங்களின் முனைப்பு அமைப்பின் தலைவர் அப்பு குருக்கள் சுப்பிரமணியம் சர்மா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சமாதான ஊர்வலம், மரம் நடுகை மற்றும் சிரமதான பணிகள் என்பன மேற்கொள்ளப்பட்டன. பௌத்தம், இந்து,இஸ்லாமிய, கிறிஸ்தவ ஆலயங்களிலுள்ள பிரத்தியேக வகுப்புகளில் கல்வி பயிலும் மாணவர்கள் இவ்வேலைத்திட்டங்களில் ஈடுபடுத்தப்பட்டனர். மாணவர்கள் சீனக்குடா ஸ்ரீ போதி ராஜராம விகாரையில் சிரமதான பணிகளிலும் மரம் நடுகைகளிலும் ஈடுபட்டனர். பின்னர் அங்கிருந்து சீனக்குடா சென்.அந்தோனியார் ஆலயத்துக்கு சமாதான ஊர்வலம் சென்றனர்.

அங்கு சிரமதான பணிகளிலும் மரம் நடுகைகளிலும் ஈடுபட்ட மாணவர்கள், சமாதான ஊர்வலமாக சீனக்குடா சித்தி விநாயகர் கோயிலுக்கு சென்றனர். அங்கு சிரமதான பணிகளிலும் மரம் நடுகைகளிலும் ஈடுபட்ட பின்னர், இறுதியாக சமாதான ஊர்வலமாக சீனக்குடா அவுலியா ஆலிம் அப்பா ஜும்மா பள்ளிவாசலுக்கு சென்றனர்.




## காத்தான்குடியில் ஹஜ் பெருநாள் விசேட கலை நிகழ்வுகள்



காத்தான்குடியில் ஹஜ் பெருநாளை முன்னிட்டு விசேட கலை நிகழ்வுகள் அண்மையில் காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் நடைபெற்றது.

கலாசார மத்திய நிலையத்தின் பொறுப்பதிகாரி மௌலவி ஜவாஹிர் மதனி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் காத்தான்குடி உதைப்பந்தாட்ட விளையாட்டுத் துறைக்கு பல்வேறு பங்களிப்புகளை செய்த சிரேஷ்ட உதைப்பந்தாட்ட வீரர் முஹம்மத் சல்மான் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். இதில் காத்தான்குடி கலை இலக்கிய கழகத்தின் தலைவர் கலைஞர் சரண்டிப் முஸ்தபா தலைமையில் நகைச்சுவை நாடகமும் நடைபெற்றது.

## கட்டாக்காலி மாடுகள் நடமாட்டம் அதிகரிப்பு

(பாண்டிருப்பு தினகரன் நிருபர்)

கல்முனை நகரில் கட்டாக்காலி மாடுகள் நடமாட்டம் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக வாகன சாரதிகள், பாதசாரிகள் அசௌகரியங்களுக்குள்ளாகி வருகின்றனர்.

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட சனநெரிசல் மிகுந்த பிரதான வீதிகளில் அங்கும் இங்குமாக கட்டாக்காலி மாடுகள் நடமாடுகின்றன. இதனால் மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட வாகனங்களில் பயணிப்போர் விபத்துக்குள்ளாகி வருகின்றனர். அத்துடன் பாடசாலை செல்லும் மாணவர்கள் மற்றும் தனியார் வகுப்புகளுக்கு செல்பவர்கள், சிறுவர்கள், முதியோர்கள் கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டத்தால் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாகிவருகின்றனர்.

எனவே கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டத்தை கட்டுப்படுத்த கடும் சட்டநடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## சகல மதத்தினரையும் மதித்து, அவர்களுடைய உரிமையைப் பாதுகாத்த பெருந்தலைவர்

### கிண்ணியா சூரா சபை அனுதாபம்

(கிண்ணியா மத்திய நிருபர்)

திருகோணமலையின் அடையாளங்களில் ஒன்றாக இருந்து அனைவரின் மதிப்பையும் பெற்ற சம்பந்தர் ஐயாவின் இழப்பிற்கு கிண்ணியா சூரா சபை தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து கொள்கின்றது..

பல தசாப்தங்களாக திருகோணமலை மாவட்ட மக்களை பிரதிநிதித்துவப்படுத்தி தமது இனத்துக்காக தொடர்ச்சியாக பாடுபட்ட ஒருவர்.

தமது இனத்தின் விடுதலைக்காக எந்த ஒரு அதிகாரம் பதவிகளோடு சமரசம் செய்து கொள்ளாமல் தனித்துவமாக இருந்தவர். சக மதத்தினரையும் இனத்தினரையும் மதித்து அவர்களுக்கும் சமமான உரிமை உண்டு என்றும் கோட்பாட்டில் வாழ்ந்தவர்.

தனது கொள்கையின் பற்று காரணமாக அனைவராலும் மதிக்கப்பட்ட அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர், அனைவருக்கும் தமது ஆழ்ந்த இரங்கலை கிண்ணியா சூரா சபை தெரிவித்துக் கொள்கின்றது.

## வயது முதிர்ந்த காலத்திலும் தமிழ் மக்கள் விடயத்தில் சம்பந்தன் துணிச்சலாக செயற்பட்டார்

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

சம்பந்தன் ஐயா வயது முதிர்ந்த காலத்திலும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்பதில் மிகவும் துணிச்சலாக செயற்பட்டவர் என முன்னாள் ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ. எம். ஹிஸ்புல்லாஹ் வெளியிட்டுள்ள அனுதாப செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது, சம்பந்தன் ஐயா 1989ஆம் ஆண்டு தொடக்கம் என்னோடு பாராளுமன்றத்தில் இருந்த ஒருவர். பல்வேறுபட்ட பிரச்சினைகள் தொடர்பில் பல்வேறு மட்டத்தில் பல்வேறுபட்ட கலந்துரையாடல்களை மேற்கொண்டு பிரச்சினைகளுக்கான தீர்வை பெற்றுத்தந்தவர்.



அத்துடன் மூதூரில் விடுதலை புலிகள் முஸ்லிம் மக்களை வெளியேற்றிய போது அதுதொடர்பில் இரண்டு மூன்று நாட்கள் அவரோடு தொடர்ச்சியாக கலந்துரையாடினோம்.

அவர் மிகவும் நீதியாகவும், நியாயமாக நடந்து கொள்கின்ற ஒருவர், நான் கிழக்கு மாகாணத்தில் அமைச்சராக, ஆளுநராகவிருந்த காலப்பகுதியில் என்னுடைய முன்னெடுப்புகளுக்கு முழு ஆதரவையும் வழங்கிய ஒருவர். நான் எப்பொழுதும் மரியாதையோடும் கண்ணியமாகவும் பார்க்கின்ற ஒரு தலைவர். தமிழ் சமூகத்தின் வடகிழக்கு பிரச்சினை தீர்வின்போது முஸ்லிம் சமூகத்தினுடைய பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்கப்பட வேண்டும் என்பதில் மிகவும் மும்முரமாக இருந்த ஒருவர்.

தான் வயது முதிர்ந்த காலத்திலும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்பதில் மிகவும் துணிச்சலாகவும் 13ஆவது சட்ட திருத்த விடயத்தில் மிகவும் காரமாக நடந்து கொண்ட மிகப்பெரிய ஒரு தலைவர்.

அவருடைய இழப்பால் துயருறும் குடும்பத்திற்கும் ஆழ்ந்த அனுதாபங்கள்.

# IMF இலிருந்து நிதியுதவி பெற 17முறை முயற்சித்த இலங்கை முதல் தடவையாக வெற்றியீட்டியது

## தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் (ஒலுவில்) துணைவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர்

**உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்களை அடைக்க முடியாமல் வங்குரோத்து நாடாக மாறியுள்ள இலங்கை இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்குள் வெற்றிகரமாக மீண்டு உலகமே ஏற்றுக்கொள்ளும் நாடாக நமது மாறியுள்ளது என பேராசிரியர் கூறினார்.**



**கே; 2022 ஆம் ஆண்டில் இலங்கை எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடி உங்களுக்கு நினைவிருக்கிறதா ?**

அன்று நாங்கள் சந்தித்த நெருக்கடி என்னவென்றால், நாங்கள் வாங்கிய அதிகப்படியான கடனை அடைக்க முடியவில்லை. மேலும் அன்றாட செலவுகளுக்கு அந்நிய செலாவணி பற்றாக்குறை என்பவற்றால் மிகவும் வித்தியாசமான சமூக பொருளாதாரப் பிரச்சினைகள் எழுந்தன. மக்கள் பாதிப்படைந்தனர்.

**கே; அந்த நேரத்தில் நடந்த சோகமான மற்றும் விரும்பத்தகாத கடந்த காலத்தைப் பற்றி பேச முடியுமா?**

அந்த தருணம்; அனைவருக்கும் நினைவூட்டுவது ஒரு சோகமான கதையையாகும். அந்த நேரத்தில் நம் நாட்டின் அனைத்து துறைகளும் செயலிழந்தன. பொருளாதாரம் ஸ்தம்பித்தது. சமூகப் பிரச்சினைகள் எழுந்தன. இந்த நேரத்தில் நாட்டை பொருளாதார ரீதியாக வலுப்படுத்த ஒரு திட்டம் தீட்ட வேண்டியிருந்தது.

**கே; பொருளாதாரத்தை வலுப்படுத்த அந்த நேரத்தில் மாற்று திட்டம் இருந்ததா?**

பொருளாதாரத்தை வலுப்படுத்துவதோடு, அரசியல் ரீதியாகவும் ஒரு பிரச்சினை இருந்தது. நாட்டை ஸ்திர நிலைக்கு கொண்டு வருவது. அச் சூழ்நிலையில் நாட்டு

அரசியல் தலைமையை ஏற்க யாரும் முன்வரவில்லை. தற்போதைய

ஜனாதிபதியே முன்வந்தார். அவ்வாறு முன்வந்த அவர்

நாட்டை மீட்பதற்கான சிறந்த வாய்ப்பை உருவாக்கினார்.

**கே; அதற்கான சிறந்த மாற்று வழி என்ன?**

சர்வதேச நாணய நிதியத்திற்குச் செல்வதே அதற்கான சிறந்த மாற்றுவழி.

அன்று, அவ்வாறு செய்யக் கூடாது என பலர் வற்புறுத்தினார்கள்.

ஆனால் ஜனாதிபதி அதை பொருட்படுத்தாமல் ஒரு முடிவை எடுத்து சர்வதேச நாணய நிதியத்திற்குச் சென்றார். அவர்களுடன் இணைவதன் மூலம் இலங்கையை பொருளாதார ரீதியாக கட்டியெழுப்ப ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டது. இங்கே நாம் பதினேழாவது முறையாக சர்வதேச நாணய நிதியிலிருந்து கடன் வசதிகளைப் பெறுவதில் வெற்றியடைந்தோம்.

**கே; அந்தத் திட்டத்தைப் பற்றி ஏதாவது விளக்க முடியுமா ?**

சர்வதேச நாணய நிதியம் 2023 முதல் 48 மாத காலத்திற்கு எமக்கு 2.9 பில்லியன் அமெரிக்க டொலர்கள் நீடிக்கப்பட்ட கடன் வசதியை வழங்க விருப்பம்

வெளியிட்டது. அதன்படி, அவர்கள் பல நிபந்தனைகளை முன்வைத்தனர். ஒரு நாடாக நாம் வாங்கிய கடனை திருப்பிச் செலுத்தும் திறன் கொண்ட குழுவாக மாற வேண்டும். அதற்காக நாட்டின் பொருளாதாரத்தில் பல சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். கொள்கை முடிவுகளை எடுக்கவேண்டும். அதேபோல், அரசின் வருவாயையும் முகாமைத்துவம் செய்ய வேண்டும் என எங்களிடம் சொன்னார்கள். மேலதிகமாகவும் செய்ய ஒரு முக்கிய பணி இருந்தது.

**கே; அது என்ன ?**

முதலில், தேசிய கடனை உகந்ததாக்க வேண்டும். இரண்டாவது இருதரப்பு

வெளிநாட்டுக் கடனை மறுசீரமைக்க வேண்டும். நாம் முதலாவதை நிறைவேற்றியுள்ளோம். மற்றையதை சமீபத்தில் நிறைவேற்றினோம்.

இதன்படி பாரிஸ் கிளப் , இந்தியா , ஜப்பான் , சீனா போன்ற இருதரப்பு கடன்கள்

மறுசீரமைக்கப்பட்டமை ஒரு நாடாக நாம் பெற்ற வெற்றியாகும்.

**கே; இங்கு எமக்கு கிடைத்த நன்மைகள் என்ன ?**

இந்த ஆண்டு ( 2024) செலுத்த வேண்டிய வெளிநாட்டு இருதரப்பு கடனை .

திருப்பிச் செலுத்த மூன்று ஆண்டுகள் ( 2028) கால அவகாசம் . மேலும் வட்டி

விகிதமும் குறைந்துள்ளது. 2028 க்கு பிறகு 2033 வரை கடனில் பாதியை செலுத்த சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த சலுகைகள் காரணமாக, கடனைத் திருப்பித்

செலுத்த சுதந்திரம் உள்ளது. இதன் மூலம் இலங்கைக்கு பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

**கே; இதன் மூலம், உலக நிதி நிறுவனங்கள் மற்றும் சர்வதேச சமூகம் மத்தியில் இலங்கைக்கு ஒரு குறிப்பிட்ட அங்கீகாரமும் நம்பகத்தன்மையும் கட்டமைக்கப்பட்டுள்ளதல்லவா ?**

கண்டிப்பாக ஆம். நமது நாட்டுக்கான சர்வதேச அங்கீகாரம் முதலிடத்தில் உள்ளது

எனவே மீண்டும் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கியில் இருந்தும் மேலும் பிற நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் வசதிகளைப் பெற வாய்ப்பு உள்ளது.

**கே; புதிய பொருளாதாரப் பயணத்தை மேற்கொள்வதற்கான வாய்ப்பை இது எவ்வாறு வழங்குகிறது ?**

கடனை திருப்பிச் செலுத்துவது ஒத்திவைக்கப்படுவதால், நாடு குறுகிய காலத்திற்கு பணத்தை சேமிக்கும். இந்த மீதிப் பணம் தற்போது நிறுத்தப்பட்டுள்ள வளர்ச்சித் திட்டங்களை மீண்டும் தொடங்க பயன்படுத்தப்பட வேண்டும். முடங்கிய வளர்ச்சித் திட்டங்கள் திறம்பட செயல்பட்டு பொருளாதார வளர்ச்சிக்கு பயன்படுத்தக்கூடிய வருமானத்தை உருவாக்க உதவுதல் விரைவுபடுத்தப்படும். அத்தகைய திட்டத்தின் மூலம், எதிர்காலத்தில் கடனைத் திருப்பி செலுத்தும் வலுவான பொருளாதாரத்தை உருவாக்க முடியும்.

**சுதந்திரத்தின் பின்னர் இலங்கை எதிர்கொண்ட மிக மோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து விடுபட அரச கட்சிகள் மற்றும் அனைத்து எதிர்க்கட்சிகளும் சர்வதேச நிதி திட்டத்துடன் முன்னேற வேண்டும் என்று சுட்டிக் காட்டும் பேராசிரியர், சமூக பொருளாதார சீர்திருத்தங்கள் ஒப்பந்தங்களின்படி மேற்கொள்ளப்பட வேண்டும் என்கிறார்.**

எமது நாட்டின் சுற்றுலாத் துறை, வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களால் அனுப்பும் வருமானத்தை உயர்த்த தொழில் வல்லுநர்களாக அவர்களை உருவாக்க நாம் உழைக்க வேண்டும். எல்லோரும் முடியாது என்று சொன்ன வேலையில் நாட்டை பொருளாதார ரீதியாக கட்டியெழுப்புவதற்கு அடித்தளமிட்ட ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் எங்களின் பாராட்டுகளைத் தெரிவிக்க விரும்புகிறோன்.

**கே; நமது நாடு கடனை அடைக்கும் இராச்சியமாக மாற என்ன செய்ய வேண்டும் என உங்களால் கூற முடியுமா ?**

இயன்றளவு அந்நியச் செலாவணியை நாட்டுக்குக் கொண்டு வரும் திட்டத்தை இங்கு செயல்படுத்த வேண்டும் நம் நாடு நீண்ட காலமாக முகம் கொடுக்கும் நெருக்கடி தேசிய வரவு செலவு திட்ட இடைவெளி அதிகமாக உள்ளதாகும். அரசின் வருவாயை விட செலவு எப்போதும் அதிகமாக இருக்கும். அடுத்த பிரச்சினை என்னவென்றால், பல ஆண்டுகளாக ஏற்றுமதி வருவாயை விட இறக்குமதி செலவு அதிகமாக உள்ளது.

இதன் காரணமாக வர்த்தக பற்றாக்குறை அதிகமாக உள்ளது. வர்த்தக பற்றாக்குறையை குறைக்க ஒரே வழி அந்நியச் செலாவணி மற்றும் டொலர் வருவாயை அதிகரிக்க நடவடிக்கை எடுப்பதாகும். அதற்கு ஏற்றுமதி சார்ந்த தொழில்மயமாக்கலை தொடங்க வேண்டும். சுற்றுலாப் பயணிகள் மற்றும் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களிடமிருந்தும்

வருவாயைப் பெருக்கும் வகையில் பணிகளை மேற்கொள்ளவேண்டும். இதைத்தவிர மேலும் செய்யவேண்டிய சிறப்பு பணிகள் உள்ளன.

**கே; அது என்ன ?**

எப்படியாவது வருமானத்தைப் பெருக்க அரசு நடவடிக்கை எடுத்தது

என்று சிந்திப்போம். ஆனால் இந்த வருவாய்கள் வீணாகி, ஊழலுக்கு ஆளாகி

அழிந்தால் நாட்டுக்கும் மக்களுக்கும் பெரும் நன்மை ஏற்படாது.

இதன் காரணமாக, அரச நிதி முகாமைத்துவத்தை

கடுமையான ஒழுக்கத்துடனும் கட்டுப்பாட்டுடனும் மேற்கொள்ள வேண்டும்.

லஞ்சம் , ஊழல் , மோசடி ஒழிக்கப்பட வேண்டும். அவ்வாறு செய்தால் மட்டுமே

நாம் நேரடி வெளிநாட்டு; முதலீடுகள் உட்பட சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட ஒரு நல்ல நாட்டை உருவாக்க உதவி கிடைக்கும்.

**கே; ஏற்றுமதி வருவாயை அதிகரிப்பது பற்றி பேசினாலும் எம்மால்; இன்னும் வெற்றிகரமான முடிவுகளை அடைய முடியவில்லையா ?**

ஆம். நமது நாட்டின் ஆண்டு ஏற்றுமதி வருவாய் 12 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். சில நாடுகளில் இத் தொகை 100, 200, 300 பில்லியன் டொலர்களைத் தாண்டியுள'ளது. நாங்கள்;

தொடர்ந்தும் 12 பில்லியன் டொலர் ஏற்றுமதி வருமானத்தில் இருக்க முடியாது. நாமும் வேகமாக பொருளாதார மேம்பாட்டை அடையும் அதே வேளையில் அதிக வருமானத்தை அடைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். நமது நாட்டின் ஆட்சியாளர்கள் அரசியல் கட்சிகள் மற்றும் தொழிற்சங்கங்களின் தலைவர்கள், சமுதாயத்தின் அனைத்து குடிமக்களும் அதிக பொறுப்புடன் இருக்க வேண்டும்.

**கே; சர்வதேச நாணய நிதியத்துடன் செய்யப்பட்ட ஏற்பாடுகளை நாம்**

தொடர்ந்து செயல்படுத்தப்பட வேண்டுமல்லவா ?

கண்டிப்பாக ஆம். சர்வதேச நிதியம் மட்டுமல்ல , ஒரு நாடாக நமக்கும்

தொழில்நுட்ப அறிவு மற்றும் வளர்ச்சிக்கான ஆலோசனை, திட்டத்தை ஒரு நிறுவனம் மற்றும் ஒரு நாடு வழங்கும் அறிவை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

நம் அனைவரினதும் நோக்கம் கடன் இல்லாத நாட்டை உருவாக்குவது. குழந்தைகளுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்கி, அடுத்த ஐந்தாண்டுகளில் கடனை அடைக்கும் நாடாகவும் மாற வேண்டும். அதற்கு, ஒரு நீண்ட கால தொலைநோக்கு மற்றும் எதிர்காலத்திற்கான ஒரு நம்பிக்கையான திட்டம் இருக்க வேண்டும். கடனை அடைப்பதே எங்களுக்கு மிக முக்கியமான விடயம். வலுவான அந்நிய செலாவணி வருமானத்தை அடைவதோடு

ஏற்றுமதி வருவாயை அதிகரிப்பது தவிர அந்நிய செலாவணி வருவாய்

மேம்படுத்தும் திட்டங்களை செயல்படுத்த வேண்டும். நமது அடுத்த இலக்கு தனிநபர்

பிணைமுறி பத்திரங்கள் மூலம் பெற்ற கடனை கடன் மறுசீரமைப்பு செய்வதாகும்.

அது விரைவில்; விவாதிக்கப்படும். அதுவும் வெற்றி பெற்றால் அதிக நன்மைகளை பெற முடியும். அதன் மூலம், நமது எதிர்கால கடனை செலுத்துவதில் சலுகைகளை பெறலாம்.

எனினும், இலங்கையின் தற்போதைய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன் சுமை 100 பில்லியன் அமெரிக்க டொhலர்கள். அதில் பாரிய அளவிலான கடனும் அடங்கும்

வாங்கிய மற்ற கடன்களை வெற்றிகரமாக திருப்பிச் செலுத்தக்கூடிய நிலையான தன்மையை பெறுவதற்கு நாம் ஒரு நாடாக இணைந்து செயல்பட வேண்டும்.

ஜெயசிறி முனசிங்க
தமிழில் வீ.ஆர்.வயலட்

# அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவை 74ஆவது ஆண்டு தேசிய மாநாடு

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவை நாட்டுக்குத் தலைமை தாங்கக் கூடிய நல்ல திறமையான ஆளுமைமிக்க இளைஞர்களை உருவாக்கி வருகிறதென்று துருக்கி உயர்ஸ்தானிகர் செமிஹ் லுட்பு டெகுத் தெரிவித்தார்.

அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் 74 ஆவது ஆண்டு தேசிய மாநாடு இலங்கை மன்றக் கல்லூரியில் தேசியத் தலைவர் இஹ்சான் ஏ. ஹமீட் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக துருக்கி உயர்ஸ்தானிகர் செமிஹ் லுட்பு டெகுத் கலந்து கொண்டார். கௌரவ அதிதியாக இலங்கை மனித உரிமைகள் ஆணையத்தின் தவிசாளர் சட்டத்தரணி எல். தி. பி. தெஹிதெனியவும் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

மேற்படி நிகழ்வு பேரவையின் தேசியத் தலைவர் இஹ்சான் ஏ. ஹமீட்டின் புதல்வர் இஹ்சான் முஹமட் இர்பானின் கிராஅத்துடன் ஆரம்பமானது. நிகழ்வில் முன்னாள் அமைச்சர் ஏ. எச். ஏ. பௌசி, தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் ஆசாத் சாலி, கல்வி அமைச்சின் முஸ்லிம் கல்விப் பிரிவின் பணிப்பாளர் மேஜர் நசுமுதீன், சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் ஏ. எம். நவவி, அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் செயலாளர், முன்னாள் தலைவர் எம். என். எம். நபீல் உள்ளிட்ட அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவர்கள் வைத்தியர் பரீத், அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசியச் செயலாளர் ஆஷிப் சுக்ரி, பொருளாளர் பிர்தௌஸ் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களுடன் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் வை. எம். எம். ஏ. கிளை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

நாடளாவிய ரீதியில் சிறந்த முறையில் திறமைகளைக் வெளிக்காட்டிய கிளைச் சங்கங்களுக்கான பரிசில்கள் வழங்குதல், தேசிய மாவட்டத்தில் வருடாந்தம் வழங்கப்படும் விசேட விருது சமூகச் செயற்பாட்டாளர் ஹில்ரு சித்தீக்குக்கு வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட துருக்கி உயர்ஸ்தானிகர் செமிஹ் லுட்பு டெகுத் இங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவை ஒரு வலுவானதும் ஒரு நீண்ட வரலாற்றைக் கொண்ட சங்கமாகும். எனவே, அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேவையின் 74 ஆவது வருடாந்த மாநாட்டில் கலந்துகொள்வதில் நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

புனித ஹஜ்ஜுப் பெருநாளைக் சிறப்பாகக் கொண்டாடிய தருணத்தில் இஸ்லாமிய உலகிற்கும் முழு மனித குலத்திற்கும் இந்த புனித நாட்கள் நல்ல முன்னேற்றகரமான சிறப்பான நாட்களாக அமைய அல்லாஹ்விடம் நாம் பிரார்த்தனை செய்வோம். எல்லாம் வல்ல இறைவன் எங்கள் பிரார்த்தனைகளை ஏற்று மகிமைப்படுத்துவானாக.

முஸ்லிம் சமூகம் 100 வருடங்கள் மேல் எமது இலங்கை நாட்டின் பல்வேறு அபிவிருத்திகளுக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்துள்ளனர்.

பாராளுமன்றம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் உட்பட முஸ்லிம் சமூகத்தின் சில சிவில் சமூக உறுப்பினர்களை சந்தித்து கலந்துரையாடும் போது இதனை அறிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளன.

எமது முதல் பள்ளிவாசலான மஸ்ஜிதுல் அக்ஸாவில் பிரார்த்தனை செய்யும் பாக்கியம் எமக்கு இல்லை. சவால்கள், நெருக்கடிகள் மற்றும் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் இடமாக அது இன்று காணப்படுகிறது. எனவே அம்மக்களின் பாதுகாப்பான நல்வாழ்வுக்காகவும் நாம் பிரார்த்தனை புரிவோம்.

இலங்கையில் உள்ள அனைத்து மக்களுக்கும் ஒரு சிறந்த முன்மாதிரியான இளைஞர் சமூகத்தை வை. எம். எம். ஏ. பேரவை ஏற்படுத்தி வருகின்றன.

நாடு முழுவதும் உள்ள எமது சமூக மக்களின் மேம்பாட்டுக்காக சுறுசுறுப்பாக இயங்கி வருவதை நாம் அவதானிக்கின்றோம்.

முஸ்லீம் சமூகத்தின் தேவைகள் மற்றும் அபிலாஷைகளை மட்டும் பூர்த்தி செய்வதோடு மட்டுப்படுத்தப்படாமல், அடுத்த தலைமுறைத் தலைவர்களைப் பயிற்றுவிப்பதில் நீங்கள் கவனம் செலுத்துவது, இலங்கையின் பலதரப்பட்ட சமூகங்களுக்கிடையில் புரிந்துணர்வு மற்றும் நல்லிணக்கம் உறவுப் பாலங்களை உருவாக்கும் என்பதில் எமக்கு சந்தேகமில்லை.

உள்ளூர் சமூக நலனை மேம்படுத்தவும் ஒற்றுமையை வலுப்படுத்தவும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் மனப்பான்மை முக்கிய பங்கு வகிக்கிறது.

எனவே நீங்கள் ஒருவரையொருவர் எவ்வளவு இறுக்கமாக அணைத்துக்கொள்கிறீர்களோ, அவ்வளவு எளிதாக நீங்கள் சிக்கலைச் சமாளிக்கிறீர்கள். மேலும் நீங்கள் மிகவும் வெற்றிகரமாக இலக்குகளை அடைந்து கொள்வீர்கள். இன்று காசாவில் ஒரு சோகத்தை நாம் காண்கிறோம். மனித நேயத்திற்காகவும் இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்கு முதலில் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். உடனடியாக துருப்புக்களை அப் பிரதேசங்களில் இருந்து திரும்பப் பெற வேண்டும், மற்றும் சர்வதேச சட்டத்திற்கு இஸ்ரேல் உடன்பட வேண்டும்.

இஸ்ரேலின் தொடர்ச்சியான படுகொலைகளுக்கு எதிராக நாம் வலுவான எதிர்வினையை வெளிப்படுத்த வேண்டும். இந்த முயற்சிகளில், அரச சார்பற்ற நிறுவனங்கள் முக்கியமான தகவல்களை பரப்புதல், அழுத்தங்களை உருவாக்குதல் மற்றும் மனித பிரசாரங்களுக்கு முன்னோடியாக செயல்படலாம்.

காசாவில் ஒரு சோகத்தை நாங்கள் கண்டோம். மனித நேயத்திற்காக, இஸ்ரேல் காஸா மீதான தனது ஆக்கிரமிப்பை உடனடியாக நிறுத்த வேண்டும். ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து தனது துருப்புக்களை திரும்பப் பெற வேண்டும் மற்றும் சர்வதேச சட்டத்திற்கு இணங்க வேண்டும்.

இஸ்ரேலின் தொடர்ச்சியான படுகொலைகளுக்கு எதிராக நாம் வலுவான எதிர்வினையை வெளிப்படுத்த வேண்டும். அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். விரிவாக்க முயற்சிகளை ஆதரிப்பதற்கும், அபாயங்களைக் குறைப்பதற்கும், ஸ்திரத்தன்மையை அதிகரிப்பதற்கும், அமைதி மற்றும் செழிப்புக்கு வழி வகுக்கும் ஒரு பகிரப்பட்ட தார்மீகக் கடமை எங்களுக்குள்ளது.

இந்த முயற்சிகளில், அரசு சாரா நிறுவனங்கள் முக்கியமான தகவல்களை பரப்புதல், அழுத்தங்களை உருவாக்குதல் மற்றும் மனித பிரசாரங்களுக்கு முன்னோடியாக செயல்படுதல் வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.









**அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் தேசியத் தலைவர் இஹ்சான் ஏ. ஹமீத் தனது உரையில்;**

முதலில் நான் இந்த இடத்திற்கு வருவதற்கு உந்து சக்தியாக இருந்த எனது தகப்பனார் ஏ.ஆர்.ஏ. நூர் அமீனுக்கு உளப்பூர்வ நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் 1961 களில் இந்த அகில இலங்கை வை. எம்.எம்.ஏ. பேரவையின் தேசிய தலைவராக இருந்துள்ளார். அதன் போது ரஷ்யா போன்ற வேறு பல நாடுகளுக்குச் சென்று வந்தார். ஜாமிஆ நளீமிய்யா கலா பீடத்தின் ஸ்தாபக உறுப்பினராகவும் அக்கலாபீடத்தின் 25 வருடம் பிரதான நூலகராகக் கடமையாற்றியுள்ளார். அந்நாருக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

74ஆவது வருடாந்த மாநாட்டிற்கு தலைமை தாங்குவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். அகில இலங்கை வை.எம்.எம்.ஏ மாநாட்டின் தேசியத் தலைவராக பணியாற்றும் வாய்ப்பைக் கண்டு தாழ்மையுடன், மிகவும் துடிப்பான இளைஞர்களுக்கு சேவை செய்யும் சமூகம் சார்ந்த அமைப்புகளில் ஒன்றாகும். நமது ஒழுக்கம், அதன் நிலைப்பாடு மற்றும் சமூகத்திற்கும் நாட்டிற்கும் சேவை செய்யும் காலத்தில் வேகமாக மாறிவரும் சூழலில், இளையவர் முதல் மிகவும் அனுபவம் வாய்ந்தவர்கள் வரையிலான ஆசீர்வாதங்களுடன் சமூகத்தின் மீது ஆழ்ந்த அக்கறை கொண்ட பல அர்ப்பணிப்புள்ள தன்னார்வ உறுப்பினர்களாக நாங்கள் செயற்பட்டுள்ளோம்.

பல நிலைகளில் பல வழிகளில் பங்களிக்கும் தன்னார்வ உறுப்பினர்களைக் கொண்டிருப்பது எங்கள் நிறுவனத்திற்கு அதிர்ஷ்டம். எங்கள் நிறுவனத்தின் மீது தொடர்ந்து நம்பிக்கை வைத்துள்ள எங்கள் நன்கொடையாளர்கள் மற்றும் நலன் விரும்பிகளுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். மேலும் அனைத்து திட்டங்களும் அவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப செயல்படுத்தப்பட்டதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

கடந்த வருடத்தை நாம் சிந்திக்கும் போது, அகில இலங்கை வை.எம்.எம்.ஏ மாநாட்டின் சாதனைகள் மற்றும் மைல்கற்களை முன்வைப்பதில் பெருமையடைகிறேன். எங்களுடைய முயற்சிகள் பலதரப்பட்டவை, தாக்கம் மிக்கவை மற்றும் எங்களுடன் இணைந்துள்ள சமூகத்திற்கு சேவை செய்யும் பணி, இந்த ஆண்டில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களின் அனைத்து விபரங்களும் தேசிய பொதுச் செயலாளரால் சமர்ப்பிக்கப்படும்.

## முக்கிய பிரமுகர்கள் பங்கேற்பு





சுருக்கமாகக் கூறப்போனால் எனது தலைமைத்துவ பதவிக் காலத்துக்குள், என்னிடம் ஒப்படைக்கப்பட்ட பல பணிகளை விடாமுயற்சியுடன் சாதித்து இலக்குகளை அடைந்துள்ளேன். குறிப்பிடத்தக்க மைல்கற்களையும் குறிக்கும் அர்த்தமுள்ள முன்னேற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறேன் என்பதை வெளிப்படுத்த விரும்புகிறேன். நான் தளராத நம்பிக்கையுடனும், உறுதியான நம்பிக்கையுடனும் நிறுவனத்திற்கு சேவை செய்துள்ளேன்.

நமது தேசிய பொதுச் செயலாளர் ஆசிப் சுக்ரி மற்றும் தேசிய பொதுப் பொருளாளர் டி.டி.எம். பிர்தௌஸ் அனைத்து தடைகளையும் தாண்டி, இந்த ஆண்டு வெற்றியை உறுதிசெய்து, ஒருங்கிணைந்த குழுவாக செயல்படுவதற்கு பாராட்டுதல்களை தெரிவிக்கிறேன்.

போசகர்களான புரவலர் காலித் எம். பாரூக், நம்பிக்கையாளர் சபையின் தலைவர் அஷ்ரப் ரூமி, செயலாளர் கே. என். டீன் மற்றும் எனக்கு எப்பொழுதும்ஆலோசகராகஇருந்த முன்னாள் தலைவர் சஹீத் எம். ரிஸ்மி, துணைத் தலைவர்கள், முன்னாள் தேசியத் தலைவர்கள், துணைக்குழுத் தலைவர்கள், நிரந்தர உறுப்பினர்கள், சிறப்பு உறுப்பினர்கள், மாவட்டப் பணிப்பாளர்கள் ஆகியோருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். எங்கள் அமைப்பின் ஸ்தாபக தந்தைகள் வகுத்த நீதியான பாதையில் ஒரு கனவை நனவாக்குவதில் அவர்களின் அயராத அர்ப்பணிப்புக்காக முக்கிய அதிகாரிகள் மற்றும் உறுப்பினர்கள் குழு அனைவருக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும். சமூகத்திற்கும் நாட்டிற்கும் சேவை செய்யும் வகையில் மாநாட்டை வழி நடத்தும் தைரியத்தையும் வலிமையையும் எனக்கு வழங்கிய அல்லாஹ்வுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேவேளை இம்முறை புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட சட்டத்தரணி அம்ஹர் ஷரீபுக்கும் எனது பாராட்டுதலையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.





**அகில இலங்கை வை எம். எம். ஏ. பேரவையின் பொதுச் செயலாளர் ஆசிப் சுக்ரி உரையாற்றும் போது;**

இலங்கையின் முஸ்லிம் இளைஞர்களுக்கு சேவை செய்யும் முதன்மையான தேசிய அமைப்பாக, ஏழு தசாப்தங்களுக்கும் மேலான பெருமைமிக்க ஒரு வரலாற்றை எமது அமைப்பு கொண்டுள்ளது. 1950 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் தேதி மர்ஹூம் கலாநிதி ஏ.எம்.ஏ. அஸீஸ் அவர்கள் வெறும் 17 உறுப்பினர்களுடன் வை.எம்.எம்.ஏயை ஸ்தாபித்தார். பல ஆண்டுகளாக நாங்கள் பலம் பெற்றுள்ளோம், இப்போது இலங்கையின் நீளம் மற்றும் அகலத்தில் 178 உறுப்பினர்களை இது கொண்டிருப்பதில் பெருமை கொள்கிறோம். மிகப் பெரிய முஸ்லிம் சிவில் சமூக அமைப்பாக உறுதியாக ஸ்தாபிக்கப்பட்டுள்ள எங்கள் அமைப்பு, சமூகம் மற்றும் நாட்டின், குறிப்பாக இளைஞர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் முன்னிலை வகித்துள்ளோம்.

அதேபோன்று எமது நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியினால் நாம் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இந்த சவால்களை சமாளித்து சமூகத்திற்கும் நாட்டுக்கும் பல வழிகளில் சேவை செய்ய முடிந்தது.

இந்த ஆண்டு நாடு முழுவதும் உள்ள உறுப்பினர் வை.எம்.எம்.ஏக்கள் பல மனிதாபிமான மற்றும் சேவை திட்டங்களை செயல்படுத்த முன்வருவதையும் புதிய போக்குகளை அமைத்து பெரும் வெற்றியை அடைவதையும் கண்டோம். இனி வரும் ஆண்டுகளில் வை.எம்.எம்.ஏ சமூகத்திற்கு நல்ல பங்களிப்பை நல்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

1950 ஆம் ஆண்டு நாம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து, அகில இலங்கை வை.எம்.எம்.ஏ மாநாடு 55 புகழ்பெற்ற ஆளுமைகளை அதன் தேசியத் தலைவராக வழிநடத்துவதைக் கண்டுள்ளது. அவர்களில் சிலர் எம்முடன் இல்லை. கடந்த 74 ஆண்டுகளாக அமைப்பை வலுப்படுத்துவதற்கு பொறுப்பாக இருந்த அனைத்து கடந்தகால தேசிய தலைவர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். அவர்களில் பலர், நிர்வாகக் குழு மற்றும் அறங்காவலர் குழுவின் சிறந்த உறுப்பினர்களாக, நிறுவனத்தின் சொத்துக்கள் மற்றும் நிதிகளைப் பாதுகாப்பதற்குத் தொடர்ந்து பங்களிக்கின்றனர். அவர்களின் விலைமதிப்பற்ற பங்களிப்புகளுக்கு நன்றி கூறுவதுடன், அகில இலங்கை வை.எம்.எம்.ஏ மாநாட்டிற்கு இன்னும் பல வருடங்கள் சேவையாற்றுவதற்கு எல்லாம் வல்ல அல்லாஹ் நல்ல ஆரோக்கியத்தையும் நீண்ட ஆயுளையும் வழங்க பிரார்த்திக்கின்றோம்.

தேசியத் தலைவர் இஹ்சான் ஏ. ஹமீட்டின் தலைமையில் வழிகாட்டுதலின் கீழ் துணைக் குழுத் தலைவர்களால் மேற்கொள்ளப்பட்ட சில திட்டங்கள் பின்வருமாறு,

- **A/L மாணவர்களுக்கான புலமைப்பரிசில்கள்:** பல வருடங்களின் பின்னர், எமது இளைஞர்களின் எதிர்காலத்திற்காக முதலீடு செய்து உள்ளூர் மற்றும் சர்வதேச நிதிகளின் பங்களிப்புகள் மூலம் A/L மாணவர்களுக்கு இலவச புலமைப்பரிசில்களை மீண்டும் ஆரம்பித்து வழங்கினோம். அவுஸ்திரேலியாவிலிருந்து எமது முன்னாள் தேசியத் தலைவர் ஜிஃப்ரி ஹனிஃபாவால் சேகரிக்கப்பட்ட நிதியினால் இந்த முயற்சிக்கு ஆதரவளிக்கப்பட்டது.
- **கலாநிதி ஏ. எம்.ஏ அஸீஸ் கல்வி மற்றும் தொழில் பயிற்சி மையம்** கல்வி மற்றும் பயிற்சி வாய்ப்புகளை வழங்கி, கலாநிதி ஏ. எம்.ஏ அஸீஸ் கல்வி மற்றும் தொழில் பயிற்சி மையத்தை மீண்டும் செயல்படுத்தினோம்.
- **தொழில் வழிகாட்டல்:** O/L மற்றும் A/L மாணவர்களுக்கு அவர்களின் கல்வி மற்றும் தொழில்சார் பயணங்களை மேற்கொள்வதில் அவர்களுக்கு உதவியாக, பயிற்சிகள் மற்றும் கருத்தரங்குகள் மூலம் விரிவான தொழில் வழிகாட்டல்களை வழங்கினோம். உயர்கல்வி மற்றும் தொழிற்பயிற்சிக்கான எமது உப குழுவின் தலைவர் எம்.ஐ.எம். நளீம் அவர்களால் இந்த முயற்சி முன்னெடுக்கப்பட்டது.
- **பயிற்சித் திட்டங்கள்:** உந்துதல், போதைப்பொருள் தடுப்பு மற்றும் தலைமைத்துவப் பயிற்சித் திட்டங்களை நாங்கள் நடத்தினோம், எங்கள் உறுப்பினர்களையும் சமூகத்தையும் மேம்படுத்துகிறோம்.
- **தேசிய கட்டடத் திட்டங்கள்:** சமூக நலனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட இரத்த தான இயக்கங்கள், மரம் நடும் முயற்சிகள் மற்றும் கடற்கரையை சுத்தம் செய்யும் முயற்சிகளை உள்ளடக்கிய தேசிய கட்டடத் திட்டங்களை நாங்கள் தொடர்ச்சியாக மேற்கொண்டோம். இந்த முயற்சிகள் எங்கள் துணைக்குழுத் தலைவரும் முன்னாள் தேசியத் தலைவருமான எம்.என்.எம். நபீல் அவர்களின் பங்களிப்புகளால் கணிசமாக வலுவடைந்தன, அவருடைய விலைமதிப்பற்ற உதவி இந்த முயற்சிகளை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கும் முன்னேற்றத்திற்கும் வழிவகுத்தது.
- **சுயதொழில் திட்டம்:** தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் வகையில் உணவு விற்பனை வண்டி வழங்கும் சுயதொழில் திட்டம் தொடங்கப்பட்டது.
- **சர்வதேச தூதுவர்களுடன் நம்பிக்கையிலான உறவுகளைப் பேணுதல்,** நமது உலகளாவிய வலையமைப்பை விரிவுபடுத்துதல் உள்ளிட்ட சர்வதேச உறவுகளை வலுப்படுத்தியுள்ளோம். கல்வித் திறன் மற்றும் கலாசார விழிப்புணர்வை ஊக்குவிக்கும் வகையில் மீலாத் நபி நிகழ்ச்சியில் அனைத்துக் கிளைகளிலும் அகில இலங்கை மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டது.
- **75 ஆவது ஆண்டு திட்டப்பணிகள்:** எங்கள் மரபு மற்றும் எதிர்காலத்தை கொண்டாடும் வகையில் 75ஆவது ஆண்டு லோகோ மற்றும் திய திட்டத்தை நாங்கள் தொடங்கினோம்.
- **சுகாதார முன்முயற்சிகள்:** எங்களது சுகாதார மேம்பாட்டுத் திட்டங்களை மேம்படுத்துவதற்காக இலங்கை சுகாதாரப் பணியகம் மற்றும் தேசிய காசநோய் செயலணி ஆகியவற்றுடன் நாங்கள் நெருக்கமாக ஒத்துழைத்தோம்.
- **தென்னை மரக்கன்றுகள் விநியோகம்:** 30,000 க்கும் மேற்பட்ட தென்னை மரக்கன்றுகள் தீவு முழுவதும் பெரும்பாலான மாவட்டங்களில் விநியோகிக்கப்பட்டது. இது நீடித்த தன்மை மற்றும் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கிறது.
- **முக்கிய உத்தியோகபூர்வ கருத்தரங்கு:** நாங்கள் ஒரு முக்கிய கருத்தரங்கை வெற்றிகரமாக நடத்தி, முக்கிய பங்குதாரர்களிடையே உரையாடல் மற்றும் ஒத்துழைப்பை வளர்த்துள்ளோம்.
- **திறந்த மஸ்ஜித் நிகழ்ச்சிகள்:** முஸ்லிம் அல்லாதோருக்கான திறந்த மஸ்ஜித் நிகழ்ச்சிகள் பதுளை லுஆஆயு பதுளை மற்றும் பதுளை சிட்டி ஜும்மா மஸ்ஜிதில், சர்வமத புரிந்துணர்வையும் ஒற்றுமையையும் வளர்க்கும் வகையில் நடைபெற்றது.
- **தேசிய பங்களிப்புகள்:** தேசிய பிரச்சினைகளில் நமது பங்களிப்புகள் குறிப்பிடத்தக்கவை, நமது தேசத்தின் நலனுக்கான நமது அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகிறது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இக்பால் அலி...





# இரா.சம்பந்தன் மறைவுக்கு உலகெங்குமிருந்து அனுதாபங்கள்



## தமிழினம் பெரும் பலத்தை இழந்து நிற்கிறது; இந்து குருமார் அமைப்பு ஆழ்ந்த இரங்கல்

தமிழினம் பெரும் பலத்தினை இழந்து நிற்கிறது என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், மூத்த அரசியல் தலைவருமான இரா. சம்பந்தனின் மறைவு குறித்து இந்து குருமார் அமைப்பு ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துள்ளது.

"எமது தமிழினம் ஓர் பெரும் பலத்தினை இழந்த சூழலில் உள்ளது. சுமார் ஆறு தசாப்தங்களாக நாடாளுமன்ற உறுப்பினராக விளங்கி, ஆற்றல்மிகு சக்தியாக தமிழ் மக்கள் மத்தியில் திகழ்ந்த ஓர் பண்புமிக்க அறிவாளனான இரா. சம்பந்தனை நாம் இழந்துள்ளோம்" என இந்துக் குருமார் அமைப்பு தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளது.



"அவர் இராஜதந்திர நகர்வுகளை செய்யும் சிறப்பாளர். பல்வேறு நாட்டுத் தலைவர்களாலும் இராஜதந்திரிகளாலும் மதிக்கப்பட்ட ஒருவர் சம்பந்தன். இவர் எமது தமிழ் பிரதிநிதிகளை ஓர் அணியாக செயற்பட வேண்டும் என செயற்பட்டவர். நிதானமாக நுண்ணறிவுடன் செயலாற்றிய, தலைமை தாங்கிய தலைவரை நாம் இழந்துள்ளோம்.

அமரது ஆத்ம சாந்திக்கு இந்துக் குருமார் அமைப்பினராகிய நாம் பிரார்த்திக்கிறோம் என்று அந்த அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஹரீஸ் எம்.பி இரங்கல்




இரா. சம்பந்தன் ஐயா அவர்கள் காலமான செய்தி அறிந்து மிகவும் கவலை அடைந்தேன் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் பிரதித் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான எச்.எம்.எம். ஹரீஸ் விடுத்துள்ள அனுதாப செய்தியில் தெரிவித்துள்ளார்.

தன்னைச் சார்ந்த இனத்தின் உரிமைகளுக்காக விட்டுக் கொடுப்புகளோ அல்லது தளர்வுகளோ இல்லாது போராடிய தலைமையை இன்று தமிழ் மக்கள் இழந்திருக்கிறார்கள் என்பதை விட அனுபவமும், ஆற்றலும் கொண்ட சிரேஷ்ட அரசியல் ஆளுமையை இலங்கை தேசம் இழந்திருக்கிறது என்பதே உண்மை.

முஸ்லிம்களின் அபிலாசைகளையும், சிங்கள மக்களின் உணர்வுகளையும் மதித்த ஒரு தமிழ் தலைமை சம்பந்தன் அவர்கள். இவரின் வெற்றிடத்தை யாராலும் நிரப்ப முடியாது என்று ஹரீஸ் எம்பி மேலும் தெரிவித்துள்ளார்.

## வடக்கு – தெற்கு நல்லிணக்கத்தில் தொலைநோக்கு கொண்ட தலைவர்

### சங்கைக்குரிய பானகல உபதிஸ்ஸ தேரர் அனுதாபம்



மறைந்த நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான ஆர்.சம்பந்தன் வடக்கு மற்றும் தெற்கு நல்லிணக்கம் தொடர்பில் ஆழமான தொலைநோக்குடன் செயற்பட்ட மரியாதைக்குரிய தலைவர் என்று இலங்கை மகாபோதி சங்கத்தின் தலைவரும், ஜப்பானின் பிரதான சங்கநாயகரும் தம்பதீவ சாஞ்சி சேத்தியகிரி விகாரை அதிபதியுமான சங்கைக்குரிய பானகல உபதிஸ்ஸ தேரர் அனுதாபம் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கில் யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் வடமாகாணத்தில் நிறுவப்பட்ட புனர்வாழ்வு முகாம்களை நாட்டின் அனைத்து மதத்தலைவர்களின் பங்களிப்புடன் கட்டியெழுப்புவதில் சம்பந்தன் முன்னின்று செயல்பட்டார். 'மத மாநாடு' நடத்திய அவர் நலன்புரி நிகழ்ச்சிகளின் போதும் சாவகச்சேரி பிரதேசத்தில் பாலர் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்ட போதும் காண்பித்த ஒத்துழைப்பு மற்றும் தெரிவித்த கருத்துக்களும் இலங்கைத் தேசியத்தை நாட்டில் கட்டியெழுப்ப அவர் கொண்டிருந்த ஆழமான விருப்பத்தை தெளிவாக எடுத்துக் காட்டின.

முதிர்ச்சியும் ஆழமான சிந்தனையும் கொண்ட அரசியல்வாதிகள் தேவைப்படுகின்ற இந்த நேரத்தில் ஆர்.சம்பந்தனின் மறைவு ஒட்டுமொத்த இலங்கைச் சமூகத்திற்கும் பாரிய இழப்பாகும்.

சம்பந்தன் அவர்களின் ஆத்மா சாந்தியடையட்டும் என்று பிரார்த்திப்பதுடன் குடும்பத்தினர் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம் என்று சங்கைக்குரிய பனகல உபதிஸ்ஸ தேரர் மேலும் தெரிவித்துள்ளார்.

## எழுச்சி மிகுந்த நம்பிக்கைக்குரிய தலைவராக விளங்கிய சம்பந்தன்



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவரும், தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனின் மறைவிற்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் இரங்கல் செய்தி வெளியிட்டுள்ளார்.

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான இரா.சம்பந்தன் எம்.பி அவர்களின் மறைவு குறித்து நான் ஆழ்ந்த அதிர்ச்சியும் வருத்தமும் அடைந்தேன்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நீண்டகால நண்பரும், இலங்கையின் எழுச்சி மிகுந்த மற்றும் நம்பிக்கைக்குரிய தலைவருமான சம்பந்தன் அவர்கள் விளங்கினார் என்று ஆளுநர் செந்தில் தொண்டமான் தனது அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## முதல்வர் ஸ்டாலின் ஆழ்ந்த இரங்கல்



இரா.சம்பந்தன் அவர்களின் மறைவுக்கு தமிழக அரசியல்வாதிகள் பலரும் இரங்கலைத் தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில், இந்தியப் பிரமர் நரேந்திர மோடி, அ.தி.மு.க பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி ஆகியோரும் இரங்கலை தெரிவித்துள்ளனர். தமிழக முதலமைச்சர் மு.க்.ஸ்டாலினும் இரங்கலை வெளியிட்டுள்ளார்.

இலங்கைத் தமிழர்களின் முதுபெரும் அரசியல் தலைவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஐயா அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகுந்த வேதனை அடைந்தேன். சம்பந்தன் அவர்களை இழந்து தவிக்கும் அவரது அமைப்பினருக்கும் இலங்கைத் தமிழ் உறவுகளுக்கும் தமிழ்நாட்டு மக்களின் சார்பாக எனது ஆழ்ந்த இரங்கல்என தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

## நல்லிணக்கத்தை விரும்புகின்ற இலங்கையர்களுக்கு பேரிழப்பு

### வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட்



தமிழரசுக் கட்சியின் தலைவரும் மூத்த தமிழ் அரசியல்வாதியுமான இராஜவரோதயம் சம்பந்தன் ஐயா அவர்களின் இழப்பு தமிழ்ச் சமூகத்துக்கு மாத்திரமன்றி, நல்லிணக்கத்தை விரும்பும் அனைத்து இலங்கையர்களுக்கும் பேரிழப்பாகும் என்று வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட் அனுதாபம் தெரிவித்துள்ளார்.

ஆளுநர் நஸீர் அஹமட் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

'சம்பந்தன் அவர்கள் தாம் சார்ந்த தமிழ் மக்களின் நலன் சார்ந்து சதாவும் சிந்தித்துச் செயற்பட்ட ஒரு அரசியல்வாதியாவார்.

தனது வாழ்நாளுக்குள்ளாக தமிழர் அரசியல் உரிமைக்கான தீர்வொன்றைப் பெற்றுக் கொள்வதில் முனைப்புடன் செயற்பட்டவர்.

மாகாண சபைகளின் அதிகாரங்களைப் பெற்றுக் கொள்வதிலும் தீவிர கரிசனையுடன் செயலாற்றியவர். கிழக்கின் முதலமைச்சராக இருந்து நான் மேற்கொண்ட அவ்வாறான போராட்டங்களின் போது பக்கபலமாக செயற்பட்டவர்.

தமிழ்_முஸ்லிம் இனநல்லுறவைக் கட்டியெழுப்புவதிலும் அவரது பங்களிப்புகள் பாராட்டத்தக்கவையாகவும், நேர்மையானதாகவும் இருந்தன. அவ்வாறான ஒரு அரசியல் தலைவரின் இழப்பு இன்றைய காலகட்டத்தில் ஒரு பாரிய பேரிழப்பாகும். அன்னாரின் மறைவு தொடர்பில் எனது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## பொன்சேகா எம்.பி அனுதாபம்



இரா. சம்பந்தனின் மறைவிற்கு இலங்கையின் முன்னாள் இராணுவ தளபதியும் பாராளுமன்ற உறுப்பினருமான சரத் பொன்சேகா தனது இரங்கலை தெரிவித்துள்ளார்.

சம்பந்தன் அவர்களின் மறைவுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆர்.சம்பந்தன் மிகவும் மூத்த அரசியல்வாதி. அவரது இழப்பு பெரிதும் உணரப்படும் என சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

## தமிழ் மக்களின் உரிமை குரலாக ஒலித்தவர் சம்பந்தன்

### வடக்கு மாகாண ஆளுநர்



இரா. சம்பந்தன் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து கவலை அடைவதாக வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

சுமார் ஐந்து தசாப்த அரசியல் வரலாற்றில் மிக நீண்ட காலம் தமிழ் மக்களின் உரிமைக் குரலாக இலங்கை பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்ததுடன், தமிழ் மக்களின் உரிமைக்காக சர்வதேச ரீதியிலும் செயற்பட்ட தலைவராக சம்பந்தன் அவர்கள் காணப்படுகின்றார்.

இன ஐக்கியம், ஒருமைப்பாடு, நல்லிணக்கம் என்பவற்றின் அடிப்படையில் நாட்டு மக்களின் நன்மை கருதி அன்னார் செயற்பட்டார். இத்தகைய ஒரு பெரும் தலைவரின் இழப்பானது தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியில் நிரப்ப முடியாத வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது என்று வடக்கு ஆளுநர் தெரிவித்துள்ளார்.

## பா.ம.க நிறுவுனர் ராமதாஸ் அனுதாபம்



தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவரும், திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பெரியவர் இரா. சம்பந்தன் முதுமை காரணமாக காலமானார் என்ற செய்தியறிந்து மிகுந்த வருத்தமும், வேதனையும் அடைந்தேன். அவரை இழந்து வாடும் குடும்பத்தினர், நண்பர்கள், தமிழ்தேசிய கூட்டமைப்பினர், ஈழத்தமிழ் மக்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன் என்று தமிழ் நாட்டின் பா.ம.க நிறுவுனர் மருத்துவர் ராமதாஸ் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அரை நூற்றாண்டுக்கும் மேலாக இலங்கை அரசியலில் தவிர்க்க முடியாத சக்தியாகவும், பாராளுமன்ற உறுப்பினராகவும் திகழ்ந்த இரா.சம்பந்தன், ஈழத்தமிழர்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்தவர். இலங்கையில் போர் மூள்வதை தடுக்க இந்தியா முயற்சி செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியவர். அவரது மறைவு ஈழத்தில் தமிழர்களுக்கு உரிமைகளையும், அதிகாரங்களையும் வென்றெடுத்துத் தரும் முயற்சிகளுக்கு பெரும் இழப்பு ஆகும் என்று ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

## மலையக மக்கள் மீது பெருமதிப்பு கொண்டிருந்த தலைவர் சம்பந்தன்

### இராதாகிருஷ்ணன் எம்.பி



இரா.சம்பந்தனின் மறைவு அனைத்து தமிழர்களுக்கும் ஈடு செய்ய முடியாத ஒரு இழப்பாகும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வில் மிகவும் நிதானமாகவும் பொறுப்புடனும் கொள்கையில் பிடிப்புடனும் செயற்பட்ட ஒரு தலைவர் அவர்.

தமிழர்களின் பிரச்சினைக்கான ஒரு சரியான தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் சம்பந்தன் அவர்கள் செயற்பட்டவர். அவருடைய காலத்தில் அது நிறைவேறாமல் போனமை பெரும் துரதிர்ஷ்டசமே. எனவே அவருடைய வழியில் சென்று தமிழ் தேசிய கூட்டமைப்பு தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வை பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும்.

அமரர் இரா.சம்பந்தன் மலையக மக்களுடன் மிகவும் நெருக்கமான ஒரு உறவை கொண்டிருந்ததுடன், மலையக மக்கள் மீது பெரும் மதிப்பை கொண்டிருந்தவர். மலையக மக்கள் சார்பாக எமது ஆழந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கின்றேன் என்று இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

(நுவரெலியா நிருபர்)

## தமிழ் தேசிய அரசியல் பரப்பில் பேரிழப்பு

### அங்கஜன் இராமநாதன்



திருகோணமலை மாவட்டத்தின் தமிழர் பிரதிநிதித்துவத்தின் இறுதி நம்பிக்கையாக திகழ்ந்த சம்பந்தனின் இழப்பு ஈடு செய்யப்பட முடியாதது என சிறிலங்கா சுதந்திர கட்சியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

சம்பந்தன் அவர்களின் இழப்பு தமிழ்த் தேசிய அரசியல் பரப்புக்கு பேரிழப்பாகும். அவர் தனது சட்டத் தொழிலை தியாகம் செய்து தன்னை மக்கள் அரசியலில் ஈடுபடுத்திய பெருமகனாவார்.

தமிழர்களின் மூன்று வகையான போராட்ட காலங்களிலும் தனது அரசியல் சாணக்கியத்தையும், அனுபவத்தையும் பல சந்தர்ப்பங்களில் இராஜதந்திரங்களாக அவர் பயன்படுத்தியிருந்ததை இத்தருணத்தில் நினைவில் கொள்ள வேண்டும்.

திருகோணமலை மாவட்டத்தின் தமிழர் பிரதிநிதித்துவத்தின் இறுதி நம்பிக்கையாக திகழ்ந்த அவரது இழப்பு ஈடுசெய்யப்பட முடியாதது என்று அங்கஜன் இராமநாதன் எம்.பி தெரிவித்துள்ளார்.

## கொள்கையில் அர்ப்பணிப்பு நிறைந்தவர்



இரா. சம்பந்தனின் மறைவுக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எம்.பி இரங்கல் தெரிவித்துள்ளார்.

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான ஆர்.சம்பந்தனின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைகிறேன். அவரது கொள்கைகளுக்கான அவரது அசைக்க முடியாத அர்ப்பணிப்பு ஒரு நீடித்த பாரம்பரியத்தை விட்டுச்சென்றுள்ளது.

மேலும், இந்த இக்கட்டான நேரத்தில் அவரது குடும்பத்தினருக்கும் அன்புக்குரியவர்களுக்கும் எனது இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என நாமல் ராஜபக்ஷ எம்.பி குறிப்பிட்டுள்ளார்.

## தமிழருக்காகவும், முஸ்லிம்களுக்காகவும் குரல் கொடுத்த பண்பான தலைவர் சம்பந்தன்

### ஜனாதிபதி சட்டத்தரணி எம்.எம். ஸுஹைர்

தமிழ் சமூகம் ஒரு சிறந்த பண்பான மிதவாதத் தலைவரை இழந்திருப்பது ஈடுசெய்ய முடியாத இழப்பாகும் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.எம். ஸுஹைர் தெரிவித்துள்ளார். இரா. சம்பந்தனின் மறைவையொட்டி அவர் விடுத்துள்ள அனுதாபச் செய்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அச்செய்தியில் அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:

மறைந்த இரா. சம்பந்தன் இந்நாட்டின் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வைப் பெற்றுக் கொள்வதற்காக அயராது உழைத்தார். அவர் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு தீர்வு காண உழைத்து வந்த அதேநேரம், இந்நாட்டு முஸ்லிம்கள் முகம்கொடுத்த பிரச்சினைகளுக்காகவும் குரல் கொடுக்கத் தவறவில்லை.

1980 களில் வடக்கு, கிழக்கில் முஸ்லிம்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் குறித்து தமிழ் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்காக எமது கவுன்சில் ஒப் முஸ்லிம் அமைப்பு 1985 இல் முன்னாள் அமைச்சர் மர்ஹூம் கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத் தலைமையில் சென்னைக்கு சென்றது. அத்தூதுக்குழுவுக்கு நான் செயலாளராகச் சென்றிருந்தேன்.



இவ்விஜயத்தின் போது தமிழகத்தில் இருந்த வடக்கு, கிழக்கைச் சேர்ந்த தமிழ் தலைவர்களுடன் வடக்கு, கிழக்கு முஸ்லிம்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடினோம். அவர்களில் இரா. சம்பந்தன் குறிப்பிடத்தக்கவராவார். எமது குழுவினரின் வருகையை அறிந்ததும் இன்முகத்துடன் எம்மை வரவேற்று வடக்கு முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து விரிவாக கலந்துரையாட வாய்ப்பளித்தார். எமது தரப்பினர் முஸ்லிம்கள் குறித்து முன்வைத்த பிரச்சினைகள் தொடர்பில் மிகுந்த அக்கறையோடு கவனம் செலுத்தினார்.

இரா. சமபந்தனைப் போன்று தமிழ்_முஸ்லிம் உறவை மேலும் கட்டியெழுப்புவதில் தமிழ்த் தலைவர்கள் கவனம் செலுத்துவது காலத்தின் அவசியத் தேவையாகும்.

# விலைமனுக்கோரல் (IFB)

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

## திணைக்களத்தின் பிரதான அலுவலக கட்டிடத்தின் உள்ளக மின்சார விநியோகத் தொகுதியில் காணப்படும் குறைபாடுகளை நீக்குதல்

**ஒப்பந்த இலக்கம் - 2024/1**

1. தலைவர், திணைக்களக் கொள்முதல் குழு, பதிவாளர் நாயகம் திணைக்களம், இல 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை, பதிவாளர் நாயகம் திணைக்களம் சார்பில், ஒப்பந்த இலக்கம் 2024/1, பிரதான அலுவலக கட்டிடத்தின் உள்ளக மின்சார விநியோகத் தொகுதியில் காணப்படும் குறைபாடுகளை நீக்குவதற்காக பொருத்தமான மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கீழே விபரிக்கப்பட்டுள்ள படி முத்திரைப் பொறிக்கப்பட்ட விலை மனுக்கள் அழைக்கப்படுகின்றன.
2. விலைமனு கோரல், தேசிய போட்டி அடிப்படையிலான விலைமனு முறைக்கமைய கோரப்படும்.
3. ஒப்பந்தத்தை வழங்குவதற்கு தகைமைப் பெறுவதற்கு விலைமனுதாரர் கறைநிரல் பட்டியலில் உள்ளடக்கப்படாதவராக இருத்தல் வேண்டும்.
3. விலைமனுதாரருக்கு CIDA நிறுவனத்தினால் மின் இணைப்பு (குறைந்த வோல்ட்) வகையின் EM 4 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தைக் கொண்ட செல்லுபடியாகும் பதிவு இருத்தல் வேண்டும். உறுதிப்படுத்தும் ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.
5. ஒப்பந்தத்தை வழங்குவதற்கு பின்வரும் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.
   அ) கடந்த 5 ஆண்டு காலப் பகுதியில் சராசரி வருடாந்த வருமானப் புரள்வு ஆகக் குறைந்தது ரூ.மில். 50 ஆக இருத்தல் வேண்டும்.
   ஆ) கடந்த 3 வருடத்திற்குள் ஆகக் குறைந்தது 5 மாடிகளுக்கு மேற்பட்ட கட்டிடமொன்றில் மின் இணைப்பாக்கத்தை வெற்றிகரமாக நிறைவேற்றிய அனுபவம் அல்லது கடந்த 5 வருடங்களுக்குள் இதனை ஒத்த தன்மையிலும் அளவிலுமான பணியொன்றை வெற்றிகரமாக நிறைவேற்றியிருத்தல் வேண்டும். (பூரணப்படுத்தல் சான்றிதழின் பிரதி போன்றவற்றை சமர்ப்பித்தல் வேண்டும்.)
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்களுக்கு மேலதிக தகவல்களை வழங்கல் பிரிவின் கணக்காளரிடம் பெற்றுக்கொள்ள முடியும். தொலைபேசி இலக்கம் 011- 3070870 ஆகும். வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 16.00 மணி வரை விலைமனு ஆவணங்களை இந்த அலுவலகத்தில் பரீட்சிக்க முடியும்.
7. ஆர்வமுள்ள விலைமனுதாரர்களுக்கு விலைமனு ஆவணங்களை 2024 ஜூலை 02 ஆம் திகதி முதல் 2024 ஜூலை 22 ஆம் திகதி பி.ப. 3.00 வரை பின்வரும் முகவரிக்கு எழுத்துமூல வேண்டுகோளை விடுத்து ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணத் தொகுதியைப் பெற்றுக்கொள்ள முடியும். மீளளிக்கப்படாத ரூ.3500.00 தொகையை பதிவாளர் நாயகம் திணைக்களம், இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல அலுவலகத்தின் சிறாப்பருக்குச் செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும்.
8. விலைமனுக்கள் 2024.07.23 ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தில் திறக்கப்படும். முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட விலைமனு ஆவணங்களை அன்றைய தினம் மு.ப. 11.00 மணிக்கு முன்னர் முத்திரையிடப்பட்ட உறையில் இட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "திணைக்களத்தின் பிரதான அலுவலக கட்டிடத்தின் உள்ளக மின்சார விநியோகத் தொகுதியில் காணப்படும் குறைபாடுகளை நீக்குவதற்கு விலைமனு கோரல்" எனக் குறிப்பிடுதல் வேண்டும். முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இணைப்பிரதிகளில் பதிவாளர் நாயகம் திணைக்களம், இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பவோ அல்லது நேரில் வந்து பதிவாளர் நாயகம் திணைக்களத்திற்கு வருகைத் தந்தோ ஒப்படைக்க முடியும்.
9. விலைமனுதாரர்களினால் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் 2024.10.09 ஆம் திகதி வரை செல்லுபடியாகும்.
10. விலைமனுவுடன் 2024.11.06 ஆம் திகதி வரை செல்லுபடியாகும் ரூபா. 80,000.00 விலைமனு முறியொன்றை வைத்தல் வேண்டும். விலைமனு முறி இலங்கை மத்திய வங்கியில் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பிணைமுறி (Bank guarantee) முறையில் அல்லது பத்தரமுல்லை, பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் பணமாக செலுத்துதல் வேண்டும்.
11. விலைமனு முன் சந்திப்பொன்று 2024 ஜூலை 08 ஆம் திகதி மு.ப.11.00 மணிக்கு பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தில் நடைபெறும்.

**பதிவாளர் நாயகம்**
**திணைக்கள கொள்முதல் குழுத் தலைவர்**

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**
**இல. 234/A3,**
**டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்லை.**

# விலை மனுக்கோரல்

**பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு**

## இலங்கை பொலிஸ்

**இலங்கை பொலிஸ் பிரிவினருக்கு நடப்பதற்காக பயன்படுத்தப்படும் லெதர் காலணிகள் (PSS/PCC) 70,000 ஜோடிகளை கொள்வனவு செய்தல்**

**விலைமனு இலக்கம் – *MPS/03/PB/PR/07/08/2024***

1. தலைவர், கொள்முதல் குழுக்கள் அமைச்சின் பொது பாதுகாப்பு அமைச்சின் 18வது மாடி சுஹுருபாய, பத்தரமுல்ல, இலங்கை. தற்போது இலங்கை பொலிஸ் பிரிவினருக்கு லெதர் காலணிகள் (PSS/PCC) 70,000 ஜோடிகளை கொள்வனவு செய்வதற்கு தகுதியான மற்றும் தேவையினை பூர்த்தி செய்யக்கூடிய மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. மனுக்கோரலானது தேசிய மனுக்கோரல் போட்டி முறைக்கமைய இடம்பெறுகின்றது (NCB).
3. திட்டமிடப்பட்ட கொள்முதல்

| ஒப்பந்ததின் பெயர் | மனுப் பாதுகாப்பு பெறுமதி | மீள்செலுத்தா ஆவணக் கட்டணம் | மனு முடிவடையும் இறுதி திகதி | முன் மனுக்கூட்டம் |
|---|---|---|---|---|
| இலங்கை பொலிஸ் பிரிவினருக்கு லெதர் காலணிகள் (PSS/PCC) 70,000 ஜோடிகளை கொள்வனவு செய்தல் | ரூ.9,327,950.00 | ரூ.69,750.00 | 2024.07.23 14.00 மணிக்கு | 2024.07.08 ஆம் திகதி 10.30 மணிக்கு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, 17வது மாடி, சுஹுருபாய, பத்தரமுல்ல,இலங்கை, கேட்போர் கூடத்தில நடைபெறும் |

4. இதற்காக ஆர்வமுள்ள தகுதி பெற்ற மனுதாரர்கள் மேலதிக விபரங்களை, 17வது மாடி சுஹுருபாய, பத்தரமுல்ல, இலங்கை, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் தலைமை கணக்காளர்களிடம் **தொ.பேசி.இல :0112887697** / மின்னஞ்சல்: **mops.procurementunit@gmail.com** மூலமாக பெற்றுக்கொள்ள முடிவதுடன், பொது மற்றும் வங்கி விடுமுறை நாட்கள் தவிர்ந்த வேளை நாட்களில் **2024.07.02 ஆம் திகதி 2024.07.22 ஆம் திகதி வரை மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00** மணிவரையான காலப்பகுதியில் **17வது மாடி சுஹுருபாய, பத்தரமுல்ல, இலங்கை எனும் முகவரியில் காணப்படும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் நிதிப் பிரிவில்** அல்லது **(www.pubsec.gov.lk)** எனும் எமது அதிகாரப்பூர்வ இணையதளத்தில் எவ்வித கட்டணச் செலுத்துகையும் இன்றி பரீட்சித்துக்கொள்ள முடியும்.
5. ஆர்வமுள்ள மனுதாரர்கள் 17வது மாடி சுஹுருபாய, பத்தரமுல்ல, இலங்கை, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் முகவரிக்கு எழுத்துப்பூர்வ விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும் மற்றும் மீளச்செலுத்தப்படாத **(ரூ.69,750.00) (அறுபத்து ஒன்பது ஆயிரத்து எழுநூற்றி ஐம்பது ரூபாய்)** கட்டணத்தை செலுத்தி **2024.07.02** ஆம் திகதியிலிருந்து **2024.07.22** ஆம் திகதி வரை காரியாலய வேலை நாட்களில் **மு.ப.09.00 மணியிலிருந்து பி.ப.03.00** மணி வரையான காலப்பகுதியினுள் ஆங்கில மொழியிலான மனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
6. சமர்ப்பிக்கப்பட்ட மனுக்கள் **2024.11.18** வரை செல்லுபடியாகும். இலங்கையில் உரிமம் பெற்ற வணிக வங்கியினால் வழங்கப்படும் அனைத்து மனுக்களும் **2024.12.17** ஆம் திகதி வரை செல்லுபடியாகும் ரூபாய் **(ரூ.9,327,950.00)** மதிப்புக்கான மனுப் பத்திரத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மனுக்கள் **2024.07.23** ஆம் திகதி **பி.ப.2.00** மணிக்கு அல்லது அதற்கு முன்னர் **17வது மாடி சுஹுருபாய, பத்தரமுல்ல, இலங்கை, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின்** முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமான மனுக்கள் நிராகரிக்கப்படும், மனுதாரர்கள் அல்லது நிகழ்வில் கலந்து கொள்ள விரும்பும் அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டவுடன் உடனடியாக திறக்கப்படும்.

**தலைவர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கொள்முதல் குழு (CAPC),**
**பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு,**
**17 ஆம் மாடி, "சுஹுருபாய", பத்தரமுல்லை.**
**இலங்கை**

SELACINE

# அஞ்சல் திணைக்களம்

## விலைமனுக்களுக்கான அழைப்பு

## Supplying, Installing, Configuration of PASS Cloud Computing Service and Department of Posts Sri Lanka. (PASS-Platform as a service)

2024 ஜுன் 12 ஆம் திகதியிடப்பட்ட விளம்பரத்திற்கமைவானது.

01. 01, 04 மற்றும் 06 ஆம் இலக்கங்களின் ஷரத்துக்களின் திகதிகள் பின்வருமாறு திருத்தப்படல் வேண்டும்.

- கேள்விப் பிணையானது 2024 டிசம்பர் 04 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
- 2024 ஒகஸ்ட் 05 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி வரையும் அஞ்சல் அதிபதிக்கு மீளளிக்கப்படாத கட்டணமாக 5000 இலங்கை ரூபாவை செலுத்திய பின்னர், கீழேயுள்ள முகவரிக்கு கேள்விதாரரினாலேயே அல்லது கேள்விதாரரின் பிரதிநிதிகளினால் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள கேள்விதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
- 2024 ஒகஸ்ட 06 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் அனைத்து கேள்விகோரல்களும் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

**கணக்காளர் (பெறுகை),**
**அஞ்சல் தலைமையகம்,**
**தரை மாடி, இல. 310,**
**டி. ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு-10.**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**அஞ்சல் திணைக்களம்,**
**இல.: 310, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 01000.**
2024.07.02.

# வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்

**கல்வி அமைச்சு**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

பல்கலைக்கழத்தில் பின்வரும் தேவைகளை நிரப்புவதற்கு பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து இரத்மலானை, வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழக, திணைக்கள பெறுகைக் குழு (சிரேஷ்ட), தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| No | IFB No | Tasks Description | Bid Security (Rs.) | Non-refundable Fee (Rs.) |
|---|---|---|---|---|
| 01 | (UoVT/SUP/NCB/01/I/2024) | Supply and Delivery of Laboratory Equipment for the Department of Electro-Mechanical Technology | 60,000.00 | 2000.00 |
| 02 | (UoVT/SUP/NCB/01/II/2024) | Supply and Installation of High End Computers for the Department of Building Service Technology | 52,500.00 | 2000.00 |
| 03 | (UoVT/SUP/NCB/01/III/2024) | Supply and Delivery of Laboratory Equipment for the Department of Construction Technology | 37,500.00 | 2000.00 |
| 04 | (UoVT/SUP/NCB/01/V/2024) | Supply and Delivery of Laboratory Equipment for the Department of Building Services Technology | 45,000.00 | 2000.00 |
| 05 | (UoVT/SUP/NCB/01/VI/2024) | Supplying, Commissioning and Testing of food Laboratory Equipment for the Department of Agriculture and Food Technology | 45,000.00 | 2000.00 |

01. தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
02. ஆர்வம் கொண்ட எதிர்பார்ப்புடைய விலைமனுதாரர்கள் பத்தரமுல்லை, வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தின் வழங்கல்கள் பிரிவில் இருந்து (தொலைபேசி இலக்கம் - 011-2630733) மேலதிக விபரங்களைப் பெற முடியும் என்பதோடு 2024.07.02 ஆம் திகதி தொடக்கம் 2024.07.22 ஆம் திகதி வரை மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.00 இற்கு இடையே விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.
03. எதிர்பார்ப்புடைய விலைமனுதாரர்கள் இரத்மலானை, வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழக, உதவி காசாளருக்கு (வழங்கல்கள்) எழுதிய எழுத்துமூல கோரிக்கை ஒன்றை சமர்ப்பித்து மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி (இலங்கை வங்கி, இரத்மலானை கிளையில் 0070308457 என்ற வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழக கணக்கு இலக்கத்திற்கு வரவு வைப்பதற்கு இலங்கை வங்கியின் எந்த ஒரு கிளையில் இருந்தும் செலுத்திய மீளளிக்கப்படாத வைப்பு ரசீது) மு.ப. 9.00 மற்றும் பி.ப. 2.00 இற்கு இடையே (விலைமனு ஆவணங்களை வழங்கும் திகதி ஆரம்பிக்கும்) 2024.07.02 ஆம் திகதி தொடக்கம் 2024.07.22 ஆம் திகதி வரை விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை பெற முடியும்.
04. இரு பிரதிகளிலான முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2024.07.23 ஆம் திகதி பி.ப. 2.00 இற்கு முன்னர் கிடைப்பதற்கு "தலைவர், வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தின் திணைக்கள பெறுகைக் குழு, இல. 100, கந்தவல, இரத்மலானை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது பல்கலைக்கழகத்தின் வழங்கல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுதல் வேண்டும். விலைமனுவை கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "IFB No, பெறுகை விபரம் மற்றும் விலைமனுக்களை திறக்கும் திகதியை" குறிப்பிடுதல் வேண்டும். தாமதித்து கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
05. எந்த ஒரு கட்டத்திலும் எந்த ஒரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் ஏற்பது அல்லது நிராகரிக்கும் அனைத்து உரிமைகளும் பெறுகைக் குழு வசமானது.

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு,
வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்
இல. 100, கந்தவல, இரத்மலானை.

தொ.: 0112630733
தொலைநகல்: 0112630738
இணையதளம்: www.uovt.ac.lk
2024 ஜூலை 02


**The Housewives' companion Classifieds on Daily News**


# சிறு விளம்பரம்

**மோட்டார் வாகனங்கள்**

**119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு**

227-1313 ISUZU 1994 LORRY அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல.310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி 0714542 9 58. 043186

**122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு**

AAN - 7835 Bajaj 2013 Threeweeler. அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி 071 121081 0 . 043182

BIG - 8673 HONDA DIO 2 019 - MOTORCYCLE. அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல.310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி 0711210 8 10. 043178

**வேலைவாய்ப்பு**

**325 தொழில்துறை பொது**

கொழும்பில் உள்ள சலூன் கடைக்கு முடி வெட்ட தெரிந்த ஆண் ஒருவர் தேவை. மேலதிக விபரங்களுக்கு தொ.இல. 0772976364. 043491


**Repeat Your ad For Better Offers**

OBSERVER adz · தினகரன் வாரமஞ்சரி

**Promotional Rates for Classified Advertisements** (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,000/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,300/- |

**Badulla & Nuwaraeliya District**

Hatton - 051 22 225 63
2145 - T. P. C. Chinthaka Nanayakkara - Hatton Stores, No. 3, Main Street, Hatton.

Hatton - 052 22 773 47
2506 - C. T. Perumal - Hatton Stores, No. 3, Main Street, Hatton.

Nuwaraeliya - 052 22 341 34
2507 - A. Rajalingam - No. 6, New Market Building, Nuwaraeliya.

Thalawakele - 071 7 236 799
2517 - G. G. L. Ravindra Kumara - No. 119, 121, Nuwaraeliya Road, Thalawakele.

Kotagala - 051 4 924 447
2555 - D. Deonis Kodikara & Sons - Rosita Bazaar, Kotagala.

Haputale - 077 7 278 899
8117 - R. M. K. Fizar Khan - Multi Centre, No. 2, Main Street, Haputale.

Bandarawela - 071 0 796 060
8126 - L. Eubert Silva - Nayana Book Shop, No. 343, Main Street, Bandarawela.

Kandy - 055 22 571 30
8131 - Nimal Attanayake - Per Siripura Contractor, Ex-Kandy, Kandy.

Haputale - 057 22 443 92
8139 - A. K. P. Hemawathi - Multi Centre, No. 2, Main Street, Haputale.

Lunugala - 055 22 639 84
8140 - E. M. Lal - Maduka Gold House, No. 111, Main Street, Lunugala.

Bandarawela - 057 22 301 60
8172 - K. P. Kodagoda - 'Sri Subasetha', 2nd Floor, Sinhagiri Building, Bandarawela.

Badulla - 055 22 256 16
8196 - Advertising Office (Lake House), No. 14, Opposite Muthiyangana Clock Tower, Badulla.

Passara - 055 22 888 89
8202 - M. K. M. Ismath - Rishana Book Shop, No. 354, Main Street, Passara.

Badulla - 072 7 998 533
8207 - K. G. Prasanna Kumara - No. 9, Nadukara Kanda Road, Badulla.

Diyatalawa - 057 22 290 24
8228 - A. S. De Alwis - Alwis Book Shop, No. 16, Main Street, Diyatalawa.

**Colombo City Area**

Borella - 0112268251
1040 - Gunasiri Book Shop - No. 685, Maradana Road, Punchi Borella.

Dematagoda - 075 7 222 878
1044 - No. 166/17, Kolonnawa Road, Dematagoda.

Colombo 02 - 078 5 200 648
1046 - R. P. C. Jayawardana - Chiththampalam A Gardiner Mawatha, Colombo 02.

Kirulapane - 071 5 439 396
1051 - Ramani Book Shop - 27/A, High Level Road, Kirulapane.

Mattakuliya - 011 2 521 160
1060 - M. N. E. Ratnayake - No. 89, Church Road, Mattakuliya.

**ADZ HOTLINE - 011 2 429 369**

**CALL - 011 2 429 342/ 343**

# ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை

## பொறியியல் திணைக்களம்

## விலைமனுக்கோரல் (IFB)

1. ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபையின் நகர ஆணையாளரினால் பின்வரும் தொழில்களுக்குரிய தகுதிவாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை வைக்கப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

2. I. தேசிய போட்டி மனு கோரல் திட்டத்திற்கமைய மனு கோரப்படுவதுடன் இக் கொள்முதலின் கீழ் உள்ள தொழில் மதிப்பீட்டு பெறுமதி வட் பெறுமதி (வட் மற்றும் ஏனைய வரி தவிர்ந்த) 50 மி.ரூபாய்க்கு குறைவதனால், அரச நிதி சுற்றுநிருப இலக்கம் 04/2016 (ii) அமைய பிரதேச விருப்பம் மற்றும் CIDA தர விருப்புரிமை பொருந்தும்.

   II. இவ் கொள்முதலுக்கு அரச நிதி சுற்றுநிருபம் 03/2020 (i) க்குரியதுடன் "அரசாங்கத்திற்குரிய வியாபாரங்கள் இவ் தொழில்களுக்கு மனு முன்வைப்பதாயின், நூற்றுக்கு 05 விருப்பு வாக்கு வழங்கப்படும்."

3. இந்த ஒப்பந்தத்தைப் பெறுவதற்குத் தகுதிபெற, விலை மனுதாரர் தடுப்புப்பட்டியலில் சேர்க்கப்படக்கூடாது மேலும் கீழே உள்ள அட்டவணையிலும் விலைமனு ஆவணத்திலும் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

| தொடர் இலக்கம் (1) | வேலை விவரம் (2) | CIDA பதிவு (3) | மீளச் செலுத்தா விலை மனுக் கட்டணம் (ரூ.) (4) | ஏல பாதுகாப்பு / பண வைப்பு (5) | விலை மனு ஆவணங்கள் மற்றும் தொலைபேசி இலக்கம் வழங்கப்பட்ட இடம் மற்றும் விநியோகம் (6) |
|---|---|---|---|---|---|
| 1 | மக்கள் வங்கியின் காணியை அண்டிய காணியில் சுயதொழில் செய்பவர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்களின் பொருட்களை விற்பனை செய்வதற்கான விற்பனை நிலையத்தை நிர்மாணித்தல். (கட்டம் iii) | C5 | 25,000.00 | 500,000.00/ 250,000.00 | நகர ஆணையாளர், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை, த.பெ. 06, ஸ்ரீ ஜயவர்தனபுர. தொலைபேசி இலக்கம் - 011-2862173 மின்னஞ்சல்-011-2874703 |

4. உருக்கு கட்டிடங்கள் மற்றும் கட்டுமானத்தில் (Steel buildings Fabrications and erection) அனுபவம் உள்ள விலைமனுதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் மற்றும் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையின் பொறியியல் திணைக்களத்திலிருந்து கூடுதல் தகவல்களைப் பெறலாம் மற்றும் விலைமனு ஆவணங்களை அலுவலக நேரத்தில் இலவசமாகப் பார்க்கலாம்.

5. ஆர்வமுள்ள விலை மனுதாரர்களுக்கு அல்லது அவர்களின் முகவர்களுக்கு **2024.07.02**ம் திகதி முதல் **2024.07.22**ம் திகதி வரை யாதாயினும் ஒரு வேளை நாளில் **மு.ப.9.00** முதல் **பி.ப.3.00** வரை காலத்தில் ஒரு தொழிலுக்கு **ரூ.25000.00** விலை மனு கட்டணம் (அட்டவணையில் 04ம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு) கட்டணம் செலுத்தி நிறுவனத்தின் கடிதத்தாளில் எழுத்துமூல விண்ணப்பம் செய்த பின்னர் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையின் பொறியியல் திணைக்களத்தின் விலை மனு ஆவண தொகுதியினை கொள்வனவு செய்ய முடியும்.

6. முத்திரையிடப்பட்ட விலை மனுக்களை வெவ்வேறாக கடித உறைகளில் இடப்பட்டு (முதல் பிரதி மற்றும் அதன் நகல் பிரதி) திட்டத்தின் பெயர் உறையின் மேல் இடது மூலையில் குறிப்பிட்டு **2024.07.23 பி.ப. 2.30**க்கு முன்னல் நகர ஆணையாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள டென்டர் பெட்டியில் இடவும். தாமதமாக கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலை மனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவு பெற்றவுடன் விலைமனுக்கள் உடனடியாக திறக்கப்படுவதுடன் அச் சந்தர்ப்பத்தில் விலை மனு முன்வைத்த நிறுவனங்களின் முகவர்களுக்கு பங்கேற்க முடியும்.

7. இது தொடர்பாக மேலதிக தகவல்கள் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையி உத்தியோகப்பூர்வ இணையத்தளமாகிய **www.kotte.mc.gov.lk** ஊடாக பெற்றுக்கொள்ள முடியும்.

**நகராட்சி ஆணையாளர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை.**

SELACINE

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www. observerjobs. lk

# அறிவித்தல்

**வ/ப நாத்தாண்டிய புதிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 2024-06-30ஆம் திகதியில் உள்ளவாறான வாக்குரிமை அங்கத்தவர்களின் பெயர் பட்டியல்**

## 2024-07-11ஆம் திகதி முதல் 2024-07-25ஆம் திகதி வரை

**பின்வரும் இடங்களில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.**
**அதில் உங்களது பெயர் உள்ளடக்கப்பட்டிருக்காவிட்டால் அல்லது ஏதாவது திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தால் அதுபற்றி**

2024-07-25ஆம் திகதிக்கு முன் தலைமை அலுவலகத்திற்கு எழுத்து மூலம் தபாலில் அல்லது நேரடியாக ஒப்படைத்தல் வேண்டும். அன்றைய தினத்திற்குப் பின் எந்தவொரு முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

சங்கத்தின் முகவரி: செயலாளர், வரையறுக்கப்பட்ட நாத்தாண்டிய புதிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், நாத்தாண்டிய
www.nattmpcs.lk - தொலைபேசி இல.: 032-2254236

| பிரதேச இலக்கம் | பிரதேசத்தின் பெயர் | காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள இடம் |
|---|---|---|
| 1 | நாத்தாண்டிய இல. 01 | நாத்தாண்டிய நெட்கோ கோப்சிட்டியில் உள்ளது |
| 2 | இல. 02, நாத்தாண்டிய (இல. 03 நாத்தாண்டிய, இல. 11, தம்போவ என்பன ஒன்றிணைக்கப்பட்டுள்ளது) | உரக் களஞ்சியசாலையில் உள்ளது (நாத்தாண்டிய) |
| 3 | 04 பிலாகட்டுமுல்ல | பிரதான அலுவலகம், செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 4 | 05 மானிங்கல | பிரதேசத்தில் உள்ளது |
| 5 | 06 துன்கன்னாவ | மினி கோப்சிட்டியில் உள்ளது |
| 6 | 07 நாராவில (இல. 24 கச்சிராவ ஒன்றிணைக்கப்பட்டுள்ளது) | பிரதான அலுவலகம், செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 7 | 08 யக்தெஸ்ஸாவ | பிரதான அலுவலகம், செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 8 | 09 மீகஹவெல | பிரதான அலுவலகம், செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 9 | 10 பஹல கொட்ராமுல்ல | மினி கோப்சிட்டியில் உள்ளது |
| 10 | 12 தம்மிககம | பிரதான அலுவலகம், செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 11 | 13 சோமவத்த | பிரதான அலுவலகம், செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 12 | 14 மாவில | பிரதான அலுவலகம், செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 13 | 15 லங்சிகம | கிராமிய வங்கியில் உள்ளது (லங்சிகம) |
| 14 | 16 இஹல கொட்டாரமுல்ல | கிராமிய வங்கியில் உள்ளது (இஹல கொட்டாரமுல்ல) |
| 15 | 17 இஹல கட்டுநேரிய | கட்டுநேரிய கிராமிய வங்கி மற்றும் தலைமை அலுவலகம் செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 16 | 18 கொஸ்வத்த | மினி கோப்சிட்டியில் உள்ளது |
| 17 | 19 மொரகெலே | மினி கோப்சிட்டியில் உள்ளது |
| 18 | 20 பலுவெல்கால | மினி கோப்சிட்டியில் உள்ளது |
| 19 | 21 முதுகட்டுவ | பிரதான அலுவலகம், செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 20 | 22 மெத கட்டுநேரிய (இல. 23 பஹல கட்டுநேரிய ஒன்றிணைக்கப்பட்டுள்ளது) | கட்டுநேரிய கிராமிய வங்கியில் உள்ளது |
| 21 | 29 தெமட்டபிட்டிய | கிராமிய வங்கியின் உள்ளது (தெமட்டபிட்டிய) |
| 22 | 30 வதுகஹமுல்ல | பிரதான அலுவலகம், செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 23 | 31 மெதகொட | பிரதான அலுவலகம், செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 24 | 33 குடாமடுவெல்ல (இல. 46 பரதெல்பொல ஒன்றிணைக்கப்பட்டுள்ளது) | பிரதேசத்தில் உள்ளது |
| 25 | 34 தொடுவாவ | கிராமிய வங்கியில் உள்ளது (தொடுவாவ) |
| 26 | 35 கொஸ்வாடிய | பிரதான அலுவலகம், செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 27 | 36 முட்டிபெந்திவெல | பிரதான அலுவலகம், செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 28 | 37 மஹவெவ (இல. 32 மட்டாகொடுவ ஒன்றிணைக்கப்பட்டுள்ளது) | மஹவெவ கோப்சிட்டியில் உள்ளது |
| 29 | 38 தல்வில | மினி கோப்சிட்டியில் உள்ளது |
| 30 | 39 ஹால்பன்வில | பிரதான அலுவலகம், செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 31 | 42 குடாவெவ | பிரதான அலுவலகம், செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 32 | 43 மாரவில தேவாலய வீதி (இல. 40 பிரனாந்து வீதி 01, இல. 41 பிரனாந்து வீதி 02 என்பன ஒன்றிணைக்கப்பட்டுள்ளன) | மாரவில மினி கோப்சிட்டி மற்றும் பிரதான அலுவலகம், செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 33 | 44 மாவிர நவீனமயப்படுத்துதல் | மினி கோப்சிட்டியில் உள்ளது |
| 34 | 45 வலஹபிட்டிய (இல. 50 கல்அமுன ஒன்றிணைக்கப்பட்டுள்ளது) | மினி கோப்சிட்டியில் உள்ளது (வலஹபிட்டிய) |
| 35 | 47 மரந்த | பிரதான அலுவலகம், செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 36 | 51 சாகரகம | பிரதான அலுவலகம், செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 37 | 52 மோதரவெல்ல | பிரதான அலுவலகம், செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 38 | 53 இரணவில | கிராமிய வங்கியில் உள்ளது (இரணவில) |
| 39 | 54 கடோல்கொடவத்த | பிரதான அலுவலகம், செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 40 | 55 இத்தமல்கம | பஹல வலஹபிட்டிய கோப்சிட்டியில் மற்றும் தலைமை அலுவலகத்தில் செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 41 | 56 பனங்கொட | பிரதான அலுவலகம், செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 42 | 57 பஹல வலஹாபிட்டிய | கோப் சிட்டியில் உள்ளது |

**செயலாளர்,**
**வ/ப நாத்தாண்டிய புதிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,**
**நாத்தாண்டிய. தொலைபேசி இல. 032-2254236**

# இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

ஆண்டு 20ம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 12 (1) (அ) பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்.

## அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான உத்தேசம்

2009ம் ஆண்டு 20ம் (திருத்தப்பட்ட) இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 12(1) (அ) பிரிவிற்கமைய, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ("ஆணைக்குழு") நுகர்வோருக்கு தொடர்ச்சியாக மின்சார விநியோகத்தைக் கிடைக்கச் செய்வதை உத்தரவாதப்படுத்தும் பொருட்டு குறிப்பிட்ட நபருக்கு மின்சாரத்தினை பிறப்பாக்கம் செய்யும் நோக்கத்திற்கான அனுமதிப்பத்திரத்தினை மேம்படுத்த உத்தேசிக்கின்றது என்பதை இத்தால் அறியத்தருகின்றது.

| விண்ணப்ப குறிப்பு இல. | விண்ணப்பதாரர் | மின்நிலையம்/ வசதியின் பெயர் | திறன் (MW) | தொழினுட்பம் |
|---|---|---|---|---|
| E/AL/N/24/05 | WKV ஹைட்ரோ டெக்னிக்ஸ் பிரைவேட் லிமிடெட் | கம்பலவலகட மினி ஹைட்ரோ மின் உற்பத்தி நிலையம் | 4.206 | மினி ஹைட்ரோ |

மேற்குறிப்பிட்ட முன்மொழிவுகள் தொடர்பான, ஆட்சேபனைகள் (ஏதுமிருப்பின்) அறிவித்தல் வெளியிடப்பட்டு இருபத்து எட்டு (28) நாட்களுக்குள் ஆணைக்குழுவிற்கு எழுத்து மூலமாக அறிவிக்கலாம். அத்துடன் ஆட்சேபனைகளை முன்வைக்கும்போது விண்ணப்பக் குறிப்பு இலக்கத்தினைக் குறிப்பிட்டு முன்வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

தலைவர்
இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு
06-வது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்,
இலக்கம் 28, புனித மைக்கல் வீதி,
கொழும்பு 03

திகதி: 2024.07.02

தொலைபேசி: (011) 2392607/8
தொலைநகல்: (011) 2392641
பெக்ஸ்: licensing@pucsl.gov.lk
இணையதளம்: www.pucsl.gov.lk

# இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

**(2002ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டத்தின் 17வது பிரிவின் கீழான பொது அறிவிப்பு)**

## 2024 ஆண்டுக்கான உத்தேசிக்கப்பட்டுள்ள 02வது மின்சார கட்டண திருத்தம் பொது ஆலோசனை கேட்டல்

2009ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 30ஆவது பிரிவின் கீழ், உரிமதாரரால் (இலங்கை மின்சாரசபை) 2024 ஆம் ஆண்டிற்கான உத்தேசிக்கப்பட்ட 02வது மின்சாரக் திருத்தக் கட்டணத்தைப் பற்றிய வாய்மொழிமூல பொது ஆலோசனை கேட்டலை **2024 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 09 ஆம் திகதி, காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில்** நடத்தப்படும்.

2002ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டத்தின் 17வது பிரிவின் அமைய பொது ஆலோசனை கேட்டலை நடத்துவற்கான விதிமுறைகளுக்கு அமைவாக நடைபெறும்.

பொதுமக்களின் ஆலோசனைக் கேட்டல் முடிந்த பின்னர் ஆணைக்குழு தனது இறுதி முடிவை ஜுலை மாதம் 15ஆம் திகதியன்று அறிவிக்கும்.

இந்த மூல பொது ஆலோசனை கேட்டலின் போது, உத்தேசிக்கப்பட்டுள்ள மின்சார கட்டண திருத்தம் தொடர்பான பாதிப்புகள் அல்லது சிக்கல்கள் அல்லது தகவல்கள் குறித்து வாய்மொழியாக சமர்பிக்குமாறு பங்குதாரர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இதன் மூலம் அழைப்புவிடுக்கப்படுகிறது.

**2024 ஜுலை மாதம் 07** ஆம் திகதிக்கு முன்னர் வாய்மொழிமூல ஆலோசனையை வழங்க கீழே உள்ள ஏதேனும் முறைகளைப் பயன்படுத்தி முன் பதிவுசெய்யவும்.

**பதிவுகளுக்கு:** 0770 555 166
**மின்னஞ்சல்:** consultation@pucsl.gov.lk
**தொலைநகல்:** 011 239 2641
**தொலைபேசி** : 011 239 2607/8 (அலுவலக நேரத்தில் மாத்திரம்)

ஆலோசனை பத்திரத்தை www.pucsl.gov.lk/notices இல் பார்வையிடலாம்

**தலைவர்**
**இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு**
02 ஜுலை 2024

# தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

## வருடாந்த பஸ் கட்டண திருத்தம் ஜுலை 2024

**பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகள், பேருந்து உரிமையாளர்கள், பேருந்துகளில் பணிபுரியும் பணியாளர்கள் குழு மற்றும் ஏனைய அனைத்து பொதுமக்களுக்கான அறிவிப்பு.**

வருடாந்த பஸ் கட்டண திருத்தத்தின்படி, பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் அனைத்து பஸ் சேவைகளின் பஸ் கட்டணங்களும் 2024.07.01 ஆம் திகதி நள்ளிரவு முதல் (2024.07.02 ஆம் திகதி 0001 மணிநேரத்திலிருந்து) நூற்றுக்கு ஐந்து தசம் பூச்சியம் ஏழு சதவீதப் புள்ளிகளால் குறைக்கப்பட்டுள்ளன.

அதன்படி, 2024.07.02 ஆம் திகதி 0001 மணி முதல் இலங்கை போக்குவரத்துச் சபையினால் இயக்கப்படும் பேருந்துகளிலும் மற்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு / மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தின் கீழ் இயங்கும் தனியார் பேருந்துகளிலும் புதிய பேருந்துக் கட்டணம் நடைமுறைப்படுத்தப்படும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அதிகாரப்பூர்வ இணையதளமான www.ntc.gov.lk மூலம் கவனிக்கலாம் / பதிவிறக்கம் செய்யலாம்.

நிர்ணயிக்கப்பட்ட பஸ் கட்டணத்தை விட கூடுதலாக கட்டணம் வசூலிப்பவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

பொதுமக்கள் விசாரணை - 1955 துரித இலக்கத்திற்கு தெரிவிக்கலாம்.

**சசி வெல்கம**
**தலைவர்**
**தேசிய போக்குவரத்து ஆணைக்குழு**

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz It's what you want
Classified
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067
E-mail - classified@lakehouse.lk
WE ACCEPT
BANK OF CEYLON BOC
Lake House Branch
Acc. No. 000000377

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### வடமேல் மாகாண சபை
### மாகாண கல்வித் திணைக்களம்

கல்வி அமைச்சினால் நிதியிடப்பட்ட பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள திருத்த வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மாகாணக் கல்விப் பணிப்பாளர் (வடமேல் மாகாணம்) சார்பாக திணைக்கள பெறுகைக்குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

| தொ. இல. | விலைக் கோரல் குறியீட்டி இலக்கம் | ஒப்பந்தத் தலைப்பு | பிரதேச பொறியிய லாளர் அலுவலகம் | நிதி வளம் | தேவையான CIDA பதிவுத் தரம் (கட்டிடங்கள்) | ஒப்பந்தக் காலம் (நாட்கள்) | விலைக் கோரல் பிணை முறித் தொகை (ரூபா) (பண வைப்புகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது) | விலை மனுக்களின் செல்லுபடிக் காலம் | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் (ரூபா) | விலைக் கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | 24/E/Wen/ MOE/ NCB/R1 | மாதம்பே சேனாநாயக்க பாடசாலையில் உள்ள பிரதான மண்டபக் கட்டிடத்தின் திருத்தவேலைகள் - படிநிலை 01 | வென்னப்புவ | MOE | C4 அல்லது அதற்கு மேல் | 300 | 1,500,000.00 | 2024-10-29 ஆம் திகதி வரை | 2,500.00 | 2024-11-26ஆம் திகதி வரை |

1. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதியைப் பெறுவதற்கு, சித்திகரமான விலைமனுதாரர் தகுதிநீக்கம் செய்யப்பட்ட பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) தேவையான பதிவுத் தரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
2. விலைமனுதாரர் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்திருத்தல் வேண்டும் என்பதுடன் பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தொழில்நுட்பத் தகவல்களை குருநாகல், மாகாண சபை அலுவலகக் கட்டிடத்தொகுதி, 2ஆம் மாடி, பொறியியல் திணைக்களம், மாகாண பொறியியல் பணிப்பாளர் (வமேமா) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி / தொலைநகல்: 037-2222700.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024-07-29ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.30 மணி வரையில் குருநாகல், கண்டி வீதி, மாகாணக் கல்வித் திணைக்களம், பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
5. நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை 2024-07-30ஆம் திகதி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது குருநாகல், கண்டி வீதி, மாகாண கல்வித் திணைக்களம் (வமேமா), பிரதான கணக்காளர் அலுவலகத்தில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள ''கேள்விப் பெட்டி''யில் உள்ளிடல் வேண்டும். விலைமனுக்கள் 2024-07-30ஆம் மு.ப. 10.00 மணிக்கு முடிவுறுத்தப்படும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின் சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் கலந்துகொள்வதற்கு தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் மேற்கூறிய முகவரியில் உடன் திறக்கப்படும்.
6. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று மாதம்பே சேனாநாயக்க பாடசாலையில் 2024-07-17ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இடம்பெறும்.
8. மேற்குறிப்பிடப்பட்ட முகவரியானது :

**J.A.M.P. ஜயதிலக்க,**
**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**மாகாண கல்வித் திணைக்களம் (வமேமா),**
**கண்டி வீதி,**
**குருநாகல்.**

**தொலைபேசி: 037-2223211 / 037-2222422**
**தொலைநகல் இல. 037-2222422/037-2222545**
**இணையதள முகவரி: www.nwpedu.lk**
**திகதி: 2024-07-02.**

## பெறுகை அறிவித்தல்

### போதனா வைத்தியசாலை - குருநாகல்

இவ் வைத்தியசாலையில் நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள "சத்திரசிகிச்சையக கட்டிடத்தின் தரை மாடியின் மிகுதி வேலைகளைப் பூர்த்தி செய்தல்" வேலை விடயத்தை நிறைவேற்றுவதற்காக குருநாகல் வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரால் தகைமையுள்ள மற்றும் திறன் உடைய கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

01. ஒப்பந்தத்தின் பெறுமதி ரூபா 13.6 மில்லியன் ஆவதுடன், கேள்விப் பிணையின் பெறுமதி ரூ. 205,000.00 ஆகும்.
02. ஒப்பந்தம் வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு கேள்விதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலிடப்படாதவராக இருப்பதுடன் நிர்மாண அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) C7, C6 மற்றும் C5 தரத்தில் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
03. கேள்விதாரர்கள் 1987 இல. 03 பொது ஒப்பந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் குறித்த பதிவுச் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும். வேலை விடய இல. THK/A02/24/2024 ஆகும்.
04. தேசிய போட்டி கேள்விகோரல் முறைமை (NCB) மூலம் இக்கேள்விகோரல் நடைபெறும். இப்பெறுகையின் கீழ் நிறைவேற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள வேலைகளின் பெறுமதி ரூபா 50 மில்லியனுக்கு குறைவாக இருப்பதால் இல. 4/2016 (III) என்ற அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பரிந்துரையின் பிரகாரம் பிரதேச முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை கிடைக்கும்.
05. இவ் ஒப்பந்தத்துடன் சம்பந்தப்பட்ட பெறுகைக்கு முன்னரான கூட்டம் 2024.07.15 மு.ப. 10.00 இற்கு குருநாகல் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் பணிமனையின் கூட்ட மண்டபத்தில் நடைபெறும்.
06. 2024.07.24 பி.ப. 2.00 வரை கேள்விகள் கோரப்படுவதுடன், கேள்விகள் திறத்தல் அன்றே அந்த நேரத்திலேயே பணிப்பாளரின் உத்தியோகபூர்வ அறையில் இடம்பெறும். அவ்வேளையில் உங்களுக்கு அல்லது உங்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.
07. 2024.07.23 பி.ப. 3.00 வரை வாரத்தின் அலுவலக நாட்களில் இலவசமாக கேள்வி ஆவணங்களைப் பரீட்சிக்க முடிவதுடன் அன்றைய தினம் அந்த நேரம் வரை கீழேயுள்ள ஆவணங்களைச் சமர்ப்பித்து கேள்வி ஆவணங்களை தலைமையகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
    - I. பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, குருநாகல் இற்கு சமர்ப்பிக்கும் எழுத்துமூல விண்ணப்பமொன்று
    - II. மீளளிக்கப்படாத ரூ. 4000 தொகையை வைத்தியசாலையின் காசாளருக்கு செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டு
    - III. உறுதி செய்யப்பட்ட பிரதியுடன் ICTAD/CIDA பதிவுச் சான்றிதழின் மூலப்பிரதி

கேள்விப் பத்திரங்கள் உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலை விடயத்தின் பெயரை தெளிவாகக் குறிப்பிடப்பட்ட உங்களது கேள்விப் பத்திரத்தை தலைவர், பிரதேச பெறுகைக் குழு, போதனா வைத்தியசாலை, குருநாகல் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அவ்வது பிரதம கணக்காளரின் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கொண்டுவந்து உள்ளிட முடியும் அத்துடன் இது பற்றிய மேலதிக விபரங்கள் தேவைப்படின் 037 - 2233906 மூலம் இல. 2800ஐ அழைத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை,**
**குருநாகல்**






## வத்தளை – மாபோல நகர சபை

### பெறுகை அறிவித்தல்

வத்தளை - மாபோல நகர சபைக்குரித்தான பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கடை அறைகளை வியாபாரத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதுடன் இதன்பொருட்டு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விப் படிவங்கள் 2024-07-01ஆம் திகதி முதல் 2024-07-30ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் படிவங்கள் 2024-07-30ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு நகர சபை கூட்ட மண்டபத்தில் திறக்கப்படும்.

கேள்வி விண்ணப்பங்களை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படும் கேள்விப் பிணை வைப்புத் தொகை மற்றும் மீளளிக்கப்படாத படிவக் கட்டணத்தை அரச வரிகள் சகிதம் செலுத்தியதன் பின் 2024-07-29ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை நகர சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை ''நகர சபையின் செயலாளர் மற்றும் சபையின் அதிகாரம் வாய்ந்த கடமைகளை நிறைவேற்றும் அதிகாரி, வத்தளை - மாபோல நகர சபை, வத்தளை'' எனக் குறிப்பிட்டு மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என இரு பிரதிகளில் பதிவுத் தபாலில் நிர்ணயிக்கப்பட்ட திகதிக்கு முன் அனுப்பலாம் அல்லது இந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். கேள்விப் படிங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியைச் சமர்ப்பிக்கும் கேள்வியின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

எந்தவொரு கேள்வியையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை வத்தளை - மாபோல நகர சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

விசாரணை:
**தொ.பே. இல. 011-2932710**
**பீ.ஏ.எஸ்.எஸ். சந்தருவன்,**
**நகர சபையின் செயலாளர் மற்றும்**
**சபையின் அதிகாரம் வாய்ந்த கடமைகளை நிறைவேற்றும் அதிகாரி,**

**அட்டவணை**

| தொ. இல. | கடை அறை இலக்கம் அமைந்துள்ள இடம் | ஆகக் குறைந்த மாதாந்த கேள்வி | (மீளளிக்கப் படும்) கேள்வி வைப்புத் தொகை ரூபா | (மீளளிக்கப் படாத) கேள்விப் படிவக் கட்டணம் ரூபா | காலம் |
|---|---|---|---|---|---|
| | **ஹெந்தளை சந்தைக் கட்டிடத்தொகுதி** | | | | |
| 01 | HM18ஆம் இலக்க கடை அறை | 5,750.00 | 5,175.00 | 5,000.00 | 2024-09-01 - 2027-09-01 (அதாவது 2024-09-01ஆம் திகதி முதல் 03 வருட காலத்திற்கு) |
| 02 | HM04ஆம் இலக்க கடை அறை | 18,100.00 | 16,290.00 | 5,000.00 | 2024-09-01 - 2027-09-01 (அதாவது 2024-09-01ஆம் திகதி முதல் 03 வருட காலத்திற்கு) |
| 03 | HM05ஆம் இலக்க கடை அறை | 18,100.00 | 16,290.00 | 5,000.00 | 2024-09-01 - 2027-09-01 (அதாவது 2024-09-01ஆம் திகதி முதல் 03 வருட காலத்திற்கு) |
| 04 | ஹெந்தளை சந்தியிலுள்ள விளம்பரப் பலகை | 30,000.00 (ஒரு வருடத்திற்கு) | | 5,000.00 | 2024-09-01 - 2027-09-01 (அதாவது 2024-09-01ஆம் திகதி முதல் 03 வருட காலத்திற்கு) |
| 05 | அவரிவத்த தபால் அலுவலகத்தின் மேல் தளத்தைக் குத்தகைக்கு வழங்குதல் | 8,500.00 | 7,650.00 | 5,000.00 | 03 வருடத்திற்கு ஒரு முறை புதிய மதிப்பீட்டின் பிரகாரம் உடன்படிக்கை காலத்தை நீடித்துக் கொள்ளும் அடிப்படையில் (முன் செலுத்தும் தொகையைப் பெற்றுக்கொள்வதனால்) |
| | 05ஆம் இலக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனத்திற்கு மீளளிக்கப்படாத முன் செலுத்தும் தொகையாக 750,000.00 ரூபாவை நகர சபையில் வைப்புச் செய்தல் வேண்டும். | | | | |
| 06 | அவரிவத்த தபால் அலுவலகத்தின் கீழ் தளத்தைக் குத்தகைக்கு வழங்குதல் | 20,000.00 | 18,000.00 | 5,000.00 | 2024-09-01 - 2027-09-01 (அதாவது 2024-09-01ஆம் திகதி முதல் 03 வருட காலத்திற்கு) |
| | 06ஆம் இலக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனத்திற்கு அரசாங்கத்தின் புதிய மதிப்பீடு கிடைத்ததன் பின் அந்த அரச மதிப்பீட்டு வாடகை தொகையை அமுல்படுத்துவதற்கு உட்பட்டது. | | | | |

**பீ.ஏ.எஸ்.எஸ். சந்தருவன்,**
**நகர சபையின் செயலாளர் மற்றும்**
**சபையின் அதிகாரம் வாய்ந்த**
**கடமைகளை நிறைவேற்றும் அதிகாரி,**
**வத்தளை - மாபோல நகர சபை.**

**வத்தளை - மாபோல நகர சபையில்.**
**2024-06-13.**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### பொது நிர்வாகம், உள்நாட்டுலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
### பதுளை மாவட்ட செயலகம்

பிரிவு - 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பின்வரும் வேலைகளுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து பதுளை மாவட்ட செயலகத்தின் பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| ஒப்பந்த இல. | விபரம் | மதிப்பிடப்பட்ட சிவில் செலவு (வெட் உடன்) ரூபா மில்லியன் | கட்டிட நிர்மாணத்தில் தேவையான CIDA பதிவு | ரொக்கப்பணத்தில் செலுத்துவதாயின் மீளளிக்கப்படும் விலைமனு பிணைத் தொகை (ரூபா) | நிர்மாணக் காலம் (நாட்களின் எண்ணிக்கை) | விலைமனு ஆவணக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|---|---|
| BD/FMG/ PROC/ 2024/04 | ப/ குருத்தலவ முஸ்லிம் வித்தியாலயத்திற்கான 110'x30' கேட்போர்கூடத்தின் நிர்மாணம் | 59.47 | C4 அல்லது அதற்கு மேல் | 297,500.00 | 180 | 15,000.00 |

2. தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
3. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் மேலுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்ட கட்டிட நிர்மாணத்தில் குறைந்தபட்ச CIDA பதிவை பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.
4. விலைமனுக்களை மதிப்பீடு செய்யும்போது பின்வரும் தகைமைகள் கருத்தில்கொள்ளப்படும். இந்த ஆவணத்தின் 4ஆவது பிரிவில் உள்ள தகைமை தகவல் அட்டவணையின்படி சரியாக முறையான வகையில் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்பதோடு மதிப்பீட்டு நடைமுறையின்போது கருத்தில்கொள்ளப்படும்.
    - கடந்த ஏழு ஆண்டு காலத்தில் பொறியியலாளர் மதிப்பீட்டின் சிவில் செலவின் 80% இன் பெறுமதியுடன் இதனை ஒத்த ஒரு வேலையை பூர்த்தி செய்த அனுபவம்.
    - இந்த நிர்மாண வேலையின் சிவில் செலவை ஒத்த கடந்த ஐந்து ஆண்டுகளில் சராசரி ஆண்டு புரள்வை பேணுதல்.
    - நிதித் திறன் மற்றும் ஸ்திரத்தன்மை.
    - தற்போதைய பணியின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம்.
5. விலைமனுதாரர் 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தத்தின் கீழ் பதிவு செய்திருத்தல் வேண்டும் என்பதோடு பதிவுச் சான்றிதழை விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும். பதிவுச் சான்றிதழ் அல்லது பதிவுக்கான ஆவண உறுதி இல்லாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
6. மேலுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு விலைமனு ஆவணக் கட்டணத்தைச் செலுத்தி 2024.07.01 ஆம் திகதி தொடக்கம் 2024.07.19 ஆம் திகதி வரை வேலை நேரங்களில் பி.ப. 3.00 வரை "பதுளை மாவட்ட செயலகம், பெறுகைக் குழு, தலைவருக்கு" எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டணம் ரொக்கப்பணத்தில் இருத்தல் வேண்டும். விலைமனு ஆவணங்களை கட்டணம் இன்றி பரீட்சிக்க முடியும்.
7. விலைமனு பிணை ரொக்கப்பணத்தில் இல்லாவிட்டால் விலைமனு பிணை ஒன்றைக் கொண்டதாக விலைமனு இருத்தல் வேண்டும். விலைமனு பிணையானது மேலுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விலைமனு பிணை தொகையின் இலங்கை ரூபாவுக்கு இணையான இரட்டிப்புப் பெறுமதியில் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து பெறப்பட்ட நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்க வங்கி உத்தரவாதத்தில் இருத்தல் வேண்டும். விலைமனு பிணை 2024.12.13 ஆம் திகதி வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
8. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட நகல் ஒன்றுடனான விலைமனு ஆவணங்களை 2024.07.22 ஆம் திகதி பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்னர் தொடர்புடைய பெறுகைக் குழுவுக்கு சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு விலைமனு ஆவணங்களை "அசல்" மற்றும் "நகல்" எனக் குறிப்பிட்டு வெவ்வேறு உறைகளில் இட்டு அந்த இரண்டு உறைகளையும் ஒற்றை உறையில் இட்டு முத்திரை இட்டு அதன் இடது பக்க மேல் மூலையில், "ப/ குருத்தலவ முஸ்லிம் வித்தியாலயத்திற்கான 110'x30' கேட்போர்கூடத்தின் நிர்மாணம்" என்று குறிப்பிடுதல் வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனு ஆவணங்களை "பெறுகைக் குழு தலைவர், பதுளை மாவட்ட செயலகம்" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுதல் வேண்டும். நகலானது அசலின் ஒவ்வொரு பக்கத்தின் உறுதி செய்யப்பட்ட நிழல் பிரதியாக இருத்தல் வேண்டும்.
9. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் 055-2229629 என்ற இலக்கத்தில் மாகாண கட்டிட திணைக்களம் அல்லது 057-2222025 என்ற இலக்கத்தில் பண்டாரவளை, பிரதேச பொறியியலாளர் (கட்டிடம்) இடமிருந்து மேலதிக விபரங்களை பெறலாம்.
10. விலைமனுக்கள் 2024.11.30 ஆம் திகதி வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
11. பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் பதுளை, மாவட்ட செயலக, 5ஆவது மாடி, மாவட்ட செயலகத்தின் மாநாட்டு அறையில் 2024.07.22 ஆம் திகதி பி.ப. 3.00இற்கு விலைமனுக்கள் திறக்கப்படும்.
12. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு பதுளை, மாவட்ட செயலக, 5ஆவது மாடி, மாவட்ட செயலகத்தின் மாநாட்டு அறையில் 2024.07.15 ஆம் திகதி மு.ப. 10.00 இற்கு இடம்பெறும் என்பதோடு தொடர்ந்து தளப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதோடு திட்டத்தின் தேவைகள் தொடர்பில் தெளிவு பெறும்படி எதிர்பார்ப்புடைய விலைமனுதாரர்கள் கோரப்படுகின்றனர்.
13. கிடைக்கப்பெற்ற விலைமனுக்கள் இடையே எந்த ஒரு தகுதியுடைய ஒன்றையும் ஏற்கும் அல்லது நிராகரிக்கும் முழு உரிமையையும் பெறுகைக் குழு தக்கவைத்திருப்பதோடு இது தொடர்பில் பெறுகைக் குழுவின் முடிவு இறுதியானதாகும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**பதுளை மாவட்ட செயலகம்.**
**தொ.பே. 055 2222048**
**மின்னஞ்சல் - cacc.dist.badulla@gmail.com**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## வடமேல் மாகாண சபை
## மாகாண கல்வித் திணைக்களம்

கல்வி அமைச்சினால் நிதியிடப்பட்ட பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள திருத்தவேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மாகாணக் கல்விப் பணிப்பாளர் (வடமேல் மாகாணம்) சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

| தொ. இல. | விலைக்கோரல் குறியீட்டிலக்கம் | ஒப்பந்தத் தலைப்பு | பிரதேச பொறியியலாளர் அலுவலகம் | நிதி வளம் | தேவையான CIDA பதிவுத் தரம் (கட்டிடங்கள்) | ஒப்பந்தக் காலம் (நாட்கள்) | விலைக் கோரல் பிணை முறித் தொகை (ரூபா) (பண வைப்புகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது) | விலை மனுக்களின் செல்லுபடிக் காலம் | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் (ரூபா) | விலைக் கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | 24/E/Kuli/ MOE/ NCB/R3 | கிரி/கெக்குணேகொல்ல தே.பாடசாலையிலுள்ள தரம் 8-9 வகுப்பறைக் கட்டிட கிறில் வேலைகளின் திருத்தவேலைகள் | குளியாப்பிட்டிய | MOE | C8 அல்லது C7 மட்டும் | 70 | 22,000.00 | 2024-09-24ஆம் திகதி வரை | 1,500.00 | 2024-10-20ஆம் திகதி வரை |
| 02 | 24/E/Kuli/ MOE/ NCB/R4 | ஜே.ஆர். ஜயவர்தன ம.ம. வித்தியாலயத்தில் உள்ள உ/த ஆய்வுகூட கட்டிடத்தின் திருத்தவேலைகள் | குளியாப்பிட்டிய | MOE | C9 அல்லது C8 மட்டும் | 65 | 19,300.00 | 2024-09-10ஆம் திகதி வரை | 1,500.00 | 2024-10-10ஆம் திகதி வரை |
| 03 | 24/E/Kuli/ MOE/ NCB/R5 | கிரி/மதீனா தேசிய பாடசாலையிலுள்ள உ/த ஆய்வுகூடத்தின் திருத்தவேலைகள் | குளியாப்பிட்டிய | MOE | C8 அல்லது C7 மட்டும் | 70 | 26,000.00 | 2024-09-24ஆம் திகதி வரை | 1,500.00 | 2024-10-22ஆம் திகதி வரை |
| 04 | 24/E/Kuli/ MOE/ NCB/R6 | கிரிஉல்ல விக்கிரமசீல தேசிய பாடசாலையிலுள்ள பிரதான மண்டபத்தின் திருத்தவேலைகள் | குளியாப்பிட்டிய | MOE | C7 அல்லது C6 மட்டும் | 90 | 56,000.00 | 2024-08-10ஆம் திகதி வரை | 2,000.00 | 2024-11-05ஆம் திகதி வரை |
| 05 | 24/E/Kuru/ MOE/NCB/R7 | மலியதேவ ஆண்கள் கல்லூரியில் உள்ள நூலகக் கட்டிடத்தின் திருத்தவேலைகள் | குருநாகல் | MOE | C7 அல்லது C6 மட்டும் | 90 | 55,000.00 | 2024-08-10ஆம் திகதி வரை | 2,000.00 | 2024-11-05ஆம் திகதி வரை |
| 06 | 24/E/Kuru/ MOE/NCB/R8 | அலவ்வ ராகுல பாடசாலையில் உள்ள விஞ்ஞான ஆய்வுகூடத்தை புதுப்பித்தல் | குருநாகல் | MOE | C7 அல்லது C6 மட்டும் | 90 | 65,000.00 | 2024-08-10ஆம் திகதி வரை | 2,000.00 | 2024-11-05ஆம் திகதி வரை |
| 07 | 24/E/Kuru/ MOE/NCB/R9 | பராக்கிரமபாகு தேசிய பாடசாலையில் உள்ள 10-11 வகுப்பறைக் கட்டிடத்தை புதுப்பித்தல் (கூரை வேலைகள் மட்டும்) | குருநாகல் | MOE | C7 அல்லது C6 மட்டும் | 90 | 88,000.00 | 2024-08-10ஆம் திகதி வரை | 2,000.00 | 2024-11-05ஆம் திகதி வரை |
| 08 | 24/E/Wari/ MOE/NCB/R10 | நிக்க/மகசென் தேசிய பாடசாலையிலுள்ள சகல மலசலகூடங்களின் திருத்தவேலைகள் | வாரியபொல | MOE | C8 அல்லது C7 மட்டும் | 75 | 28,000.00 | 2024-09-24ஆம் திகதி வரை | 1,500.00 | 2024-10-22ஆம் திகதி வரை |
| 09 | 24/E/Wari/ MOE/NCB/R11 | கொபெய்கனே ஸ்ரீ பராக்கிரம ம.ம. வித்தியாலயத்தில் உள்ள நூ லகக் கட்டிடத்தின் திருத்தவேலைகள் | வாரியபொல | MOE | C8 அல்லது C7 மட்டும் | 75 | 38,100.00 | 2024-09-24ஆம் திகதி வரை | 1,500.00 | 2024-10-22ஆம் திகதி வரை |
| 10 | 24/E/Wen/ MOE/ NCB/R13 | வென்னப்புவ ஜோசப் வாஸ் கல்லூரி, சாகேரியஸ் மண்டபத்தின் திருத்தவேலைகள் | வென்னப்புவ | MOE | C9 அல்லது C8 மட்டும் | 65 | 13,000.00 | 2024-09-10ஆம் திகதி வரை | 1,500.00 | 2024-10-08ஆம் திகதி வரை |
| 11 | 24/E/Kuli/ MOE/ NCB/R14 | மதீனா தேசிய பாடசாலையில் உள்ள ஆரம்பப் பிரிவுக் கட்டிடங்களின் திருத்தவேலைகள் (1ஆம் தளம்) | குளியாப்பிட்டிய | MOE | C8 அல்லது C7 மட்டும் | 90 | 35,000.00 | 2024-09-24ஆம் திகதி வரை | 1,500.00 | 2024-10-22ஆம் திகதி வரை |
| 12 | 24/E/Kuli/ MOE/ NCB/R15 | நாக்கவத்த தேசிய பாடசாலையிலுள்ள 100x20 வகுப்பறைக் கட்டிட கூரை திருத்தவேலைகள் மற்றும் இரண்டு மாடிக் கட்டிடத்தின் திருத்தவேலைகள் | குளியாப்பிட்டிய | MOE | C7 அல்லது C6 மட்டும் | 90 | 82,000.00 | 2024-10-08ஆம் திகதி வரை | 3,000.00 | 2024-11-05ஆம் திகதி வரை |
| 13 | 24/E/Kuli/ MOE/ NCB/R16 | பன்னல தேசிய பாடசாலையில் உள்ள வகுப்பறைக் கட்டிடங்களின் கட்டமைப்புத் திருத்தவேலைகள் | குளியாப்பிட்டிய | MOE | C7 அல்லது C6 மட்டும் | 90 | 71,800.00 | 2024-10-08ஆம் திகதி வரை | 3,000.00 | 2024-11-05ஆம் திகதி வரை |
| 14 | 24/E/Kuli/ MOE/ NCB/R17 | கிரிஉல்ல விக்கிரமசீல தேசிய பாடசாலையில் உள்ள ஆரம்பப் பிரிவுக் கட்டிடத்தின் திருத்தவேலைகள் | குளியாப்பிட்டிய | MOE | C8 அல்லது C7 மட்டும் | 60 | 30,300.00 | 2024-09-24ஆம் திகதி வரை | 1,500.00 | 2024-10-22ஆம் திகதி வரை |

1. ஒப்பந்தத்தைக் கையளிக்கப்பெறுவதற்கான தகுதியைப் பெறுவதற்கு, சித்திகரமான விலைமனுதாரர் தகுதிநீக்கம் செய்யப்பட்ட பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) தேவையான பதிவுத் தரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
2. பின்வரும் விலைக்கோரல் குறியீடுகளுக்காக விலைமனுதாரர் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்திருத்தல் வேண்டும் என்பதுடன் பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
   24/E/Kuli/MOE/NCB/R6, 24/E/Kuru/MOE/NCB/R7, 24/E/Kuru/MOE/NCB/R8,
   24/E/Kuru/MOE/NCB/R9, 24/E/Kuli/MOE/NCB/R15, 24/E/Kuli/MOE/NCB/R16
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தொழில்நுட்பத் தகவல்களை குருநாகல், மாகாண சபை அலுவலகக் கட்டிடத்தொகுதி, 2ஆம் மாடி, பொறியியல் திணைக்களம், மாகாண பொறியியல் பணிப்பாளர் (வமேமா) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி/தொலைநகல்: 037-2222700.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024-07-22ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.30 மணி வரையில் குருநாகல், கண்டி வீதி, மாகாணக் கல்வித் திணைக்களம், பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
5. நகல்பிரதிகளுடனான விலைமனுக்களை 2024-07-23ஆம் திகதி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது குருநாகல், கண்டி வீதி, மாகாணக் கல்வித் திணைக்களம் (வமேமா), பிரதான கணக்காளர் அலுவலகத்தில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள ''கேள்விப் பெட்டி''யில் உள்ளிடல் வேண்டும். விலைமனுக்கள் 2024-07-23ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முடிவுறுத்தப்படும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். மேற்கூறிய முகவரியில் 2024-07-23ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின் சமுகம்தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் கலந்துகொள்வதற்கு தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் மேற்கூறிய முகவரியில் உடன் திறக்கப்படும்.
6. தேசிய போட்டி கேள்வி கோரல் முறையின் கீழ் இடம்பெறும். இப்பெறுகையின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் 50 மில்லியன் ரூபாவிற்கு குறைவாக இருப்பதனால் 04/2016 (iii)ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளதற்கமைய பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை என்பன பிரயோகிக்கப்படும்.
7. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 8ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் உள்ள மாகாணக் கல்வித் திணைக்களத்தில் 2024-07-08ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இடம்பெறும்.
8. மேற்குறிப்பிடப்பட்ட முகவரியானது:

**J.A.M.P. ஜயதிலக்க,**
**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மாகாணக் கல்வித் திணைக்களம் (வமேமா),**
**கண்டி வீதி,**
**குருநாகல்.**

**தொலைபேசி: 037-2223211 / 037-2222422**
**தொலைநகல் இல. 037-2222422 / 037-2222545**
**இணையதள முகவரி: www.nwpedu.lk**
**திகதி: 2024-07-02.**

SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383
E-mail - classified@lakehouse.lk

# கேள்விப் பத்திர அறிவித்தல்
# மக்கள் வங்கி

## சுத்திகரிப்பு சேவைகளுக்கான கேள்விப்பத்திரம் கோரல்

மக்கள் வங்கியின் திருகோணமலை பிரதேசத்தைச் சேர்ந்த திருகோணமலை பிரதான, திருகோணமலை நகர, கின்னியா, மூதூர், சேருநுவர, கந்தளாய், புல்மோட்டை ஆகிய கிளைகளிலும், பாலையூற்று, உப்புவெளி, மத்திய வீதி, 2வது நகரக்கிளை, கச்சகொடிதீவு, தோப்பூர், ஈச்சலம்பற்று, முள்ளிப்பொத்ததானை, குச்சவெளி, கோமரங்கடவல ஆகிய சேவை நிலையங்களிலும் திருகோணமலை பிராந்திய தலைமைக் காரியாலயத்திலும் சுத்திகரிப்புச் சேவைகளுக்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட சேவை வழங்குநர்களிடம் முத்திரை இடப்பட்ட விலைகள் கோரப்படுகின்றன. மீளச் செலுத்தப்படாத 2000 ரூபா கேள்விப்பத்திர எழுத்தாவணைக் கட்டணம் செலுத்துவதன் மூலம் 2024 ஜூலை மாதம் 10ம் திகதி புதன் கிழமை 9.00 - 16.00 மணி வரை கேள்விப்பத்திர ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். குறிப்பிட்ட கிளைகள் மற்றும் சேவை நிலையங்களின் முகாமையாளர்களோடு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு நேரத்தை ஒதுக்கி அந்தந்த கட்டட வளாகங்களைப் பரிசோதிக்குமாறு கோருவோர் கேட்கப்படுகின்றனர். எல்லா முத்திரையிடப்பட்ட விலைக்கோரல்களும் 2024 ஜூலை 24ம் திகதி புதன்கிழமை 14.00 மணி அல்லது அதற்கு முன்பு பின்வருபவரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அன்றைய தினமே கோருவோர் முன்னிலையில் 15.00 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்.

**பிராந்திய முகாமையாளர்,**
**பிராந்திய தலைமைக் காரியாலயம்,**
**இல. 128, கண்டி வீதி,**
**திருகோணமலை.**
**தொலைபேசி இல. 026-2222815, 026-2224037**
**தொலைநகல் இல. 026 2220395**
**மின்னஞ்சல்: trirho@peoplesbank.lk**

PEOPLE'S BANK
Pride of the Nation

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## காலநிலை மாற்றத்தினை தாக்குப்பிடிக்கும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ செயற்றிட்டம்

## நீர்ப்பாசன அமைச்சு

(தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல்)

**IFB No.: CRIWMP/NCB/VIS/2024 பொதிகள் 03 முதல் 13 (பதினொரு) வரை மட்டும்**

**2024 ஜூன் 12ஆம் திகதிய தினமின, தினகரன் மற்றும் டெய்லி நியூஸ் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டது.**

வவுனியா மாவட்டத்திலுள்ள கப்பக்கச்சிகுளம் ஆற்றுப்படுக்கை, அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள மஹகிரிந்தேகம ஆற்றுப்படுக்கையிலுள்ள கிராமிய நீர்ப்பாசன முறைமைகளின் (VIS) புனரமைப்பு வேலைகளுக்காக விலைமனுகோரல்

**தவிர்க்க முடியாத காரணத்தினால் மேற்கூறிய பதினொரு (11) பொதிகளுக்கான விலைக்கோரல் செயற்பாடுகள் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இரத்துச் செய்யப்படுகின்றன** என இத்தால் தயவுடன் அறிவிக்கப்படுகின்றது. அசௌகரியத்திற்கு ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவிக்கும் அதேவேளை, ஏற்கனவே விலைமனுக்களைக் கொள்வனவு செய்த அனைத்து விலைமனுதாரர்களும் விலைமனுக்களைக் கொள்வனவு செய்வதற்காக செலுத்திய பணத்தை மீளப்பெற்றுக்கொள்வதற்காக எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றுடன் மேற்கூறிய சகல விலைமனு ஆவணங்கள் / வரைபடங்களை CRIWMP அலுவலகத்திற்கு திருப்பியனுப்புமாறு தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

எவ்வாறாயினும், புத்தளம் மாவட்டம், ஆனமடுவ பிரதேச செயலாளர் பிரிவு, குந்தனியகம ஆற்றுப்படுக்கை (09 பொதிகள்) கிராமிய நீர்ப்பாசன முறைமைகளின் (VIS) புனரமைப்பு வேலைகளுக்காக விலைமனுகோரல் செயற்பாடுகள் எவ்வித மாற்றமுமின்றி தொடரும் எனவும் விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் 2024 ஜூலை 03ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு விலைமனுக்கள் முடிவுறுத்தப்படுதல் / திறக்கப்படுதல் என்பன இடம்பெறும் என்பதை தயவு செய்து கவனத்திற் கொள்ளவும்.

**தலைவரின் சார்பாக,**
**செயற்றிட்ட பெறுகைக்குழு,**
**செயற்றிட்ட பணிப்பாளர்,**
**காலநிலை மாற்றத்தினை தாக்குப்பிடிக்கும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ செயற்றிட்டம்,**
**நீர்ப்பாசன அமைச்சு**
**12ஆம் மாடி, இல. 500, T.B. ஜயா மாவத்தை,**
**கொழும்பு-10**

## களுத்துறை மாவட்ட செயலகம்

# கேள்விக்கோரல்களுக்கான அழைத்தல்

## பாலிந்த நுவர நகரில் குளியலறைகளுடன் உத்தேசிக்கப்பட்ட பொது நீச்சல் தடாகம், வெளியக வேலி மற்றும் அருகாமையிலுள்ள அலுவலக கட்டிடம் ஆகியவற்றை வடிவமைத்தல், நிர்மாணித்தல் மற்றும் செயற்படவைத்தல்

1. **''இலங்கை, பாலிந்தநுவர நகரில் குளியலறைகளுடன் உத்தேசிக்கப்பட்ட பொது நீச்சல் தடாகம், வெளியக வேலி மற்றும் அருகாமையிலுள்ள அலுவலக கட்டிடம் ஆகியவற்றை வடிவமைத்தல், நிர்மாணித்தல் மற்றும் செயற்பட வைத்தல்''** ஆகியவற்றிற்காக முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விக்கோரல்களை பதினைந்து மில்லியன் இலங்கை ரூபா ஒதுக்கப்பட்ட மொத்த ஆகுசெலவில் களுத்துறை மாவட்ட செயலகத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார். கேள்விக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான கேள்விக்கோரல் நடைமுறை **தனிக்கட்ட, இரு உறைகள் மூலம் நடத்தப்படும்.**
2. **2024.07.23 ஆம் திகதியன்று வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும்** மீளளிக்கப்படாத கட்டணமாக 7000 ரூபாவை களுத்துறை, மாவட்ட செயலக களுத்துறை இலங்கை வங்கிக்கு செலுத்திய பின்னர், களுத்துறை, மாவட்ட செயலக அலுவலக கணக்கிடல் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களிலேயே கேள்விக் கோரல்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விண்ணப்பத்துடன் வங்கியின் பணம் வைப்பிலிடப்படும் பற்றுச்சீட்டின் மூலப்பிரதியானது முன்வைக்கப்படல் வேண்டும்.
3. தகுதியுள்ள கேள்விதாரர்கள் (தனிநபர்கள், கம்பனி அல்லது கூட்டுமுயற்சி) பின்வரும் தகைமை தேவைப்பாட்டிற்கு இசைவாக செயற்படுவதுடன் தகுதி நீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்கப்படாதவர்களாகவுமிருத்தல் வேண்டும்.
   ICTAD (CIDA) பதிவு
   நிபுணத்துவமுள்ள நிர்மாண ஒப்பந்தக்காரர்கள் (எஸ்பி-சி) எஸ்பி5 அல்லது மேற்பட்டது
   அல்லது கட்டிட நிர்மாணம் சி-5 அல்லது சி-6
4. களுத்துறை, மாவட்ட செயலக, மாவட்ட பொறியியல் பிரிவிலிருந்து மேலதிக தகவலை நீங்கள் பெற்றுக் கொள்ளலாம் (034-2236288)
5. 2024.07.02 ஆம் திகதியிலிருந்து 2024.07.22 ஆம் திகதியன்று வரையும் எந்தவொரு வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் களுத்துறை, மாவட்ட செயலக, கணக்கிடல் பிரிவில் கேள்விக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.
6. அனைத்து கேள்விக்கோரல்களும் 150,000 இ.ரூ. (ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் இ.ரூ.) பெறுமதியான பிணைவைப்புடன் இருத்தல் வேண்டுமென்பதுடன் பிணைவைப்பானது கேள்விக்கோரல்களை திறக்கும் திகதியிலிருந்து 120 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
7. முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விக்கோரல்கள் இரு பிரதிகளில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மாவட்ட செயலகம், களுத்துறை என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும்.
8. நிர்மாணக் காலப்பகுதியானது 120 நாட்காட்டி நாட்களாகும்.
9. கேள்விக்கோரல்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி திகதியானது 2024.07.23 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு உள்ளூர் நேரம் (+5.30 GMT) என்பதுடன் அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும்.
10. கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் சட்டபூர்வ அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் கேள்விக்கோரல்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
11. 2024.07.10 ஆம் திகதியன்று மு.ப. 11.30 மணிக்கு களுத்துறை, மாவட்ட செயலக, பொறியியல் பிரிவில் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.

**G.M. Janaka K. Gunawardena,**
**தலைவர், பெறுகைக் குழு,**
**மாவட்ட செயலாளர்,**
**மாவட்ட செயலகம்,**
**களுத்துறை.**

# பாரிஸ் ஒலிம்பிக் செல்ல யுபுன் வைல்ட் கார்ட் தகுதிக்கு முயற்சி




தியகம, மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டு அரங்கில் நடைபெற்ற இலங்கை மெய்வல்லுனர் போட்டியின் விசேட தேர்வுப் போட்டியில் இருந்து வெளியேறிய இலங்கை குறுந்தூர வீரர் யுபுன் அபேகோன் பாரிஸ் ஒலிம்பிக் போட்டிக்கு நேரடி தகுதியை பெறும் வாய்ப்பை இழந்துள்ளார்.

எதிர்வரும் ஜூலை 26 ஆம் திகதி ஆரம்பமாகும் ஒலிம்பிக் போட்டிக்கான தகுதியை நிரூபிப்பதற்கான காலக்கெடு நேற்றுடன் (1) நிறைவடைந்தது. எனினும் தெற்காசியாவின் அதிவேக வீரராக உள்ள யுபுன் இந்த திகுதிக் காலத்தை நிரூபிக்கத் தவறியுள்ளார்.

அவர் ஒலிம்பிக்கில் நேரடித் தகுதி பெறுவதற்கு உலகின் பல நாடுகளிலும் போட்டிகளில் பங்கேற்ற நிலையில் கடைசி முயற்சியாக இலங்கை திரும்பி 102 ஆவது சிரேஷ்ட தேசிய சம்பியன்சிப் போட்டியில் பங்கேற்றார். எனினும் கடந்த வாரம் நடைபெற்ற இந்தப் போட்டியின்போது யுபுனுக்கு காலில் உபாதை ஏற்பட்டது.

இதனையடுத்து ஸ்கேன் சோதனை செய்த அவர் அதன் முடிவு வரும் வரையும் எந்தப் போட்டியிலும் பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக இலங்கை மெய்வல்லுனர் சம்மேளனத்தை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

இதனையடுத்தே யுபுன் பாரிஸ் ஒலிம்பிக்கில் பங்கேற்பதற்கான நேரடித் தகுதியை இழந்துள்ளார். எனினும் எதிர்வரும் ஜூலை 7 ஆம் திகதிக்கு முன்னர் அவரால் ஏதேனும் சர்வதேச போட்டியில் 100 மீற்றர் தூரத்தை 10.44 விநாடிகளுக்குள் பூர்த்தி செய்ய முடியுமாக இருந்தால் வைல்ட் கார்ட் முறையில் ஒலிம்பிக் தகுதி பெற வாய்ப்பு உள்ளது.

100 மீற்றர் ஓட்டப்போட்டியில் ஜூலை 7 ஆம் திகதிக்குள் சிறந்த திறமையை காண்பிப்பவர்களுக்கே வைல்ட் கார்ட் அனுமதி வழங்கப்படவுள்ளது.

எவ்வாறாயினும் இம்முறை ஒலிம்பிக் போட்டியின் தடகளப் போட்டியில் இலங்கையின் எந்த வீர, வீராங்கனையும் நேரடித் தகுதி பெறாத நிலையில் யுபுனுடன் டில்ஹானி லேகம்கே, ரமேஷ் தரங்க (ஆடவர் மற்றும் மகளிர் ஈட்டி எறிதல்) மற்றும் தருஷி கருணாரத்ன (பெண்களுக்கான 800 மீற்றர்) ஆகியோரும் வைல்ட் கார்ட் தகுதியை பெற எதிர்பார்த்துள்ளனர்.

நேரடி தகுதி பெறாத அல்லது புள்ளி முறையில் தகுதி பெறத் தவறினால், ஒவ்வொரு நாட்டுக்கும் சர்வதேச தடகள சம்மேளனம் இரண்டு வைல்ட் கார்ட் வாய்ப்புகளை மாத்திரம் வழங்கும்.

இதில் ஆண்களுக்கான 100 மீற்றர் மற்றும் பெண்களுக்கான 800 மீற்றர் போட்டிகளுக்கே இலங்கை மெய்வல்லுனர் சம்மேளனம் சர்வதேச தடகள சம்மேளனத்திடம் வைல்ட் கார்ட் தகுதிக்கு கோரிக்கை விடுத்திருந்தது.

# ஆஸியில் மாணவர் விசா கட்டணம் இரு மடங்கானது

அவுஸ்திரேலியா மாணவர் விசா கட்டணத்தை இரண்டு மடங்காக உயர்த்தியுள்ளது.

இதுவரை மாணவர் விசா கட்டணம் 710 அவுஸ்திரேலிய டொலர் இருந்த நிலையில் நேற்று முதல் அது 1,600 அவுஸ்திரேலிய டொலராக உயர்த்தப்பட்டுள்ளது.



சாதனையளவாக உயர்ந்துவரும் குடியேறிகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த அவுஸ்திரேலிய அரசாங்கம் எடுத்துவரும் தொடர் நடவடிக்கைகளில் ஒன்றாக இது உள்ளது.

'சர்வதேச கல்விமுறையின் கௌரவத்தைக் கட்டிக்காக்கவும், நியாயமான, சிறிய அளவிலான குடியேற்றத்தை அனுமதிக்கவும் புது மாற்றம் உதவும்' என்று உள்துறை அமைச்சர் கிலேர் ஓ நீல் கூறினார்.

அவுஸ்ரேலியாவில் குடியேறிகளின் எண்ணிக்கை 60 வீதம் உயர்ந்திருப்பதாக கடந்த மார்ச் மாதம் வெளியிடப்பட்ட உத்தியோகபூர் புள்ளிவிபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவுக்குச் செல்ல மாணவர் விசா 185 டொலராகும். அதோடு ஒப்பிடுகையில் இப்போது அவுஸ்திரேலியா விதித்திருக்கும் மாணவர் விசா கட்டணம் கிட்டத்தட்ட 6 மடங்கு அதிகமாகும்.

## சர்வதேச செய்திகள்

# பிரான்ஸ் பொதுத் தேர்தல்: தீவிர வலதுசாரிகள் வெற்றி




பிரான்ஸின் திடீர் பொதுத் தேர்தலின் ஆரம்ப சுற்றில் தீவிர வலதுசாரி தேசிய பேரணி கட்சி வெற்றி பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் நடந்த தேர்தல் முடிவுகளின்படி மரி லே பென்னின் தேசிய பேரணி கட்சி 34 வீத வாக்குகளை வென்றிருப்பதோடு வலதுசாரி புதிய மக்கள் முன்னணி கூட்டணிக் கட்சி 29 வீத வாக்குகளையும் ஜனாதிபதி எமானுவேல் மக்ரோனின் மையவாத கூட்டணி 20.5 வீத வாக்குகளையும் வென்றிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரான்ஸ் பாராளுமன்றத் தேர்தலில் தீவிர வலதுசாரிகள் முதல் சுற்றில் இதற்கு முன்னர் வென்றதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. 577 இடங்களைக் கொண்ட பிரான்ஸ் பாராளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையாக 289 இடங்களை வெல்ல வேண்டி உள்ளது.

இரண்டாவது சுற்றுத் தேர்தல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (7) நடைபெறவுள்ளது.

# சீன நடவடிக்கைக்கு பிலிப்பைன்ஸ் எதிர்ப்பு



தென் சீனக் கடற்பிராந்தியத்தில் எமது கடற்படையினருக்கு எதிராக சீனா மேற்கொண்ட நடவடிக்கைக்கு கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளோம் என்று பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி பேர்டினன்ட் மார்க்கோஸ் ஜூனியர் தெரிவித்துள்ளார்.

நாங்கள் நூற்றுக்கும் மேற்பட்டுள்ள எதிர்ப்புக்களைப் பதிவு செயதுள்ளோம். அதனை மேலும் அதிகரிக்க வேண்டும் என்றும் செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றும் போது அவர் குறிப்பிட்டுள்ளார்.

தென் சீனக் கடற்பிராந்தியத்தில் விநியோகப் பணியில் ஈடுபட்டிருந்த பிலிப்பைன்ஸ் கடற்படையினருக்கு சீன கரையோரக் காவல் படையினர் அண்மையில் இடையூறுகளை ஏற்படுத்தினர். அதனால் பிலிப்பைன்ஸ் மாலுமியொருவர் கடும் காயங்களுக்கு உள்ளானார். இது தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.



# வடக்கு, தெற்கு காசாவில் இஸ்ரேலிய டாங்கிகள் முன்னேற்றம்: பதிலுக்கு ஹமாஸ் ரொக்கெட் மழை

## காசாவில் உயிரிழப்பு 37,900 ஆக அதிகரிப்பு

இஸ்ரேலியப் படை வடக்கு காசாவின் ஷெஜையா பகுதியில் மேலும் முன்னேறியதோடு தெற்கில் ரபா நகரின் மத்திய மற்றும் மேற்கு பக்கமாக ஆழ ஊடுருவி வரும் நிலையில் காசாவில் இடம்பெறும் கடும் தாக்குதல்களில் மேலும் பல பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டு வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டிருப்பதாக குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நான்கு நாட்களுக்கு முன்னர் ஷெஜையாவை நோக்கி நகர்ந்த இஸ்ரேலிய டாங்கிகள், பல வீடுகளையும் இலக்கு வைத்து செல் குண்டுகளை வீசிய நிலையில் அங்குள்ள குடும்பகள் பலதும் நகரை விட்டு வெளியேற முடியாமல் சிக்கி இருப்பதாக குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பேசிய இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, ஹமாஸுக்கு எதிரான போரில் வெற்றி பெறுவதைத் தவிர மாற்று வழியில்லை என்று மீண்டும் ஒருமுறை வலியுறுத்தினார்.

'அனைத்து பணயக்கைதிகளையும் மீட்பது, காசா தொடர்ந்தும் இஸ்ரேலுக்கு அச்சுறுத்தலாகாது என்பதை உறுதி செய்வது மற்றும் தெற்கு மற்றும் வடக்கில் உள்ள எமது குடிமக்கள் பாதுகாப்பாக வீடு திரும்புவதை உறுதி செய்வது ஆகிய எமது நோக்கங்கள் அனைத்தையும் அடையும் வரை போராடுவதற்கு நாம் உறுதி பூண்டுள்ளோம்' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேல் காசா மீதான தாக்குதல்களில் அவதானம் செலுத்தி வரும் அதேநேரம், இஸ்ரேல் ஆக்கிரமிப்பு மேற்குக் கரையின் துல்கர்ம் நகருக்கு அருகில் இஸ்ரேல் நடத்திய தாக்குதல் ஒன்றில் ஒருவர் கொல்லப்பட்டு மேலும் ஐவர் காயமடைந்ததாக பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதில் தமது அமைப்பைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டதாக இஸ்லாமிய ஜிஹாத் அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

காசா தொடர்பில் நெதன்யாகு கருத்து வெளியிட்டு சில மணி நேரங்களிலேயே ஹமாஸ் ஆயுதப் பிரிவு வெளியிட்ட வீடியோ ஒன்றில், போராட்டத்திற்காக ஆயுதங்கள் தயாரிக்கும் காட்சிகள் காண்பிக்கப்பட்டுள்ளன.

இதில் போராளிகள் டாங்கி எதிர்ப்பு ரொக்கெட் குண்டுகளை தயாரிப்பதும் பின்னணியில் பெரிய தொலைக்காட்சி திரை ஒன்றில் அண்மைய செய்திகள் ஒளிபரப்பப்பட்டு வருவதும் தெரிகிறது. இது இந்த வீடியோ அண்மையில் எடுக்கப்பட்டது என்பதை காண்பிக்கிறது.

'எமது தயார் நிலை தொடரும்' என்று அந்த குறுகிய வீடியோ முடிவில் எழுதப்பட்ட காட்சி வெளியாகியுள்ளது.

ஷெஜையாவில் முன்னெடுக்கப்படும் படை நடவடிக்கையில் பல பலஸ்தீன ஆயுததாரிகளும் கடந்த சில நாட்களில் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டது.

எனினும் வடக்கு காசாவில் மேலும் இரு இஸ்ரேலிய வீரர்கள் கொல்லப்படதாக இஸ்ரேல் இராணுவம் கடந்த சனிக்கிழமை (29) குறிப்பிட்டது.

ஷெஜையா மற்றும் ரபாவில் இஸ்ரேலிய படைக்கு எதிராக ஹமாஸ் ஆயுதப் பிரிவு மற்றும் அதன் கூட்டணியான இஸ்லாமிய ஜிஹாத் போராளிகள் கடுமையாக சண்டையிட்டு வருவதோடு அந்தப் போராளிகள் டாங்கி எதிர்ப்பு ரொக்கெட்டுகள் மற்றும் மோட்டார் குண்டுகளை பயன்படுத்தி தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

எட்டு மாதங்களுக்கு மேலாக நீடித்து வரும் காசா போரில் இஸ்ரேலியப் படை அங்கு தொடர்ந்து கடுமையான எதிர்ப்பை சந்தித்து வருவதோடு முன்னர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாக இஸ்ரேல் கூறிய பகுதிகளிலும் மீண்டும் போர் வெடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் தெற்கு காசாவில் கான் யூனிஸ் நகரில் இருந்து நேற்று தெற்கு இஸ்ரேலை நோக்கி குறைந்தது 20 ரொக்கெட் குண்டுகள் வீசப்பட்டுள்ளன. இதில் சில ரொக்கெட்டுகள் இடைமறிக்கப்பட்டதாகவும் சிலது தாக்கியதாகவும் எவருக்கும் காயங்களோ அல்லது சேதங்களோ ஏற்படவில்லை என்றும் இஸ்ரேல் இராணும் கூறியுள்ளது.

கடந்த சில மாதங்களில் காசாவில் இருந்து இஸ்ரேலை நோக்கி நடத்தப்பட்ட மிகப்பெரிய தாக்குதல் இது என்று இஸ்ரேல் ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.



காசாவில் இஸ்ரேல் இடைவிடாது நடத்தி வரும் தாக்குதல்களில் கடந்த 24 மணி நேரத்தில் குறைந்தது 23 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டிருப்பதாக காசா சுகாதார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி காசாவில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 37,900 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 87,060 பேர் காயமடைந்துள்ளனர். அழிக்கப்பட்டிருக்கும் கட்டடங்களின் இடிபாடுகளில் கணிசமானவர்கள் சிக்கி இருப்பதாக அஞ்சப்படும் நிலையில் கூறப்படும் எண்ணிக்கையை விடவும் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை அதிகம் என்று நம்பப்படுகிறது.

**55 பேர் விடுதலை**

இந்நிலையில் காசாவின் மிகப் பெரிய மருத்துவமனையான அல் ஷிபா மருத்துவமனையின் தலைவர் முஹமது அபூ சல்மியா மற்றும் 55 பலஸ்தீனர்களை இஸ்ரேல் நேற்று விடுவித்தது. இஸ்ரேலிய சிறைகள் நிரம்பி இருக்கும் நிலையிலேயே இவர்கள் விடுவிக்கப்பட்டிருப்பதாக இஸ்ரேலிய அரச வானொலிக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

போர் வெடித்தது தொடக்கம் இஸ்ரேலியப் படை காசாவில் ஆயிரக்கணக்கான பலஸ்தீனர்களை கைது செய்ததோடு அதன் சரியான எண்ணிக்கை உறுதி செய்யப்படவில்லை.

இதில் மருத்துவர் முஹமது அபூ சல்மியா கடந்த நவம்பர் மாதமே இஸ்ரேலியப் படையால் கைது செய்யப்பட்டார். இஸ்ரேல் அடுத்தடுத்து நடத்திய சுற்றிவளைப்புகள் காரணமாக அல் ஷிபா மருத்துவமனை தற்போது சின்னபின்னமாகியுள்ளது.

தாம் மற்றும் கைது செய்யப்பட்ட மற்றவர்கள் கடுமையான சித்திரவதைக்கு முகம்கொடுத்ததாகவும் மோசமான நிலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் சல்மியா தெரிவித்தார்.

'எங்கள் கைதிகள் சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் சகலவிதமான சித்திரவதைகளுக்கும் ஆளாகியுள்ளனர். கிட்டத்தட்ட நாளாந்தம் சித்திரவதைகளுக்கு முகம்கொடுக்க வேண்டி இருந்தது. சிறைக் கூடுகள் உடைக்கப்பட்டு கைதிகள் தாக்கப்படுகிறார்கள்' என்று விடுதலை பெற்று வந்த சல்மியா ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

சிறைக் காவலர்கள் தமது விரலை உடைத்ததாகவும் தடிகள் மற்றும் நாய்களை பயன்படுத்தி செய்த தாக்குதல்களால் தமது தலையில் காயம் ஏற்பட்டதாகவும் அவர் கூறினார்.

சல்மியாவும் விடுவிக்கப்பட்ட மற்ற கைதிகளும் கான் யூனிஸுக்கு கிழக்கே இஸ்ரேலில் இருந்து மீண்டும் காசாவிற்குள் நுழைந்ததாக மருத்துவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஏ.எப்.பி. செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. இவர்கள் ஐவர் அக்சா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதோடு மற்றவர்கள் கான்யூனிஸில் உள்ள மருத்தவமனைகளுக்கு அனுப்பப்பட்டதாக அது கூறியது.

**சுகாதார அச்சுறுத்தல்**

கடந்த பல மாதங்களாக போர் நிறுத்தப் பேச்சுவார்த்தைகள் விட்டு விட்டு இடம்பெற்றபோதும் எந்த முன்னேற்றத்தையும் காண தவறியுள்ளன. அமெரிக்காவின் ஆதரவுடன் அரபு மத்தியஸ்தர்கள் உடன்பாடு ஒன்றை எட்ட முயற்சித்து வருகின்றபோதும் போரை முடிவுக்குக் கொண்டுவர இஸ்ரேலியப் படை காசாவில் இருந்து முழுமையாக வாபஸ் பெற வேண்டும் என ஹமாஸ் உறுதியாக உள்ளது. மறுபுறம் தற்காலிக போர் நிறுத்தம் ஒன்றை மாத்திரமே ஏற்பதாக கூறிவரும் இஸ்ரேல், 2007 தொடக்கம் காசாவில் ஆட்சியில் உள்ள ஹமாஸை முழுமையாக ஒழிக்கப்போவதாக சூளுரைத்து வருகிறது.

2.4 மில்லியன் மக்கள் வசிக்கும் முற்றுகையில் உள்ள காசாவில் மோசமான மனிதாபிமான நெருக்கடி மற்றும் பட்டினி அச்சுறுத்தல் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் நிவாரண அமைப்புகள் தொடர்ந்து எச்சரித்து வருகின்றன.

கடந்த மே ஆரம்பத்தில் காசாவின் தென் முனை நகரான ரபாவில் இஸ்ரேல் தரைவழி நடவடிக்கையை ஆரம்பித்ததை அடுத்து காசாவுக்கான உதவிகள் வரும் எகிப்துடனான ரபா எல்லைக்கடவை மூடப்பட்டுள்ளது. தவிர காசாவுக்கு உதவி விநியோகத்திற்காக காசா துறைமுகத்தில் அமெரிக்கா அமைத்த தற்காலிக துறைமுகமும் கடல் கொந்தளிப்புக் காரணமாக அகற்றப்பட்டுள்ளது.

இந்தப் போர் இஸ்ரேலிய வடக்கு எல்லையில் லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்புடனான போர் பதற்றத்தையும் அதிகரிக்கச் செய்துள்ளது. இங்கு இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா போராளிகள் இடையே நாளாந்தம் பரஸ்பரம் சண்டை நீடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

காசாவின் டெயிர் அல் பலாஹ்வில் உள்ள தற்காலிக முகாம் ஒன்றில் தங்கியுள்ள சமி ஹமித், 'கடுமையான வெப்பம் மற்றும் போதிய சுத்தமான நீர் இல்லாத நிலையில் குறிப்பாக சிறுவர்களிடையே தோல் தொற்றுகள் அதிகரித்திருப்பதாக' தெரிவித்துள்ளார்.

'தோல் தொற்று சம்பவங்கள் குறிப்பாக சிரங்கு மற்றும் சின்னம்மை பாதிப்புகள் அதிகரித்திருப்பதோடு, கூடாரங்களுக்கு அருகில் சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் ஓடுவது ஈரல் அழற்சி பாதிப்புக்குக் காரணமாக இருக்கக் கூடும்' என்று ஹமீத் கூறினார்.

கூடாரத்தில் சுத்தமான நீர் அல்லது அடிப்படை துப்புரவு பொருட்கள் இல்லை என்று காசா நகரில் இருந்து இடம்பெயர்ந்து வந்த வபா எல்வான் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜூலை மாதம் 2ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.